# பெரியார் தொலைநிலைக் கல்வி நிறுவனம்
# (PRIDE)

## பெரியார் பல்கலைக்கழகம்
**சேலம் – 636 011.**

**இளங்கலை ஜோதிடவியல்**

**இரண்டாமாண்டு**

**தாள் – 6 : ஜாதக அலங்காரம்**

புத்தகம் எழுதியவர்

**வி.தனசேகர், BA, MA, Msc**

**Astrology**

சங்ககிரி.

**இளங்கலை ஜோதிடவியல்**

**இரண்டாமாண்டு**

**தாள் – 6 : ஜாதக அலங்காரம்**

**கூறு – 1**

**பாவகப்படலம்**

1. இலக்ன, தன, சகோதர பாவகம்
2. மாதுரு, புத்திர, சத்துரு பாவகம்
3. களத்திர, ஆயுள், பிதுர்பாவகம்
4. கர்ம, இலாப, விரய பாவகம்

**கூறு – 2**

**கிரகசீலப்படலம்:–**

கிரகங்களின் செயல்கள், காரகங்கள், தன்மைகள், பலம், பலவீனம் போன்றவற்றை தெரிவிக்கும் பாடல்கள்.

**கூறு – 3**

**ஜனன காலப்படலம் :–**

பிறப்பு அறிதல், ஆணா, பெண்ணா, இரட்டை குழந்தை, பிறக்கும் இடம், தன்மை, அருகில் இருப்பவர், இறப்புகள், நோய்கள் போன்றவற்றை தெரிவிக்கும் பாடல்கள்.

**கூறு – 4**

**சட்வர்க்கப்படலம்**

1. வர்க்கமேன்மை
2. உச்சபலங்கள்
3. யோகப்படலம்

**கூறு – 5**

**பாவக காரகப்படலம் :–**

1. 1 முதல் 4 வரை பாவகங்களின் பாடல்கள்
2. 5 முதல் 8 வரை பாவகங்களின் பாடல்கள்
3. 9 முதல் 12 வரை பாவகங்களின் பாடல்கள்

**பார்வை நூல்கள் :–**

| | | |
|---|---|---|
| சாதக அலங்காரம் | – | கீரனூர் நடராஜர் |
| ஜாதக அலங்காரம் | – | VK வேலு நாயகர் KM தெய்வசிகாமணி |
| ஜாதக அலங்காரம் | – | Dr. சி. மகாலட்சுமி |
| ஜாதக அலங்காரம் | – | P.L. அருணாசலம் |
| ஜாதக அலங்காரம் | – | சரஸ்வதி மஹால் |

## ஜாதக அலங்காரம்

**1 முதல் வீடு (இலக்கின பாவகம்)**

சீர்பெறுஞ் சென்ம லக்கினந் தன்னில்
சேர்ந்தினி திருந்திடும் அந்தப்
பேர்தரும் பலன்கள் மெய்நிறஞ் சொரூபம்
பெருநிதி உதரம்மத் தகமும்
ஏர்பெறும் உபாங்கம் சிந்திதங் கிலேசம்
இலட்சணம் கீர்த்திமூர்த் திகளும்
பார்தரும் சுபசந் தோசமும் வயதும்
பகர்முதல் தானமென் றுரைக்கும்.

**விளக்கம்**

சிறப்புமிக்க சனன லக்கினத்தைப் பார்த்து அறியப்பெறும் நன்மைகளான சாதகரின் உடல், நிறம், அழகு, முகலட்சணம், உடலிலுள்ள மச்சம், தனம், தலை, வயிறு, மகிழ்ச்சி, மனக்கவலை, புகழ், ஆயுள், இரத்தம், உரிய தெய்வங்கள், பெறுதற்கரிய மேன்மை ஆகியவற்றைப் பற்றிக் கூறுவதே முதல் பாவகம் பலன்கள் என்று கூறுகின்றன.

**2. இரண்டாம் வீடு (தனபாவகம்)**

உரைத்திடுஞ் சவுபாக்கி யந்தனங் குடும்ப
மொளிசெறி நேத்திரம் வித்தை
தரைப்பெறுஞ் செல்வ முடன்புகல் வாக்கு
சாத்திரக் கேள்விகள் உணவு
விரைத்தெழு கமனம் மனமுமுத் தேசம்
மேம்பட விரும்புசெம் பொன்னும்
நிரைத்திடு நவரத் தினமிரண் டிடத்தில்
நிலைமைகண் டுரைசெய்வர் நின்றே.

**விளக்கம்**

சொல்லப்பட்ட அனைத்து நலன்களும் பொருந்திய வாழ்க்கை, மிகுந்த செல்வம், குடும்ப வாழ்க்கை, வலது கண், பூமியினால் கிடைக்கும் தானியம், வாக்கு, சாத்திர ஞானம், உணவுப் பழக்க வழக்கம், வேகமாகச் செல்லுதல், உண்மையான சொல், செயல், மனம், பொன், ஒன்பது வகை நவரத்தினங்கள் ஆகியவற்றை இரண்டாம் வீட்டின் பாவக பலன்கள் என்று கூறுகின்றன.

**3. மூன்றாம் வீடு (சகோதர பாவகம்)**

நின்றிடும் மூன்றாம் இடத்தினில் நிற்கும்
நிருபரால் உரைசெயும் பலன்கள்
வென்றிகொள் போகம் அடிமையாள் சரணம்
வீரியம் சத்துவம் துணைவர்
பொன்றிடா தணிய காதுநோய் கர்ண
பூடணம் புசித்திடும் கலன்கள்
துன்றுவிக் கிரமஞ் சேவகர் விருத்தி
சூழ்தயி ரியங்களுஞ் சொல்வர்.

**விளக்கம்**

மூன்றாம் இடத்தில் நிற்கும் கோள்களைக் கொண்டு அறிய வேண்டிய பலன்களாக வெற்றி, மனத்திற்கு இசைந்த எண்வகை போகங்கள், ஏவியது செய்யும் வேலையாட்கள், தன்னிடம் வந்து சேரும் செயல்கள், ஆண்மை, உறுதிப்பாடு, இளைய சகோதரர், காது நோய், காதில் அணியும் நகைகள், உணவுப் பாத்திரங்கள், சாகசச் செயல்கள், மிகுந்த வீரம், வேலைவாங்கும் தைரியம், பதவி உயர்வு போன்றவற்றைக் கூறுதல் வேண்டும்.

**4. நான்காம் வீடு (மாதுரு பாவகம்)**

சொல்லிய வித்தை வாகனம் சுபங்கள்
சூழ்வியா பாரமும் மனையும்
வெல்லுமேம் பாடும்சவுக்கியம் அன்னை
விரும்புநல் உறவினர் ஆகும்
நல்லநிட் சேபம் பரவிச யங்கள்
நறைகமழ் பால்பசு கன்று
வல்லதோர் தேவ தானம்இப் பலனை
வழுத்துநான் காமிடம் கொண்டே.

**விளக்கம்**

சொல்லப்பட்ட கல்வித் துறைகளின் தகுதிகள், ஊர்தி, நன்மை தரும் வியாபாரம், வீடு, வெற்றியால் ஏற்படும் புகழ், சுகம், தாய், நல்ல மனம் படைத்த உறவினர், புதையல், தாயின் நடத்தைக் குறைபாடு, நறுமணப் பொருட்கள், பால், பசு, கன்று முதலியன, கோவில் வழிபாடு ஆகியவற்றைப் பற்றி நான்காம் வீட்டின் பாவக பலன்கள் என்று கூறுவர்.

**5. ஐந்தாம் வீடு (புத்திர பாவகம்)**

கொண்டதோர் பக்தி பிதாமகன் புதல்வர்
கூறுபூரு வம்செய்புண் ணியமும்
தண்தமிழ் வாணர் புகழ்பிர பந்தம்
தரித்திடும் கர்ப்பம்மந் திரங்கள்
மிண்டிய வித்தை விதாரணம் புத்தி
விரும்புமிப் பலனெலாம் அறிந்தே
கண்டுரைத் திடுவார் ஐந்தாம் இடங்கொண்டே
கற்றுணர்ந் தருளும் மாதவரே.

**விளக்கம்**

தந்தையிடம் புத்திரர்கள் கொண்ட பக்தி, தந்தையின் தந்தை, புத்திரர், சென்ற பிறவியில் நாம் செய்த புண்ணியம், தமிழ் அறிந்த புலவர்களால் பாடப்பெறுதல், கர்ப்பம் தரித்தல், மந்திரம், அதர்வண மந்திரப் பயிற்சி, மனக்கூர்மை, அறிவு ஆகியவை பற்றி ஐந்தாமிடத்தால் ஏற்படும் பலன்கள் என்று கூறுவர்.

**6. ஆறாம் வீடு (சத்துரு பாவகம்)**

மாதுலன் வியாதி சத்துரு பீடை
மற்றும்ஆ யுதங்களால் விரணம்
ஓதிய ஞாதி யால்வரும் துன்பம்
உயுத்தம்மெய் வாதைபொன் தண்டம்
பேதமாம் கள்வர் புனல்மடந் தையரால்
பெருகுபாம் பாலும்நோ யுளது
நீதிசேர் பிரதா னிகர்விதிச் சிறையின்
நிலைமைஆ றாமிடம் குறித்தே

**விளக்கம்**

தாய்மாமனின் நோய், பகைவர்களால் ஏற்படும் இன்னல்கள், ஆயுதங்களால் உண்டாகும் காயங்கள், பங்காளிகளால் துன்பம், கொடிய சண்டை, உடல் நலிவு, பண இழப்பு, திருடர் அச்சம், தண்ணீரில் கண்டம், பெண்களால் ஏற்படும் நோய்கள், விஷப்பாம்பால் கண்டம், நீதிமன்றத்தில் விதிக்கப்படும் தண்டனை, ஆகியவற்றை இப்பாவத்தைக் கொண்டு கூறுதல் வேண்டும்.

**7. ஏழாம் வீடு (களத்திர பாவகம்)**

குறித்திடும் கமன மணமடந் தையர்க்கும்
குமரர்கள் தமக்கும் நல்லின்பம்
நிறுத்தரில் விபகா ரம்தமர் கூட்டம்
நேமியோ ருறவுசன் மானம்
பிறித்தறி வியாபா ரம்மணம் புரிநாள்
பின்மனை யாள்வியம் பெறுதல்
மறிகயல் விழியாய் ஏழிடம் கொண்டு
வழுத்துவர் மறைமொழிப் புலவர்

**விளக்கம்**

மணப் பருவமுள்ள ஆணின் பெண்ணின் திருமண விசயம், ஆண், பெண் சிற்றின்பம், வழக்கு, உறவினர் சேர்க்கை, பொதுமக்களால் கிட்டும் உதவிகள், வரவு செலவுகளைப் பகுத்தறிந்து செய்யும் வியாபாரம், திருமணம் நடக்கும் காலம், மனைவியின் ஆயுள் ஆகியவற்றை இப்பாவகத்தைக் கொண்டு கூறுதல் வேண்டும்.

**8. எட்டாம் வீடு (ஆயுள் பாவகம்)**

புலவுறும் படையால் வாதைசேர் யுத்தம்
பொருப்பின் மேலேறி வீழ்தல்
நிலைபெறும் வியாதி விக்கினம் கிலேசம்
நீள்பல துன்பமோ டிரணம்
சிலவினால் நட்டம் ஆம்விழுக் காடு
செறிபகை மரணமித் தனையும்
உலகினில் உயர்ந்தோர் அட்டமப் பலன்கண்டு
உரைசெய்வார் உண்மைபெற் றிடவே

**விளக்கம்**

மாமிச நாற்றம் கொண்ட (யுத்த கருவிகள்) ஆயுதங்களால் ஏற்படும் துன்பம். அதனைச் சார்ந்து வரும் சண்டை, மலை ஏறும்போது தவறி விழுந்து ஏற்படும் காயங்கள், உடம்பில் நிலைத்து நிற்கக்கூடிய கொடிய, தீராத வியாதி, மனத்தில் துன்பம், பல வழிகளில் ஏற்படும் துன்பங்கள், கவலைகள், வரவைக் காட்டிலும் ஏற்படும் செலவினங்கள், அவமானங்கள், தீராத பகைகள், இறப்பு, இறப்பிற்கு ஒப்பான கண்டங்கள் ஆகியவற்றை இப்பாவத்தைக் கொண்டு புலமை பெற்ற சோதிட வல்லுநர் கூறுவர்.

**9. ஒன்பதாம் வீடு (பிதுர் பாவகம்)**

பெற்றிடும் தந்தை மகம்பயில் தருமம்
பெருமைசேர் பாக்கியம் மடங்கள்
உற்றதோர் பரம புண்ணியம் குணமும்
உயர்திருப் பணிஉப தேசம்
வெற்றிசேர் நீர்க்கா வணம்புகழ் கூபம்
விரும்பிய செல்வம் ஈதுஎல்லாம்
கற்றுஅறிந் தோர்கள் ஒன்பதாம் இடத்தால்
கருணையும் பெறமொழிந் திடுவார்

**விளக்கம்**

தன்னைப் பெற்ற தந்தை, குலவிருத்தி, வம்சா வழி சொத்துகள், தெய்வத் திருப்பணிகள், கோயில், குளம் போன்றவற்றிற்குத் தொண்டு செய்தல், குருவிடம் தீட்சை பெறுதல், குருவின் உபதேசம் கேட்டல், தண்ணீர்ப் பந்தல் அமைத்தல், கிணறு வெட்டுதல் போன்ற பொது தருமக் காரியங்களில் ஈடுபடுதல், விரும்பிய பாக்கியங்கள் அனைத்தும் பெறுதல் போன்றவற்றை இப்பாவத்தைக் கொண்டு சோதிடச் சான்றோர் கூறுவர்.

**10. பத்தாம் வீடு (ஜீவன பாவகம்)**

மொழிந்திடும் பலபுண் ணியம்புவி புரத்தல்
முயன்றுபட் டணங்கள்தா பித்தல்
பொழிந்திடும் கருமம் இரக்கம் மெய்ஞான
பூசனை மனைபிதாப் பவங்கள்
ஒழிந்திடும் இனிய தேவதா பக்தி
உயர்சவு ரியம்பிர தாபம்
இழிந்திடும் இரவு கற்பவூண் புடவை
இவைபத் தாமிடப்பல னென்னே.

**விளக்கம்**

சாத்திரங்களில் கூறப்பட்ட பல்வேறு வகையான அறங்களைச் செய்தல், ஊராட்சி செய்தல், மக்கள் வாழ்வதற்கு குரிய இடங்களை உண்டாக்கி வைத்தல், புகழ் அடைவதற்காகச் செய்கின்ற நற்செயல்கள், ஞானத்தைப் பெற ஏற்படுத்தப்பட்ட கோவில் வீடு, தந்தையின் பாவங்களை நீக்குதல், சிறந்த தெய்வ வழிபாடு, பேரும் புகழும் அடைதல், பிறரிடம் பிச்சை பெற்று உண்ணுதல், அணியும் ஆடைகள், காயகற்ப மருந்து தொழில், ஜீவனத்திற்கான வழி, போன்றவை பத்தாம் பாவத்தால் அறியப்படுவன.

**11. பதினொன்றாம் வீடு (இலாப பாவகம்)**

என்றும்மூத் தவர்சே வித்திடும் பேர்கள்
இளங்கொடி மனைவிபொன் வித்தை
மின்னிய லாபம் பயிர்பரி வேழம்
விளங்குநல் லறிவுதண் டிகையும்
உன்னிய மனத்தில் துக்கமும் தீரும்
உத்தரீ யஞ்செறி வகையும்
பன்னிய பதினோராமிடங் கொண்டு
பரிந்தருள் புரிவர்பா வலரே

**விளக்கம்**

மூத்த சகோதரர்கள், தன்னை மதித்து மரியாதை செய்பவர்கள், அழகிய இரண்டாவது மனைவி, பொன், பொருள், பயன் தரும் அறிவுக் கலைகள், எதிர்பாராத நிலையில் வரும் ஆதாயம், விவசாயம், (தற்கால வாகனங்கள்) குதிரை, யானை, மேன்மேலும் விளங்கும் நல்ல தெளிந்த அறிவு, அமர்ந்து செல்லும் ஊர்திகள், மனத்தில் வருத்தமாக நினைத்தது விலகி நற்பயன் தரும் வழிகள், ஆடையணிதல் ஆகியவற்றை இப்பாவகத்தைக் கொண்டு ஜோதிட அறிஞர் கூறுவர்.

**12. பன்னிரண்டாம் வீடு (விரைய பாவகம்)**

பாவமந் நியதே சத்தில்உத் யோகம்
பணச் செலவு உடன்உறும் போகம்
மேவிய சயன சவுக்கியம் விவாதம்
விளைந்திடும் தொழில்கதி மறுமை
ஆவதோர் தானம் புண்ணியம் தியாகம்
அருள்மகம் சர்வதோ விருத்தி
சேவலங் கொடியோன் அருளினால் பெரியோர்
செப்புவர் துவாதச பலனே

**விளக்கம்**

தீய செயல்களுக்குச் செலவு செய்தல், வெளிநாட்டில் தொழில் அல்லது வேலை செய்தல், பெண் இன்பத்திற்காகப் பணச் செலவு செய்தல், கட்டில், மெத்தை போன்றவற்றில் படுத்து உறங்குதல், பாவத் தொழில் செய்தல், மறுபிறப்பில் அடையும் கதி, தானம், புண்ணியம், கொடை, வேள்வி போன்றவற்றில் இடையறா ஈடுபாடு ஆகியவற்றை 12ஆம் பாவத்தால் அறிய வேண்டும். சேவற் கொடியோனாகிய முருகப் பெருமானின் திருவருளால் சோதிட

அறிஞர் துவாதசப் பலன்கள் எனப்படும் பன்னிரண்டு வீடுகளின் பாவகப் பலன்களைக் கூறுவர்.

**பார்வை நூல்கள் :–**

| | | |
|---|---|---|
| சாதக அலங்காரம் | – | கீரனூர் நடராஜர் |
| ஜாதக அலங்காரம் | – | VK வேலு நாயகர் KM தெய்வசிகாமணி |
| ஜாதக அலங்காரம் | – | Dr. சி. மகாலட்சுமி |
| ஜாதக அலங்காரம் | – | P.L. அருணாசலம் |
| ஜாதக அலங்காரம் | – | சரஸ்வதி மஹால் |

குறிப்பு

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

## கூறு – 2

## கிரகசீலப்படலம்

### <u>காரகக் கோள்கள்</u>

சாற்றிய பிதுர்கா ரகன் பகற்கு
இரவி சனிபிதுர் காரகன் நிசிக்குப்
போற்றிய அன்னை காரகன் பகற்குப்
புகர்நிசிக்கு இந்துகா ரகனாம்
ஏற்றமாந் துணைவர் காரகன் செவ்வாய்
எழில்சுத காரகன் அரசன்
ஆற்றிய ஆயுள் காரகன் சனிஇல்
லாள்தனக் கேபுகர் ஆமே

**விளக்கம்**

தந்தைகாரகன் பகலில் பிறந்தவர்களுக்குச் சூரியன், இரவில் பிறந்தவர்களுக்குச் சனி, தாய்க்காரன் பகலில் பிறந்தவர்களுக்குச் சுக்கிரன், இரவில் பிறந்தவர்களுக்குச் சந்திரன், பகலிலும் இரவிலும் பிறந்தவர்களுக்குச் சகோதரகாரகன் செவ்வாய், புத்திரகாரகன் குரு, களத்திர காரகன் சுக்கிரன், ஆயுள்காரகன் சனி.

### திக்குபலம்

பொன்னும் புதனும் உதயத்தில்
பொருந்திய வலிய ரேயாவர்
மன்னு சனியும் கரும்பாம்பும்
வலியர் அத்த மனமாகில்
மின்னுங் கதிரும் குசன் உச்சம்
மேவில் வலியர் விளம்புங்கால்
துன்னு மதிசுக் கிரன்நீர்க்கீழ்ச்
சூழ்ந்தார் வலியர் ஆவரே.

**விளக்கம்**

குருவும் புதனும் இலக்கின கேந்திரத்தில் இருந்தால் முழு வலிமை அடைகின்றன. சனியும் இராகுவும் ஏழாங் கேந்திரத்தில் இருந்தால் முழு வலிமையைப் பெறுகின்றன. சூரியனும் செவ்வாயும் பத்தாங் கேந்திரத்தில் இருந்தால் முழு வலிமையைப் பெறுகின்றன. சந்திரனும், சுக்கிரனும் நான்காங் கேந்திரத்தில் இருந்தால் முழு வலிமைப் பெறுகின்றன.

**நிசர்க்க வலிமை**

செய்யுங் காரி தனக்கதிகம்
செவ்வாய் வலிது செவ்வாயில்
வெய்ய புதனும் வலிவதனை
விடவே அரசன் மிகவலியன்
துய்ய அரசன் தனில்வெள்ளி
வலியன் அவனில் சோமன்மிகும்
பைய சசிக்குக் கதிர்வலிது
பானுவில் பாம்பே வலிதே

**விளக்கம்**

துன்பத்தைச் செய்யும் சனியைவிடச் செவ்வாய் அதிக வலிமையுடையது. செவ்வாயை விட வெப்பம் மிகுந்த புதன் வலுமையுடையது. புதனைவிடக் குருவும், குருவைவிடச் சுக்கிரனும், சுக்கிரனைவிடச் சந்திரனும், சந்தினைவிடச் சூரியனும், சூரியனைவிட இராகு கேதுக்களும் வலிமையுடையவை.

**கோள்கள் வலிமை பெறும் இடங்கள்**

உச்சம் உச்சாங் கிசைநல்லோர்
உடனும் நல்லோர் உடன்வீட்டும்
மெச்சும் உறவோர் உடனுமவர்
வீட்டும் மித்திரர் அங்கிசையில்
அச்சம் அறவே அவரவருக்கு
ஆட்சி ஆன அங்கிசையில்
இச்சை உடனே யுறின்பலனாம்
இதனில் பிழைத்தால் இலைபலனே

**விளக்கம்**

உச்ச வீட்டிலும், உச்சனுடைய அங்கிசையிலும், நற்கோள்களோடும், நற்கோள்களுடைய வீட்டிலும், நட்புக் கோள்களோடும், நட்புக் கோள்களுடைய வீட்டிலும், நட்பான அமிசத்திலும், துன்பமின்றி அவரவர்களுக்குரிய ஆட்சி வீட்டிலும், ஆட்சியான அமிசத்திலும் கோள்கள் இருந்தால் சாதகன் நல்ல பலனை அடைவான். இதற்கு மாறாக இருந்தால் நல்ல பலன் மிகக் குறையும்.

**பகல் இரவு காலப்பகுதி**

ஏந்து செவ்வாய் சனி இந்து இராப்பலன்
வேந்தன் ஆதவன் வெள்ளி பகற்பலன்
போந்து புந்திக்கு எப்போதும் பலன்களாம்

கூந்தல் வேள்இபக் குங்குமக் கொங்கையாய்

**விளக்கம்**

குங்குமச் சாந்தணிந்த கொங்கைகளை உடைய பெண்ணே! செவ்வாய், சனி, சந்திரன் ஆகிய மூவருக்கும் இரவு காலத்தில் பலமாம். குரு, சூரியன், சுக்கிரன் ஆகியவர்களுக்குப் பகற்காலத்தில் பலமாம். புதனுக்கு இரவு பகல் எக்காலத்திலும் பலமாம்.

**ஆண்டு – மாத – வார – ஓராதிபர் வலிமை**

ஆய ஓரைக்கு அதிபர்க்கு அதில்பலன்
தூய வாரத்து அதிபர்க்கு அதில்பலன்
ஏய திங்கட்கு அதிபர்க்கு அதில்பலன்
ஆயும் ஆண்டாதி பர்க்கதில் பலமதே

**விளக்கம்**

ஒருவர் பிறந்த ஆண்டு அதிபதி, தொடக்கக் காலமாகிய மேட சங்கிரமான (நாள்) வாராதிபதி, பிறந்த மாதத் தொடக்க (நாள்) வாராதிபதி, பிறந்த (நாள்) வாராதிபதி, பிறந்த காலத்திற்குரிய ஓராதிபதியாக அமைபவை எந்த எந்தக் கோள்களோ அவை முறையே ஒன்றை விட ஒன்று வலிமையுடையவை.

**புதனின் சிறப்பு விதி**

ஆன புந்தி சுபரோடு அடுத்திடில்
தானும் நற்சுபன் ஆகுவன் தாழ்வுறும்
ஊன தீயர் உடன் இருந் தால்விழி
மான னாய் அவன் மன்னுவன் தீயனாய்

**விளக்கம்**

புதன் நற்கோள்களுடன் சேர்ந்து இருந்தால் தானும் நற்கோளாகச் செயல்படும். தீய கோள்களுடன் கூடி இருந்தால் தீய கோளாகச் செயல்படும்.

**கோள்களின் நட்பு**

ஆதவனுக்கு உறவுதிங்கள் செவ்வாயும் பொன்னும்
அம்புலிக்குப் புதனுஞ்செங்கதிர் இருவர் நேசம்
நீதிசெறி சேய்க்குறவு குருதிங்கள் வெய்யோன்
நின்றபுதன் தனக்குச்சுக் கிரன்இரவி நேசம்
ஓதியபொன் தனக்கு உறவுஆம் கதிர்திங்கள் செவ்வாய்
உயர்வெள்ளிக்கு உறவுசனி உடன்புந்தி இருவர்
பூதலமேல் சவுரிக்கே புதனும்சுக் கிரனும்
பொருந்தியநல் உறவு என்றே போற்றிடுவர் புலவர்

**விளக்கம்**

சூரியனுக்கு நட்பாகும் கோள்கள் சந்திரன், செவ்வாய், குரு ஆகியவை. சந்திரனுக்கு நட்பாகும் கோள்கள் புதனும், சூரியனும் ஆகும். செவ்வாய்க்குக் குரு, சந்திரன், சூரியன் ஆகியவை. புதனுக்குச் சூரியன், செவ்வாய், சந்திரன் ஆகியவை. குருவுக்குச் சூரியன், சந்திரன், செவ்வாய் ஆகியவை. சுக்கிரனுக்குச் சனியும், புதனும் நட்பு. சனிக்குப் புதனும், சுக்கிரனும் நட்பு ஆகும். என்று சோதிட வல்லோர் கூறுவர்.

**கோள்களின் சமம்**

போற்றியசெங் கதிர்தனக்குச் சமன்புந்தி ஒருவன்
புனிதமதிக்கு இணைசெவ்வாய் குரு சனிசுக் கிரனே
ஏற்றசெவ்வாய்க்கு இணைசனிசுக் கிரரிருவர் தாமே
இனியபுதற் குச்சமனாம் சனிசெவ்வாய் அரசன்
நாற்றிசைஎண் அரசனுக்கே சமன்சவுரி ஒருவன்
நலந்திகழ்சுக் கிரற்கு இணைபொன் நவில்செவ்வாய் இருவர்
தோற்றியிடும் சனிதனக்கே சமனதா கவுமே
தூய்யவியா ழந்தனையே சொல்வர்மிகத் தானே

**விளக்கம்**

உலக மக்களால் போற்றப்படும் சூரியனுக்குப் புதன் ஒன்றே சமத்துவமுடையது. தூய்மையான சந்திரனுக்குச் செவ்வாய், குரு, சனி, சுக்கிரன் ஆகியவை சமம் முடையவை. தகுதி வாய்ந்த செவ்வாய்க்குச் சனியும், சுக்கிரனும் சமத்துவமுடையவை. இனிய வாக்குடைய புதனுக்குச் சனி, செவ்வாய், குரு ஆகியவை சமத்துவமுடையவை. நான்கு திசைகளில் உள்ளவர்கள் அனைவராலும் போற்றப்படும் குருவுக்குச் சனி ஒன்றே சமத்துவமுடையது. நன்மை விளங்குகின்ற சுக்கிரனுக்குக் குருவும், செவ்வாயும் சமத்துவமுடையவை. சனிக்குத் தூய்மையான குரு சமத்துவமுடையது.

**கோள்களின் பகை**

சொல்லிரவிக் குறுபகைசுக் கிரன்சனியோடிருவர்
சோமனுக்குப் பகையில்லை சொல்லவுமெக்காலே
அல்லலறுஞ் செவ்வாய்க்குப் பகைபுந்தி ஒருவன்
ஆனபுந்திக் குற்றபகை அம்புலியென்றாகும்
நல்லவியாழன் தனக்குப் புதன்வெள்ளி பகையாம்
நாடியசுக் கிரற்கிரவி நவில்திங்கள் பகையே
வல்லசனி தனக்கிரவி திங்களுடன் செவ்வாய்
மட்டுமே பகையென்று வழுத்துவரெக்காளும்

**விளக்கம்**

சூரியனுக்குச் சுக்கிரன், சனி ஆகியவை பகை. சந்திரனுக்கு எக்காலத்திலும் எவ்விடத்திலும் பகையில்லை. துன்பமற்ற செவ்வாய்க்குப் புதன் ஒருவனே பகை. புதனுக்கு உற்ற பகை சந்திரனே. நல்லவரான குருவுக்குப் புதனும், சுக்கிரனும் பகை. சுக்கிரனுக்குச் சூரியனும் சந்திரனும் பகை. வல்லமையுடைய சனிக்குச் சூரியனும் சந்திரனும் செவ்வாயும் பகை.

**நட்பு – ஆட்சி – உச்சம் – பகை – நீசம்**

**1. மேடம்**

வெள்ளியும் புதனும் நட்பு
விளங்கிய செவ்வாய் ஆட்சி
ஒள்ளிய கதிரோன் உச்சம்
உயர்சனி நீசம் ஆகும்
தெள்ளிய மதியோன் பொன்னன்
சீரிய ராகு கேது
உள்உறும் பகையாம் என்று
ஓதினர் மேடத் தோர்க்கே

**விளக்கம்**

மேட ராசியானது புதனுக்கும், சுக்கிரனுக்கும் நட்பாகும். செவ்வாய்க்கு ஆட்சியாகும். சூரியனுக்கு உச்சம் ஆகும். சனிக்கு நீசம் ஆகும். சந்திரன், குரு, இராகு, கேது ஆகியவற்றுக்குச் பகை ஆகும்.

**2. இடபம்**

சேய்சனி புதன்பொன் நட்பு
சீரிய புகரோன் ஆட்சி
தூய்மைசேர் மதியே உச்சம்
துர்தரும் பாம்பு நீசம்
காய்கதிர் பகையே ஆகும்
கண்டனர் இடபம் தன்னில்
ஆய்தரு பொருள்கள் எல்லாம்
அறிந்தினி துரைக்க லாமே

**விளக்கம்**

ரிஷப ராசியில் செவ்வாய், புதன், குரு, சனி ஆகியவை நட்பாகின்றன. சுக்கிரன் ஆட்சியும், சந்திரன் உச்சமும், இராகு கேதுக்கள் நீசமும், சூரியன் பகையும் ஆகின்றன. இத்தகு பலன்கள் அனைத்தையும் சாதகங்களைக் கொண்டு ஆராய்ந்து விருப்பமுடன் கூறுதல் வேண்டும்.

**3.மிதுனம்**

சந்திரன் சனியே சுங்கன்
தரும்குரு செவ்வாய் பாம்பு
முந்திய நட்ப தாகும்
முனிவிலாப் புதனே ஆட்சி
உந்திய பரிவே டந்தான்
உச்சமாம் வில்லு நீசம்
தந்திடுங் கதிரோன் மாற்றான்
தாழ்விலா மிதுனத் தோற்கே

**விளக்கம்**

மிதுன ராசியில் சந்திரன், குரு, சுக்கிரன், செவ்வாய், இராகு, கேது ஆகியவை நட்பாக இருக்கின்றன. புதன் ஆட்சியாகவும், பரிவேடம் உச்சமாகவும், இந்திரதனு நீசமாகவும், சூரியன் பகையாகவும் இருக்கின்றன.

**4. கடகம்**

மேதையே நட்பு திங்கள்
விளங்கிய ஆட்சி ஆகும்
சீதையே பொன்னான் உச்சம்
சிறந்திடும் செவ்வாய் நீசம்
ஓதிய கதிரோன் சுங்கன்
ஓங்கிய ராகு மந்தன்
போதவே பகையாம் என்று
போற்றினர் கடகத் தோற்கே.

**விளக்கம்**

கடக ராசி புதனுக்கு நட்பும், சந்திரனுக்கு ஆட்சியும், குருவுக்கு உச்சமும், செவ்வாய்க்கு நீசமும், சூரியன், சுக்கிரன், சனி, இராகு, கேது ஆகியவற்றிற்குப் பகையும் ஆகும்.

**5. சிங்கம்**

அந்தணர் உறவ தாகும்
அருங்கதிர் ஆட்சி ஆகும்
முந்திய தூமன் உச்சம்
முனிவிலா நுட்பம் நீசம்
மந்தனே புகரோன் செவ்வாய்

வணிகனே அரவே திங்கள்
தந்திடும் பகையே சிங்கம்
தனக்கெனச் சாற்றினாரே

**விளக்கம்**

சிம்ம ராசியானது குருவுக்கு நட்பும், சூரியனுக்கு ஆட்சியும், தூமனுக்கு உச்சமும், தூம கேதுவுக்கு நீசமும், சந்திரன், செவ்வாய், புதன், சுக்கிரன், சனி, இராகு, கேது ஆகியவற்றுக்குப் பகையும் ஆகும்.

**6. கன்னி**

திங்க ளோடரவு செவ்வாய்
செம்பொன்னே மந்தன் இன்னோர்
தங்கிய உறவது ஆகும்
சாற்றிய புதனே ஆட்சி
பொங்கிய புதனே உச்சம்
புகரவன் நீசம் ஆகும்
செங்கதிர் பகையே ஆகும்
தெரிவையற் கென்று செப்பே

**விளக்கம்**

கன்னி ராசியில் சந்திரன், செவ்வாய், குரு, சனி, இராகு, கேது ஆகியவை நட்பும், புதன் ஆட்சியும், மூலத்திரிகோணமும், உச்சமும், சுக்கிரன் நீசமும், சூரியன் பகையும் பெறுகின்றன.

**7. துலாம்**

பண்டிதன் பொன்னன் அங்கி
பாம்புடன் இவர்கள் தாமும்
தண்டிடா உறவாம் ஆட்சி
தரும்புகர் உச்சம் காரி
வண்தமிழ் கதிரோன் நீசம்
வாழ்மதி பகைய தென்று
கொண்டதோர் துலாத்தி னோற்குக்
கூறலாங் கோதை மாதே

**விளக்கம்**

துலா ராசி செவ்வாய், புதன், குரு, இராகு, கேது ஆகியவற்றிற்கு நட்பும், சுக்கிரனுக்கு ஆட்சியும், சனிக்கு உச்சமும், சூரியனுக்கு நீசமும், சந்திரனுக்குப் பகையும் ஆகும்.

## 8. விருச்சிகம்

பனிமகன் சுங்கன் நட்பு
பார்மகன் ஆட்சி பாம்பு
முனிவிலா உச்சம் ஆகும்
முழுமதி நீசம் ஆகும்
இனியனே அருக்கன் பொன்னும்
நீலனும் பகைய தென்றே
முனிவிலாத் தேளி னோற்கே
முறைமையாய் மொழிவர் மாதே

**விளக்கம்**

விருச்சிக ராசியானது புத சுக்கிரருக்கு நட்பும், செவ்வாய்க்கு ஆட்சியும், சந்திரனுக்கு நீசமும், சூரியன், குரு, சனி ஆகியவற்றுக்குப் பகையும், இராகு கேதுகளுக்கு உச்சமும் ஆகின்றனது.

## 9. தனுசு

பகலவன் புகரோன் காரி
பாம்புநல் புதனே இந்து
இகல்இலா உறவ தாகும்
இறைவனே ஆட்சி ஆகும்
சுகமறு சிலையே உச்சம்
தோன்றிடும் வட்டம் நீசம்
மதிமகன் பகையே ஆகும்
வளைந்திடும் தனுவி னோற்கே.

**விளக்கம்**

தனுசு ராசியில் சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், சனி, இராகு, கேது ஆகியவை நட்பாகவும், இந்திரதனு உச்சமாகவும், பரிவேடம் நீசமாகவும், செவ்வாய் பகையாகவும் இருக்கிறது.

### 10. மகரம்

பண்டிதன் ஒடு சுங்கன்
பாம்புடன் உறவ தாகும்
மண்டியே சனியே ஆட்சி
மங்கலன் உச்சம் ஆகும்
கொண்டதோர் குருவே நீசம்
கூரிய கதிரோன் திங்கள்
கண்டநல் பகையே ஆகும்
காட்டிய மகரத் தோற்கே

**விளக்கம்**

மகர ராசி புதன், சுக்கிரன், இராகு, கேது ஆகியவற்றுக்கு நட்பும், சனிக்கு ஆட்சியும், செவ்வாய்க்கு உச்சமும், குருவிற்கு நீசமும், சூரிய சந்திரருக்குப் பகையும் ஆகும்.

### 11. கும்பம்

என்றூழும் புதனும் வெள்ளி
இறைவனே உறவ தாகும்
திண்திறல் சனியே ஆட்சி
செப்பிய நுட்பம் உச்சம்
கண்டதோர் தூமன் நீசம்
கலைமதி புவிசேய் பாம்பு
கொண்டநல் பகையே ஆகும்
குறித்திடும் கும்பத் தோற்கே

**விளக்கம்**

கும்ப ராசியில் சூரியன், புதன், குரு, சுக்கரன் ஆகியவை நட்பாகவும், சனி ஆட்சியாகவும், தூமகேது உச்சமாகவும், தூமன் நீசமாகவும், சந்திரன், செவ்வாய், இராகு, கேது ஆகியவை பகையாகவும் இருக்கின்றன.

### 12. மீனம்

அரவோடு சனியே திங்கள்
அருக்கனே உறவ தாகும்
பரவிய குருவே ஆட்சி
பார்க்கவன் உச்சம் ஆகும்
தலைமகிழ் புதனே நீசன்

தரைமகன் பகைய தாகும்
கரவிலாக் கயவி னாற்கே
கனங்குழை மடந்தை கேண்மோ

**விளக்கம்**

மீன ராசி சூரியன், சந்திரன், சனி, இராகு, கேது ஆகியவற்றுக்கு நட்பும், குருவுக்கு ஆட்சியும், சுக்கிரனுக்கு உச்சமும், புதனுக்கு நீசமும், செவ்வாய்க்குப் பகையும் ஆகும்.

**கோள்களின் நிலம்**

பாரெல்லாம் சசிகதிரோன் இருவர்க்கும் ஆகும்
பனிவரைகே கயத்தின் நடு பாம்புசனி நாடாம்
ஏருலவும் கேகயம்தொட்டு எழில்விந்தம் மட்டும்
இந்துசுதன் பூமியென்றே இயம்புவர்நல்லோர்கள்
கார்செறியும் விந்தமுதல் கௌதமைமட்டாகத்
கனகனுக்காம் கிருஷ்ணைவரைக் காப்பியநா டாமே
சீருலவு கிருஷ்ணை முதல் இலங்கைவரை அந்தச்
செவ்வாயின் தேயமென்றே செப்புவர்நல்லோரே.

**விளக்கம்**

இந்திய உலகம் சூரிய சந்திரர்களுடையது. இமயமலைக்கும் கேகய நாட்டிற்கும் இடையிலுள்ள நாடுகள் இராகு, கேது, சனி ஆகியவற்றிற்குரிய நாடுகள். அழகு பொருந்திய கேகய நாடு முதல் விந்திய மலை வரை உள்ள நாடுகள் புதனுடையது. மேகங்கள் நிறைந்த விந்திய மலை முதலாக கௌதமை ஆறுவரைக்கும் உள்ள நாடுகள் குருவுடையது. கௌதமை முதல் கிருஷ்ணா ஆறு முதல் இலங்கைத் தீவு நாடு வரை செவ்வாயின் நாடுகள்.

**ஆண் என அறிதல்**

மின்னுகலை நிறைந்தமதி மேவில் ஆண் பிறக்கும்
விரவும் ஒற்றை முன்பாதி இரட்டையின் பின்பாதி
என்னில் ஆண் பிள்ளைஒற்றை ராசிதனில் இரட்டை
ஏற்றநவாங் கிசஞ்சனனம் என்றிடிலாம் ஆணே
மன்னவன்சூ ரியன் ஒற்றை ராசிஉறில் ஆணாம்
வரும்புருட ராசிதனில் புருசக்கோள் மருவ
பின்னுமது சன்மமதாய்ப் புருசக்கோள் நோக்கப்
பிறந்திடுவது ஆண்பிள்ளை எனப்பேசல் ஆகுமே

**விளக்கம்**

சந்திரன் முதலிய பெண் கோள்கள் ஆண் இராசிகளில் இருக்க ஆண் குழந்தை பிறக்கும். சூரிய ஓரையில் ஆண் குழந்தை பிறக்கும். ஆண் ராசியில் பிறந்தும் பெண் லக்கின நவாம்சத்தில் சனன லக்கினமாகப் பொருந்தி வந்தால் ஆண் பிள்ளையே. ஆண் ராசியில் ஆண் கோள்கள் இருந்தாலும் அல்லது ஆண் கோள்கள் பார்த்தாலும், அது சனன லக்கினமானால் ஆண் குழந்யையே பிறக்கும்.

## ஆண், பெண் அமைப்பு

பேசும்பெண் புருசக்கோள் இரண்டும் சன்மம்
பெற்றிருக்கத் தானபலன் பிரித்துப் பார்த்து
நேசமுடன் உறைகிரகப் பலனும் பார்த்து
நிச்சயித்தான் பெண்என்றே நிகழ்த்தல் வேண்டும்
தேசுபெறு புருசலக் கினத்தால் ஆணே
சேயிழையில் பெண்ணாகும் திங்கள் வெய்யோன்
பாசமுடன் பெண்வீட்டில் இருக்கில் பெண்ணாம்
பார்த்திபனாம் புருசமனை பற்றி நிற்கில்

**விளக்கம்**

இலக்கினத்தில் ஆண் பெண் கோள்கள் இருந்து, அவற்றுள் ஆண் கோள் வலிமை பெற்றும், இலக்கினம் ஆண் ராசியாகவும் இருப்பின் ஆண் பிள்ளை பிறக்கும். பெண்கோள் வலிமை பெற்று இலக்கினம் பெண் ராசி ஆனால் பெண் குழந்தை பிறக்கும். சந்திரனும் சூரியனும், பெண் ராசியில் இருந்தால் பெண் பிள்ளையும், ஆண் ராசியில் இருந்தால் ஆண் குழந்தையும் பிறக்கும்.

## ஆண் பெண் கிழமை

வகுத்திடும் வாரம் மதிபுகர் பெண்ணாம்
தொகுத்தசேய் மந்தன் சூரியன் பொன்னும்
பகுத்திடும் ஆணாம் பகர்புதன் அமிசம்
நிகழ்த்தொன்று ஆண்பெண் ஆகிடும் இரண்டே

**விளக்கம்**

செவ்வாய், சனி, ஞாயிறு, வியாழன் ஆகியவை ஆண் நாட்கள். திங்களும் வெள்ளியும் பெண் நாட்கள். புதன் ஆண், பெண் என்ற இரண்டிற்குமாம். அதாவது புதன் ஆண் ராசியில் இருந்தால் ஆணும், பெண் ராசியில் இருந்தால் பெண்ணும் ஆகும்.

**ஓரை அறியும் வழி**

வஞ்சியே ஒற்றைலக் கினமுன் பாதி
மார்த்தாண்டன் ஓரையின் பாதிமதி ஓரை
மிஞ்சிநின்ற இரட்டைக்கு முன்திங்கள் ஓரை
மீந்திடும்பின் பாதிக்கோ வெய்யோன் ஓரை
செஞ்சொல்மதி ஓரையதே காணுமாயின்னே
சேயிழையே பிறக்குமெனச் செப்பலாகும்
கஞ்சமலர் நண்புஇரவி ஓரையதே ஆகில்
காளையே பிறக்குமென வேகருதல் வேண்டும்

**விளக்கம்**

ஆண் ராசியில் முதல் 15 பாகை வரை சூரிய ஓரை, 15.01 இலிருந்து 30 பாகை வரை சந்திரஓரை, பெண் ராசியில் முதல் 15 பாகை வரை சந்திரஓரை, 15–01 லிருந்து 30 பாகை வரை சூரியஓரை. ஜன்மலக்கினமானது சந்திர ஓரையானால் பெண் என்றும், சூரிய ஓரையானால் ஆண் என்றும் அறிதல் வேண்டும்.

**இராசி விழிப்பு – செவிடு – முடம்**

இனிய சிங்கம் எருதுஆடோடு
இரவி உதிக்கில் குருடாகும்
கனியும் தண்டு ஞெண்டுக்கும்
கங்குல் பொழுதில் கண்ணில்லை
தனுவும் மகரம் இராச்செவிடாம்
தராசு தேளும் பகல்செவிடாம்
மனிதன் கும்பம் கால்முடமாம்
மருவும் மீனம் இராமுடமாம்

**விளக்கம்**

மேடம், இடபம், சிம்மம் ஆகிய மூன்று இராசிகளுக்கும் பகலில் கண் பார்வை இருக்காது. மிதுனம், கடகம், கன்னி ஆகிய இராசிகளுக்கு இரவில் பார்வை இருக்காது. தனசு, மகரம் ஆகியவற்றுக்கு இரவில் காது கேளாது. துலாம், விருச்சிகம் ஆகியவற்றிற்குப் பகலில் காது கேளாது. கும்பம் பகலில் முடமானதாகும். மீனம் இரவில் முடமானதாகும்.

**கோள்களுக்குரிய விலங்குகளின் கொம்புகள்**

சொல்லிய ரவிக்குச் சிரசுமத் தியினில்
துலங்குகூ ரிலாமல் நோக்கும்

துய்யகொம்பு உளதாம் வெண்பிறை தனக்கே
சொற்றனர் கொம்பிலை என்றே
வல்லசெவ் வாய்க்குச் சிரநடு மேலாய்
வளர்ந்தெழு கூரிய கொம்பாம்
மாலவன் தனக்கே சிரத்தொரு புறத்தின்
மருவியகொம் புளது ஆகும்
நல்லபீ தகற்கே சென்னிமத் தியினில்
நாடிடு கொம்பென நவில்வர்
நாடு சுக்கிரர்க்குச் சென்னியின் பக்கம்
நலமுடன் செறிந்திடு கொம்பாம்
அல்லல்சேர் காரி இருவகைப் பாம்பு
ஆகிடும் மூவர்கள் தமக்கு
அறுத்திட மறுப்பட்டு இருந்துகீழ் நோக்கும்
ஆகிய கொம்புள தாமால்.

**விளக்கம்**

சூரியனுக்குத் தலைநடுவில் கூரில்லாமல் மேலே பார்க்கும் கொம்புண்டு. சந்திரனுக்குக் கொம்பில்லை. செவ்வாய்க்குத் தலைநடுவில் கொம்புண்டு. புதனுக்குத் தலையின் ஒரு பக்கத்தில் ஒரு கொம்புண்டு. குருவுக்குத் தலைநடுவில் ஒரு கொம்புண்டு. சுக்கிரனுக்குத் தலையின் பக்கத்தில் வளர்ந்த கொம்புண்டு. சனி, இராகு, கேது ஆகியவற்றுக்கு அறுக்கப்பட்டதனால் உண்டாகிய மருவுடன் கூடிய கீழ்நோக்கிய வளர்ந்த கொம்புகள் உள்ளன.

## இலக்கின சுத்தி

வேண்டியமே டம்நாலே காலென்று ஓதும்
மேன்மை இலங் கைக்கு அகசுமாம் சோழ நாட்டில்
ஈண்டியதோர் சாயைரெண்டும் கழித்துக் கண்ட
இலக்கமாம் மதுரையெழில் காஞ்சி காசி
நீண்டுதிக்கும் பெங்களூர் தனக்கும் சாயை
நின்றதுபார்த் தால்குறைந்து நிற்கும் மேடம்
ஆண்தகைசேர் விழுச்சாயை கண்டால் சன்மம்
ஆகும்மனை லக்கினசுத்தி அறிந்து செப்பாய்

**விளக்கம்**

இலங்கை நாட்டில் மேடராசிக்கு சூரியன் இருப்பு 4 ¼ நாழிகை (1 மணி, 42 நிமிடம்). இலங்கையைவிடச் சோழநாடுகளில் சூரிய உதயம் பகற்பொழுது

அதிகமாகும். இது அவச்சாயை, பாதசாயை என்கின்ற இரண்டையும் கூட்டிக் கண்ட தொகையாகும். மதுரை, காஞ்சிபுரம் ஆகியவற்றுக்குத் தொலைவிலுள்ள பெங்களூர், காசி ஆகியவற்றுக்குச் சாயை நின்ற அளவானது மேட ராசியைவிடக் குறைந்திருக்கும். சிறப்பான அளவில் பொருந்திச் சேர்ந்த சூரிய உதயமாகும். மேட விழிப்புச் சாயை எந்த இராசியில் பொருத்தமானதோ அதைக் கண்டால், அது முதலாக இலக்கின சுத்தியான இடமெது என்று அறியமுடியும்.

**பார்வை நூல்கள் :—**


| | | |
|---|---|---|
| சாதக அலங்காரம் | – | கீரனூர் நடராஜர் |
| ஜாதக அலங்காரம் | – | VK வேலு நாயகர் KM தெய்வசிகாமணி |
| ஜாதக அலங்காரம் | – | Dr. சி. மகாலட்சுமி |
| ஜாதக அலங்காரம் | – | P.L. அருணாசலம் |
| ஜாதக அலங்காரம் | – | சரஸ்வதி மஹால் |

குறிப்பு

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

## கூறு – 3

## <u>சனன காலப் படலம்</u>

### சாதகன் பிறந்த வீடு – திக்கு – அடையாளம்

சேயுதிக்கும் மனையிருக்கும் திசைமகரம் சிங்கம்
சென்மலக்கி னம்ஆயின் ஆம்தெற்கு வாசல்
ஆயுதிக்கும் கன்னிதனு சேல்மிதுனம் வடக்காம்
அணியிடபம் மேற்காகும் ஆடுஅலவன்ஒரு
வேயுதிக்கும் தோளணங்கே கும்பவிருச்சிகம்கோல்
விளங்கு அமரர் வேந்தனர் திசையெனவே விளம்பாய்
தேய்பிறைக்கு நெய்தீபத்து இல்லைவளர் பிறைக்கே
செப்பிடுவாய் நெய்விளக்கில் நிறையுமெனத் தேர்ந்தே.

**விளக்கம்**

சிங்கம், மகரம், சன்மலக்கினம் ஆனால் அந்தப்பிள்ளை பிறந்தவீடு தெற்குப் பக்கத்தில் இருக்கும். மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகியவை இலக்கினமானால் வடக்குப் பக்கத்தில் இருக்கும். இடபம் ஆனால் மேற்குப் பக்கத்தில் இருக்கும். மேசம், கடகம், துலாம், விருச்சிகம், கும்பம் ஆகியவை ஆனால் கிழக்குப் பக்கத்தில் இருக்கும். பிறப்பு தேய்பிறைக் காலமாக இருந்தால் அங்குள்ள விளக்கில் எண்ணெய் குறைவாக இருக்கும். வளர்பிறையானால் அங்குள்ள விளக்கில் எண்ணெய் நிறைந்திருக்கும்.

### பிரசவ விவரம்

தெரிவைக்குத் துன்பமில்லை லக்கினத்துஆ திக்கே
திடமுடனே அந்தமெனில் தேன்மொழிக்குத் துன்பம்
மருவியலக் கினமுதல்சந் திரனிருக்கு மட்டும்
மன்னுதொகை மடவார்கள் மருவியரு கிருப்பர்
சருவியநல் சுபர்காணில் தான்தோன்றும் விரைவில்
சனிகுசன்பார்த் திடில்தானே சஞ்சலம்உற் றிடுமே
பெருமையுடன் இருந்தக்கோள் நிறங்குழவி தனக்கே
பெறுமென்றே பெரியோர்கள் உரைப்பர் தானே.

**விளக்கம்**

எந்த இலக்கினத்தில் குழந்தை பிறந்ததோ அந்த இலக்கினத்தின் தொடக்கத்தில் அதாவது பத்து பாகைக்குள் இருந்தால் அக்குழந்தை பிரசவத்தில் எந்தவிதமான துன்பமும் இல்லாமல் பிறந்திருக்கும். அதன் இறுதியில் அதாவது அந்த இலக்கினத்தின் **29–30** பாகைகளில் பிறந்திருந்தால்

அக்குழந்தை பிறக்கும்போது பிரசவம் கடினமானதாக இருக்கும். சன்மலக்கினம் முதல் சந்திரன் இருக்கும் வீடுவரை எண்ணி அவற்றில் எத்தனை கோள்கள் இருக்கிறதோ அத்தனை பேர் பிரசவம் ஆகும் நேரத்தில் அருகில் இருப்பார்கள். இலக்கினத்தை நற்கோள்கள் பார்த்தால் தாய்க்கு எவ்விதத் துன்பமும் இன்றிக் குழந்தை பிறந்திருக்கும். இலக்கினத்தைச் சனி, செவ்வாய் பார்த்தால் தாய் துன்புற்றுக் குழந்தையைப் பெற்றிருப்பாள். குழந்தையின் இலக்கினத்தில் நற்கோள்கள் இருந்தால் அக்கோள்களின் நிறத்தையுடையதாகக் குழந்தை இருக்கும். ஆட்சி, உச்சம் பெற்ற கோள்கள் இலக்கினத்தில் இருந்தாலும், பார்த்தாலும் அக்குழந்தை புகழுடையதாக இருக்கும்.

### குழந்தையின் அழகு

தானருகே இருந்தமட வார்பருவங் கூறில்
சனியிருந்து கண்டாக்கால் தலைநரைத்த கறுப்பி
ஈனமிலாக் குசனிருந்து காணினிளம் வயதே
இசையும் நிறம் சிவப்பாக இருப்பள்அமங் கலையாம்
ஆனகதிர் குருமதியம் விருத்தைபுகர் இளமை
அருணன்நடுப் பருவமுடைச் சுமங்கலைகள் ஆவர்
மானிலமேல் பாம்பிருந்தால் அனாசார மடந்தை
மகவுநூ லேதரித்து வந்திருங்கண் டீரே.

**விளக்கம்**

ஜனன லக்கினத்திற்கும் சந்திர லக்கினத்திற்கும் நடுவில் சனியிருந்தாலும், பார்த்தாலும் தலைநரைத்துப் போன கறுத்த நிறமுடையவள் தாய் பிரசவிக்கும் காலத்தில் அருகே இருப்பாள். செவ்வாய் இருந்தாலும் பார்த்தாலும் சிவப்பு நிறமான, இளம் வயதுடைய விதவைப் பெண் அருகில் இருப்பாள். குரு, சுக்கிரன், சனி ஆகியவற்றில் ஒன்று இருந்தாலும், பார்த்தாலும் தளர்ந்த வயதுடைய பெண் இருப்பாள். சுக்கிரனாகில் இளம் வயதுச் சுமங்கலியும், புதனாகில் நடுவயதுச் சுமங்கலியும் இருப்பர். இராகு கேதுக்கள் இருந்தால் குழந்தை கொடி அல்லது மாலை சுற்றிப் பிறக்கும்.

### தாயின் பருவநிலை – வீட்டின் தரம்

கண்டுமொழி மாதாவின் தன்பருவம் காரி
கதிர்குருமா மதிகண்டால் ஆம்விருத்தை ஆகும்
மண்டுவெள்ளி சேய்பார்க்க வயதிளமையாகும்
மகிழ்புதனே கண்டாக்கால் அவள்வாலையாவாள்
மிண்டுமுட வனிருந்தால் வீடுபுரா தனம்சேய்
மேவில்வெந்து கட்டினதோர் வீடாகுமென்னே

பண்டுசசி வலுக்கிலகம் புதியதே யாகும்
பரிதிக்கு மரந்திரண்ட கூறையெனச்சொல் வாரே.

**விளக்கம்**

குழந்தையின் தாயினுடைய வயதைக் கூறுமிடத்து நான்காமிடத்தில் சூரியன், சந்திரன், குரு, சனி ஆகியவற்றுள் ஒன்று இருந்தாலும், பார்த்தாலும் திடகாத்திர முடன் வயதானவராக இருப்பார். செவ்வாய், சுக்கிரன் இருக்க, பார்க்க இளமைத் தோற்றமுடையவர். புதன் இருக்க, பார்க்க வயதுக்கேற்ற தோற்ற முடையவர். கோள்கள் அனைத்திலும் சனி வலுவுடையதாய் இருந்தால் நூதனமாகக் கட்டிய வீட்டில் அக்குழந்தை செவ்வாய் வலுப்பெற்று இருந்தால் தீயினால் வெந்து திருத்தப்பட்ட சுட்ட செங்கல்லால் கட்டிய வீடாகும். சூரியன் வலுப்பெற்று இருப்பின் மரங்களால் கட்டப்பட்ட கூறை வீடாகும்.

**வீட்டின் தரம் – விரும்பும் சுவை**

சொல்லுபுதன் வலுத்திருந்தால் சித்திரவீடு ஆகும்
சுக்கிரன்தான் இருந்தாக்கால் சசிவீடது ஆகும்
வில்லரசன் வலுத்திருந்தால் கெட்டியகமாகும்
மின்அனையார் விரும்புசுவை
வெய்யவனுக்கு உறைப்பாம்
நல்லமதிக்கு உப்பாகும் சேய்துவர்ப்பை நாடும்
நாலுவகைடச சுவைபுதனே நல்குவிப்பன் இப்பால்
அல்லலறும் குருமதுரம் வெள்ளிபுளிப்பாகும்
அணிகாரி கசப்புக்கோள் உறும்திசை தொட்டு எண்ணே

**விளக்கம்**

புதன் வலுப்பெற்று இருப்பின் சித்திரங்கள் வரையப்பட்ட அலங்கார வீடாகும். சுக்கிரன் வலுப்பெறின் அலங்காரமான நல்ல புதிய வீடாகும். குரு வலுப்பெறின் நல்லமுறையில் வலிமையானதாகக் கட்டப்பட்ட வீடாகும். குழந்தையின் தாய் பிரசவ நாளன்று விரும்பி உண்ட உணவின் சுவையானது சந்திரன் உள்ள இடம், சந்திரன் உள்ள இடத்துக்கு அதிபதி ஆகியோருடன் இருந்தவர்களைக் கொண்டு அமையும். அச்சுவையானது சூரியனுக்குக் காரம். சந்திரனுக்கு உப்பு. செவ்வாய்க்குத் துவர்ப்பு. புதனுக்கு இனிப்பு, உரைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு ஆகிய நான்கும் ஆகும். குருவுக்கு இனிப்பு. சுக்கிரனுக்குப் புளிப்பு. சனிக்குக் கசப்பு. வலிமைபெற்ற கோள் இருந்த இடம் மும்மூன்று இராசிகளைக் கிழக்கு முதலிய திசைகளாக வைத்து எண்ணிப் பார்த்து, பிரசவ வீட்டின் நான்கு பக்கங்களிலும் உள்ள வீட்டின் அடையாளங்களைக் கூற வேண்டும்.

**விளக்கின் நிலை – தலைவாயிற்படி**

திரமுபயம் சாத்திரவி இருத்தல்விளக்கசைத்தல்
திங்களைப்பா வர்கள்பார்க்கில் தீர்க்கமுறும் தீபம்
உரைமருவும் இலக்கினத்துக்கு இருபாலும் ஆறென்று
ஓதும்மனை தனிலிருந்தால் உடன்வெளியில் இருப்பார்
இரவியோடு பளிங்குகேந்தி ரத்திருக்கில் கிழக்காம்
இரணியன்மால் கேந்திரத்தில் இருந்திடல்உத் தரமே
அரவுசெவ்வாய் கேந்திரத்தில் உற்றக்கால் தெற்காம்
அணிமதியம் கரும்காரிக்கு அகம்மேற்குவாசல்

**விளக்கம்**

ஸ்திரராசியில் சூரியன் இருந்தால் விளக்குத் திரமாக அசையாமல் இருக்கும். சரராசியில் அசைந்து அலைந்து கொண்டிருக்கும். உபயராசியாயின் அசைந்தும் அசையாமல் இருக்கும். சந்திரனைத் தீயவை பார்ப்பின் விளக்கு அணைந்துவிடும். இலக்கினத்திற்கு இரண்டு பக்கங்களிலும் உள்ள ஆறு இராசிகளில், திருசிய ராசிகளில் எவ்வளவு கோள்கள் உள்ளதோ அவ்வளவு பெண்கள் பிரசவ அறைக்கு வெளியே இருப்பர். அதிருசிய இராசிகளில் எத்தனை கோள்களோ அத்தனைப் பெண்கள் பிரசவ அறைக்கு உள்ளே இருப்பர். சூரியனும் சுக்கிரனும் கேந்திரத்தில் இருந்தால் குழந்தை பிறந்த வீட்டின் தெருவாசற்படியானது கிழக்கு நோக்கி இருக்கும். புதனும் குருவும் கேந்திரம் பெற்றால் வடக்காகும். செவ்வாய், இராகு, கேது ஆகியவை கேந்திரமெனில் வாயிற்படி தெற்காகும். சந்திரனும், சனியும் கேந்திரம் ஏறினால் மேற்காகும்.

**பிரசவம் பார்க்கும் பெண்களின் தகுதி**

வாசமுறும் மூன்றாறில் பதினொன்றில் பாவர்
வந்திருக்கச் சனிபத்தாம் மனையதனில் சார
நீசமடந்தை யரிருந்து புரிவர்பரி காரம்
நீண்டசனி சுபர்மனையில் நேரில்நல்லோர் காணில்
ஆசுறும்ஈ னத்தொழில்செய் நாரிஅருகிருப்பள்
ஆமென்றே கருதியறிந்து
உரைத்தநல்லோர் ஆய்ந்தே
தேசுறுநல் கலைநிறையும் திங்கள்முக மயிலே
செப்பினரிப் பலபாகம் தெரிந்துகொளத்தானே.

**விளக்கம்**

இலக்கினத்திற்கு 3, 6, 11 களில் தீய கோள்கள் இருந்து, சனி 10 இல் இருந்தால் கீழ்குலத்துப் பெண்கள் பிரசவித்த பெண் உடன் இருந்து அவளுக்கு வேண்டிய பணிகளைச் செய்வர். சனி நற்கோள்களின் வீட்டில் நற்கோள்களுடன் கூடி இருந்தாலும், நற்கோள்கள் பார்த்தாலும் ஈனத் தொழில் செய்யும் பெண்கள் உதவுவார்கள்.

### சோதிடக் கணிப்பு நெறிகள்

செப்பியதோர் பலபாகம் பகர வேண்டிச்
செங்கதிரோன் முதல்நவக்கோள் செறிபலங்கள் தெரிந்தே
ஒப்புடனே சனித்தநவக் கிரகபுடம் கண்டே
உயர்தூமன் முதல்ஐவர் குளிகாதி நால்வர்
தப்பரவே எண்ணியிலக் கினபுடமும் ஆகச்
சாற்றிடுபத் தொன்பதெனத் தரும்புடங்கள் வரைந்தே
இப்புவியில் உரைத்தவர்க்கே சித்திக்கும் பலன்கள்
எனச்சுருதி மொழிப்புலவர் இயம்பினர்கள் தாமே.

**விளக்கம்**

ஒரு சாதகப் பலனைப் பார்த்துத் திட்பநுட்பமாகக் கூற வேண்டுமானால், சூரியன் முதலாகிய ஒன்பது கோள்களின் சட்பலங்களைக் கணித்துக்கொள்ள வேண்டும். நவக்கோள்களின் ஸ்புடமும், தூமாதி ஐவர், குளிகாதி நால்வர் ஆகிய துணைக்கோள்களின் ஸ்புடமும், இலக்கினஸ்புடமும் ஆகப் பத்தொன்பது ஸ்புடங்களைக் கணித்துப் பார்த்துச் சொல்லுபவர்களே இந்நிலவுலகத்தாருக்குச் சரியான பலன்களைக் கூற முடியும்.

### கோள்ராசி பாவக பலன்

இயம்புசன்ம மனைநவங் கிசபங்கைந் திலது
இனிதுதிக்கின் நவக்கிரகம் இருந்தபடி சரியே
நயம்பெறுமற் றங்கிசையில் உதித்திடினே அந்த
நவகிரகம் இருக்கும் நட்சத் திரபாதம் அறிந்தே
செயம்பெறவே நின்றமனை வீடுத்த வீட்டில்
செறிந்திருக்கும் விபரமெல்லாம் தெரிந்தெண்ணிக் கண்டே
பயன்பெறுசொல் பலபாகம் லக்கினமே முதலாய்
பன்னிரண்டு வீட்டுக்கும் பலன்களறிந் துரைப்பாய்.

**விளக்கம்**

சன்மலக்கின வீடானது நவாங்கிசத்தில் ஐந்தாவது பங்கில் உதிக்குமானால் நவ கோள்கள் இருக்கும் இராசிகள் சரியானதாகும். அப்படி இல்லாமல் அதற்கு முன்பின் ஆன வேறு நவாம்சங்களில் பிறந்திருந்தால் அப்போது அந்த ஒன்பது கோள்கள் இருக்கும் நட்சத்திர பாதங்களை அறிய வேண்டும். அறிந்ததைக் கொண்டு இராசிச் சக்கரத்தில் கோள்கள் நின்ற வீடு, அல்லது முன்பின் ஆன அடுத்த வீடு ஆகியவற்றுள் உள்ள விவரங்கள் அனைத்தையும் தெரிந்துகெள்ள வேண்டும். தெரிந்தபின் கணக்கிட்டுப் பார்த்துப் பயனை அடைவதற்கு உரிய பல பாகத்தை இலக்கின முதலாய்ப் பன்னிரண்டு பாவங்களினால் அறிந்து கூற வேண்டும்.

குறிப்பு

## கூறு – 4

## சட்வர்க்கப் படலம்

### திரேக்காணம் குறிக்கும் உறுப்புகள்

நனிதிரய முதற்கரணம் வாய்மட்டே யாகும்
நாபியள வாமிரண்டு மூன்றப்பால் நாட்டும்
வினவியதோர் இவ்விடத்தில் பாவர்களே நின்றால்
லிரணமுண்டாஞ் சுபக்கிரக மேவின்மறுவாகும்
புனிதமுறு சுபர்பார்வை உறினுமறு வாகும்
பொருந்துநிறந் தெரிந்ததனைப் புகன்றிடவேண் டிடினே
இனிமையுடன் இருந்தகிர கத்தின்வணந் தானே
இருந்தபடி யேயிருக்கும் எனஇயம்பு வீரே

**விளக்கம்**

முன்பு கூறிய திரேக்காணங்கள் மூன்றினுள் முதல் திரேக்காணத்துக்குத் தலைமுதல் வாய்வரை உள்ள உறுப்புகளாகும். இரண்டாவது திரேக்காணத்துக்குக் கழுத்து முதல் அடிவயிறு வரைக்கும் உள்ள உறுப்புகளாகும். மூன்றாம் திரேக்காணம் அதற்குப் பின் உள்ள பகுதிகளைக் குறிக்கும். தீயகோள்கள் இங்குச் சொல்லப்பட்ட உறுப்புகளுக்குரிய இராசிகளில் இருந்தால் விரண நோயுண்டாகும். நற்கோள்கள் இருப்பினும் பார்ப்பினும் மச்சங்கள் இருக்கும். இவ்விடங்களில் இருக்கும், பார்க்கும் கோள்களினுடைய குணநலன்களுக்கு ஏற்ப மச்சத்தினுடைய நிறம், உள்ள இடம் போன்றவற்றை அறிதல் வேண்டும்.

### திரேக்காணப் பலன்கள்

வீரமுறுங் கதிரிருந்தால் விலங்கினத்தினாலும்
விளங்குச்சி இருந்தக்கால் மெய்விரணங் கொம்பால்
பார்மகனுற் றிடிலங்கி யாற்படையினாலும்
பாகனுறில் பூமிநிமித் தம்விரணம் மற்றும்
ஆரியனாங் குருசங்கர் உறில் விரணமில்லை
ஆங்காரி உறில்கல்லால் வாதசேத்து மத்தால்
கூறியதோர் இரணமுண்டாம் நல்லோர்கள் கண்டால்
கூறுமிர ணந்தீர்ந்தே குலவும்வடு வாமே

**விளக்கம்**

முற்கூறிய இடங்களில் சூரியன் இருப்பின் விலங்குகளினாலும், சந்திரன் இருப்பின் விலங்குகளின் கொம்புகளினாலும், செவ்வாய் இருப்பின்

நெருப்பினாலும், கருவிகளாலும், புதன் இருப்பின் மண் கட்டியாலும் நோயுண்டாகும். குருவும் சுக்கிரனும் இருந்தால் விரணம் இருக்காது.

**மேலது**

வடிவிலார் சிரத்திரவி முகத்தின்மதி யாகும்
மார்பிற்சேய் உறின்மருவு மின்னுமிரணந்தான்
முடியரசன் உதரத்தில் புந்தியிடை தனிலே
மூரிநெடுங் காரியிரு துடைதனிலே யாகும்
கடுவுறையுங் கருநாகங் கரந்தனிலே யாகும்
காலிரண்டிற் செம்பாம்பு தான்கலந்து நிற்கும்
நடுமுதுகில் சுக்கிரனும் ஆம்விரணம் பாவர்
நண்ணுமிடந் தன்னிலென்றே நாட்டுவர்நல் லோரே

**விளக்கம்**

சூரியனுக்குத் தலையிலும், சந்திரனுக்கு முகத்திலும், செவ்வாய்க்கு மார்பிலும், புதனுக்கு இடுப்பிலும், குருவுக்கு வயிற்றிலும், சுக்கிரனுக்கு முதுகிலும், சனிக்குத் தொடைகளிலும்,இராகுவுக்குக் கைகளிலும், கேதுவுக்குக் கால்களிலும் விரணம் உண்டு.

**நவாம்சம்**

உதித்திடுநற் சன்மலக் கினங்கடமை கண்டே
ஒன்பதுபங் காக்கியிவன் உதித்திடும்பங் கினுக்கே
விதித்தநவாங் கிசம்மேடந் தனக்குமே மேடம்
மேவிடப ராசிக்க மகரமுத லாகக்
கதித்தமிது னந்தனக்குத் துலாமுதலாகக் கொண்டு
கணக்கிடுவா யிவ்வாறே கடகமுதற்றொட்டுப்
பதித்தமற்ற ராசிக்கு முன்புசொன்ன முறையே
பார்த்துரைப்பாய் பான்மொழியே பன்னுநவாங் கிசமே

**விளக்கம்**

சாதகனுடைய பிறந்த இலக்கினததைக் கண்டறிந்து அதனை ஒன்பது பிரிவுகளாக்கி அந்த ஒன்பது பிரிவில் சாதகன் எந்தப் பிரிவில் பிறந்துள்ளான் என அறிய வேண்டும். அந்தப் பிரிவை மேடம், சிங்கம், தனுசு ஆகிய இராசிகளில் மேடத்தை முதலாகவும், இடபம், கன்னி, மகரம் ஆகியவற்றில் மகரத்தை முதலாகவும், மிதுனம், துலாம், கும்பம் ஆகியவற்றில் துலாராசியை முதலாகவும், கடகம், விருச்சிகம், மீனம் ஆகியவற்றில் கடகத்தை முதலாகவும் கொண்டு கணக்கிட்டுக் கூறுவதே நவாம்சப் பலன் ஆகும்.

**உச்சபலப் படலம்**

**கோள்களின் உச்சராசிகள்**

உச்சமென நவக்கிரகம் இருக்கும்வண் மையதாம்
உணர்ந்தறியும் படிமேடத் துறையும்வெண் யோனும்
மெச்சுமிட பத்தில்சந் திரன்மகரச் செவ்வாய்
விரவியதோர் கன்னிதனில் மேவியநற்புதனும்
அச்சமறக் கடகத்தில் அரசனும்வந் திருக்க
அணிமீன ராசிதனில் அமர்ந்திடுஞ்சுக்கிரனும்
வச்சிரமாந் துலாமதனில் காரியெனுங்கோளும்
வந்திருந்தால் உச்சமென வேவழுத்தலாமே.

**விளக்கம்**

பன்னிரண்டு இராசிகளில் எந்தெந்த இராசிகளில் எந்தெந்தக் கோள்கள் உச்சமாக இருக்கும் என்று பார்த்தால் சூரியனக்கு மேடமும், சந்திரனுக்கு இடபமும், செவ்வாய்க்கு மகரமும், புதனுக்குக் கன்னியும், குருவுக்குக் கடகமும், சுக்கிரனுக்கு மீனமும், சனிக்குத் துலாமும் உச்ச இராசிகள் ஆகின்றன.

**உச்சராசிப்பலன்**

வழுத்தியசெங் கதிருச்சம் பெறவுதித்தோன் தானும்
மன்னவனாம் பிரதாப சாலிமகா பலவான்
பழுத்திடுபுன் னோயில்லான் தனதான்யம் உள்ளான்
பலவிதவா கனன்உடலில் பழுது ஒன்றும் இல்லான்
செழித்திடுசந் திரனுச்சம் சகலசனப் பிரியன்
செல்வகுணம் புத்திநவ தானியமுஞ்சேரும்
விழித்துமயல் அளித்துமனம் உருக்கும்மடமாதே
வெகுபேரைப் புணர்கின்ற மிகுபோகியாவான்

**விளக்கம்**

சூரியன் உச்சமாகப் பிறந்தவன் அரச போக வாழ்வுடையவன். வலிமையான உடல் உடையவன். துன்பம் தரக்கூடிய நோயில்லாதவன். பொன்னும், தானியங்களும் உடையவன், ஊர்தி ஆதாயம் உடையவன். உடலில் எத்தகைய குறைபாடுகளும் இல்லாதவன். சந்திரன் உச்சம் பெற்றவர் அனைவராலும் விரும்பப்படுபவர். செல்வமும், செழிப்பான குணமும் உடையவர். அறிவாற்றல் உடையவர். பண்ணைக்குச் சொந்தமாக விளங்கக்கூடிய சிறந்த விவசாயி. பெண்ணாசை மிக்கவர்.

**செவ்வாய் – புதன் உச்சப்பலன்**

ஆகுஞ்செவ் வாயுச்சங் கீர்த்திபிறர்க்கினியான்
அவனிதனில் நெடுஞ்காலம் ஆயுளுடை யவனாம்
வாகுடையன் பித்தன்பிதிர்த் திரவியங்கள் உள்ளான்
மருவுமிகு புத்திமான மன்னவனாயிருப்பன்
மோகமுறும் புதனுச்சஞ் சகலகலை வல்லன்
முறைமையுறு சங்கீதப் பிரியன்வெகுகுணவான்
சேகரமாம் புத்திமான் கணிதவகை தெரிவோன்
திண்புவிக்கோ ராசனுறு ஆண்டிருக்குஞ் சீமான்

**விளக்கம்**

செவ்வாய் உச்சம் பெற்றவன் புகழுடையவன். பிறரால் விரும்பப்படும் நல்லவன். நீண்ட ஆயுளும், அறிவாற்றலும் உடையவன். பித்த உடல்வாகுடையவன். தாத்தா, தந்தை ஈட்டிவைத்த சொத்துகளுக்கு வாரிசாக இருப்பவன், பலரும் மெச்சத் தக்க மதிநுட்பவாதி, அரச தத்துவம் உடையவன்.

புதன் உச்சமாகப் பிறந்தவன். சகலகலா வல்லவனாகி, அனைத்துச் சாத்திரங்களையும் ஆராய்ந்து அறிபவன். கல்வியாளன். இசைப்பிரியன். நிறைந்த நற்குணங்களை உடையவன். நாளும் தன் அறிவைப் பெருக்கிக் கொள்ளுபவன். சோதிடம் முதலான கணிதத்தில் தேர்ச்சி பெற்றவன். அரசு உத்தியோகம் பார்ப்பவன். நீண்ட காலம் வாழக்கூடிய செல்வச்சீமான்.

**குரு – சுக்கிரன் – சனி உச்சபலன்**

ஆமரசன் உச்சத்தில் வெகுசம்பத் துள்ளான்
அரசன்மிகு போகவான் அணிகலமும் உளனாம்
காமரச வனிதைவா கனம்வித்தை புதல்வர்
கனகமா மருவுமுப காரனாய் இருப்பன்
பூமலிசுக் கிரனுச்சம் தனம்வித்தை புதல்வர்
போகமிக வுளன்காரி உச்சமதில் பலவான்
ஏமமாரோக் கியந்தீர்க்கா யுள்உண்மையுடனே
இனியகிரா மஞ்சேனை இவைகளுளனாமே

**விளக்கம்**

குரு உச்சமாகப் பிறந்தவர் செல்வந்தர். அரசாளும் யோகமுடையவர். விலைமாதர் தொடர்புடையவர். அனுபவித்தற்குரிய பலவனையான செல்வமுடையவர். ஊர்திகளையுடையவர். பலவகைக் கல்வி, வித்தை

ஆகியவற்றை உடையவர். ஆதாயம் தரும் குழந்தைகளை உடையவர். தான தருமம் செய்யும் ஆன்மீகவாதி.

சுக்கிரன் உச்சமாகப் பிறந்தவர் சிறந்த செல்வமுடையவர். கல்விமான். நன்கு படிக்கக் கூடிய பிள்ளைகளைப் பெற்றவர். பெண் சுகமுடையவர்.

சனி உச்சமாகில் உடல்வலிமையும், உடல்நலமும் உடையவர். நிறைந்த வயதை உடையவர். உண்மையாக நடப்பவர். கிராம அதிகாரியாக, தொழிலாளர் தலைவராக இருப்பவர்.

**கோள்களின் கூட்டு உச்சப்பலன்**

உள்ளதொரு கிரகமுச்ச மேவில்கிரா மணியாம்
உபயமுச்சம் பெறில்பலவூர்க் கிராமணியுமாவான்
தெள்ளியதோர் ஒருமூன்று கிரகமுச்சம் ஆனால்
செங்கோன்மன் னவனாகி சிறிதவனிபுரப்பன்
நள்ளியதோர் ஈரிரண்டு கிரகமுச்சம் ஆனால்
நவிலொருமண் டலந்தனக்கு நாயகனே ஆவன்
புள்ளிசெறி ஓரைந்து கிரகமுச்சம் ஆனால்
பூலோக நாயகனாம் எனப்பலன்கள் புகல்வர்

**விளக்கம்**

ஒருவரது சாதகத்தில் எந்த இராசியில் ஆவது ஒரு கோள் உச்சமாக இருந்தால் ஓர் ஊருக்குக் கிராம அதிகாரியாக இருப்பான். இரண்டு கோள்கள் உச்சமாக இருந்தால் பலவூர்களுக்கு அதிகாரியாக இருப்பான். மூன்று கோள்கள் உச்சமாக இருந்தால் அரசு அதிகாரத்துடன் ஒரு சிறிய நகரை உருவாக்கி ஆள்வான். நான்கு கோள்கள் உச்சமாக இருந்தால் ஒரு நாட்டிற்கே அதிகாரியாக இருப்பான். ஐந்துகோள்கள் வரிசையாய் உச்சம் பெற்று இருந்தால் ஒரு பெரிய நாட்டினை ஆட்சி செய்யும் தலைவராகவும், மாநில முதல்வராகவும் இருப்பான்.

**நற்கோள்களின் நீசப் பகைப் பலன்கள்**

புகல்சனன காலையினில் சுபக்கிரகம் எல்லாம்
பொருந்துநீசஞ் சத்துரு ராசிதனில் சேர்ந்தே
இகலறநின் றிடுபலன்கள் உரைத்திடவும் கேளாய்
இருந்ததலந் தனைவிட்டே யேகுவிக்கும் தூரம்
விகலுற்ற நாசமிக வுற்பவிக்கும் என்றே
மெய்யதனில் குரூரமாம் வியாதிகளுண்டாகும்
அகல்மரண துக்கசோ கங்களிவை செறியும்
அனங்கண்டு சரநடைசொல் லானவிழியாளே

**விளக்கம்**

சனன கால இராசிச் சக்கரத்தில் நற்கோள்களான சந்திரன், புதன், குரு, சுக்கிரன் ஆகியவை நீசம் பெற்றும், பகைபெற்றும் இருந்தால் வாழும் ஊரைவிட்டு வேறு இடத்தில் வசிக்கும் நிலை ஏற்படும். துன்பம் தரும் தொல்லைகளையும், நாசங்களையும் உண்டாகும். உடலில் மிகக் கொடிய நோய்கள் ஏற்படும். இறப்புக் கவலையும், இறப்புக்கு ஒப்பான துன்பங்களையும் தரும்.

**உச்சம் – நீசம் – அஸ்தமனம்**

ஆரேனு மூவருச்சம் ஆகிலமைத் தோளி
அணுகுமர சன்கூட மூவருச்சம் ஆயின்
வாரேறு முலைமடவாய் மந்திரியும் ஆவான்
மற்றுமொரு மூவர்நீ சத்தான மருவில்
பாரேறுந் தனிலொருவர்க் கேயடிமை ஆவன்
பகர்மூவர் அத்தமனம் பாலனுயிர்க் கரிட்டம்
சீரான சசிக்கிருபால் பாவர்கடாம் வந்து
சேரில்கத் திரியோகம் சேயுடனே மரிக்கும்

**விளக்கம்**

பாவரோ சுபரோ மூன்று உச்சமானால் அரசாளும் யோகம் பெறுவான். ஆறு கோள்கள் உச்சமானால் அமைச்சராகும் யோகம் பெறுவான். மூன்று கோள்கள் நீசம் பெற்றால் அடிமைத் தொழில் செய்து வாழ்வான். மூன்று கோள்கள் சூரியனுக்கு 8½ பாகைக்குள் இருந்து அத்தமனமானால் ஆயுள் தோசம் ஏற்பட்டுக் குறைந்த ஆயுளைத் தரும். சந்திரனுக்கு இருபுறங்களிலும் தீய கோள்கள் இருந்தால் அது கத்திரியோகம் எனப்படும். இது சாதகனை இளமையில் இறந்துவிடச் செய்யும்.

**உச்சநீச இராசி அம்சப் பலன்**

மரியாதி ரிடனிரண்டு கிரகமுச்ச மாகி
மன்னியோ காங்கிசையில் வந்திருக்கின் மன்னனாம்
பிரியாத இவரிருவர் மித்துருவே ஆனால்
பெருமைசெறி முழுராஜ யோகமெனப்பேசு
பரிவேயில் லாதபகை யானாலற் பமதாம்
பாக்கியவா னாமுச்ச மேபடைத்த சுபக்கோள்
தரியாத நீசாங்கி சத்திலற்ப யோகம்
தாழ்வான நீசருச்சந் தானேறிப் பலனே

**விளக்கம்**

இரண்டு கோள்கள் அதாவது மேடத்திலுள்ள சூரியனும், செவ்வாயும் உச்சம், ஆட்சி பெற்று அங்கிசத்திலும் உச்சம் பெற்றிருந்தால் அரசாளும் யோகம் பெறுவான். சூரியனுடன் சேர்ந்த இருகோள்கள் அம்சத்தில் நட்பு கோள்களின் வீட்டில் இருந்தால் அரசயோகத்தில் வாழ்ந்திருப்பான். இக்கோள்கள் அம்சத்தில் பகைவீட்டில் இருந்தால் குறைந்த யோகமே தருவர். இராசியில் உச்சம் பெற்று அம்சத்தில் நீசம் பெற்றால் வலிமையுடையவனாயிருப்பான்.

**பாசயோகம்**

கண்டிடுலக் கினங்கள் முதலைந்து வீட்டில்
கருணையுட னேகிரகஞ் சேர்ந்து நிற்கில்
ஒண்டொடி நற்பாச யோகங்கள் என்றே
யுரைப்பர்பலன் மேதாவி உற்சாகி யாகும்
தண்டமிழின் பலகலையும் தெரிந்துரைகள் பகர்வன்
சகலசனங் களும்புகழத் தான்மிகவே வாழ்வன்
எண்டிசைகள் புரிந்திடுமன் னவரால்பூச் சியவான்
இனியதன வான்வீட்டில் கருமமெல்லாம் பார்ப்பன்

**விளக்கம்**

இலக்கின முதல் ஐந்து வீடுகளில் இடைவிடாது கோள்கள் இருந்தால் பாசயோகம் என்று பெயர். இந்த யோகத்தைப் பெற்றவன் பெருஞ் செல்வந்தன். அறிவாற்றல் மிக்கவன். குறைவிலாத மகிழ்ச்சியை உடையவன். பலவகையான தமிழ்நூல்களைக் கற்று ஆய்ந்து உரை நிகழ்த்துபவன். அனைவரும் போற்றத்தக்க வாழ்க்கையை வாழுபவன். ஆட்சி செய்யும் மன்னரால் பாராட்டப் பெறுபவன். நல்வழியில் நடப்பவன். தன் வீட்டிலே வாழ்பவன். குடும்பப் பொறுப்புள்ளவன்.

**சூலயோகம்**

உள்ளதோர் மூன்று வீட்டில்
உற்றிடில் சூல யோகம்
மெள்ள வேபலன் அனேக
வித்தை யுள்ளவன் உற்சாகி
தெள்ளிய போக வானாம்
திரவியம் தேடும் செல்வன்
கொள்ளவும் விலைகள் கூறி
விற்கவும் குறிப்பு ளாளன்

**விளக்கம்**

இலக்கின முதல் மூன்று வீடுகள் வரை தொடர்ந்து கோள்கள் இருந்தால் சூலயோகம் என்பர். முயற்சியால் தொடர்ந்து செல்வம் ஈட்டுபவன். பலவகையான கல்வியையும், வித்தையையும் கற்றவன். நீங்காத மகிழ்ச்சியுடையவன். பெண் சுகத்தைக் குறைவின்றி அனுபவிக்கும் பேறு பெற்றவன். பொருள் ஈட்டுவதில் கண்ணுங் கருத்துமாய் இருப்பவன். பொருளை வாங்கி விற்பதில் நுட்பமான மதியுடைய சிறந்த வியாபாரி.

**நீளகயோகம்**

ஆள்சன்மம் இரண்டு ஏழு
கிரகமு மமர்ந்து நிற்கில்
நீள யோக மென்பர்
இதன்பலன் நீதிமான் மிக்கோர்
தாள்தொழு திறைஞ்சி நிற்கும்
சரசவான் தீர்க்க சீவி
கேள்சுப காமன் சென்மத்
தேழுறிற் கவுள யோகம்

**விளக்கம்**

இலக்கினத்திலும், இரண்டாம் வீட்டிலும் ஏழு கோள்களும் நின்றால் நீளயோகம் என்பர். இந்த யோகத்தைப் பெற்றவன் செல்வந்தன் உயர்ந்தோர் மதிக்கும் சிறந்த மேலான பதவியினை வகிப்பவன். நிறைந்த ஆயுள் உடையவன். நற்செயல்களைச் செய்யும் நற்குணவான். சன்மலக்கினத்தில் மட்டும் ஏழு கோள்களும் ஒன்றாக இருந்தால் கவுளயோகமாகும்.

**கவுளயோகம்**

யோகமாம் கவுள யோகம்
உறுதனம் சற்றும் இல்லான்
பாகமா இளைத்தி ருப்பன்
செலவுளான் பகரில் சோம்பன்
தோகைகேள் பொல்லான் சிற்பக்
காரியத் தொழிற்கு வல்லன்
வாகுடன் புவிசஞ் சார
வல்லமை உள்ளம் ஆமே

**விளக்கம்**

மேலே கூறிய கவுளயோகத்தில் பிறந்தவன் சிறிதும் பொருளற்ற வறுமை யாளன். உடல் மெலிந்தவன். செலவாளி, சோம்பேறி. கெட்ட குணமுள்ள பொல்லாதவன். சிற்பக் கலைத் தொழிலில் வல்லவன். பல ஊர்களுக்குச் சுற்றித் திரிபவன்.

**யோகபலப்படலம்**

**பலராசியில் பல கோள்கள் சேர்ந்த பலன்**

ஆமாம் வெள்ளி இரவிசெவ்வாய்
அணுகிப் பத்தில் பதினொன்றில்
தாமேஐந் தொன்பது இரண்டில்
தரிக்கில் அரசாதி பவனாவன்
தேமார்செவ் வாய்இரவி புந்தி
எங்கேனுந் தொடர்ந்து நிற்கில்
ஓமேசெல் வம்படைத் திருப்பன்
உதவான் தமருக்கு ஒருகாசும்

**விளக்கம்**

சுக்கிரன், சூரியன், செவ்வாய் ஆகியவை இணைந்து 2 –5 – 9 – 10 – 11 ஆம் பாவங்களில் இருந்தால் அரசுத் துறையில் தலைவனாக இருப்பான். செவ்வாய், புதன், சூரியன் ஆகியவை ஏதாவது ஓர் இடத்தில் சேர்ந்து இருக்கப் பிறந்தவன் பெரிய அளவில் செல்வம் பெற்று வாழ்வான். ஆயின் தனது சுற்றத்தினருக்குச் சற்றும் கொடுத்து உதவாத கஞ்சனாய் இருப்பான்.

**பலகோள்களின் யோகம்**

காசம் பொதிந்த இரவிகுரு
கலைவெண் மதியம் காரிகுசன்
நேச முடனே யொருவீட்டி
னிற்கில் ஆசிலா சூரனுமாகி
தேசம் தன்னில் இருந்தமன்னர்
தேடும்பொரு ளிற்சிந் தைவைத்துப்
பூசல் புரிந்தே கைக்கொண்டு
பூமிக் கரசா யிருந்திடுவன்

**விளக்கம்**

ஒளிமிகுந்த சூரியன், குரு, வளர்பிறைச் சந்திரன், சனி, செவ்வாய் ஆகியவை நட்புடன் ஓர் இராசி வீட்டில் இருக்கப் பிறந்தவன் அனைவரையும்

தன்கீழ் பணிந்து செயல்பட வேண்டும் என்ற சர்வாதிகார எண்ணம் கொண்டவன். அரசர்கள் சம்பாதித்துச் சேர்க்கும் பொருள்களின் மீது ஆசைப்பட்டு, பாசாங்கு பல செய்து சாதுரியமாக அந்த அரசின் செல்வங்களைக் கைப்பற்றிக் கொள்வான். ஆனால் வெளியே அரசுக்குப் பணிபுரியும் நல்ல மனிதனாகக் காட்டிக் கொள்வான்.

### இராசியில் கோள்கள் கூடிய யோகம்

இருந்த கதிர்சந் திரனுச்சம்
எய்தக் குருநண் டினிலிருக்கத்
திருந்து குடத்தில் சனியிருக்கச்
செவ்வாய் மேதை ஏழிலுறப்
பொருந்தில் ராச யோகமதாம்
பொன்னும் பிருகு முச்சமதாய்
இருந்தால் பூவிற் கரசாகி
யிருப்பார் புரப்பன் எனச்சொல்லும்

**விளக்கம்**

சூரியனும், சந்திரனும், குருவும் உச்சம் பெற, சனி ஆட்சிபெற, செவ்வாயும், புதனும் ஏழில் இருக்க அரசபோக வாழ்வு அமையும். சுக்கிரனும் உச்சம் பெறுமானால் இப்பூமியில் மிகவும் உயர்ந்த அரசனாகி வாழ்வான்.

### ஆட்சி – உச்சம் தரும் யோகம்

சொல்லு மூன்று கிரகங்கள்
சுகமாய் உச்சம் ஆனாலும்
வில்லில் அரசன் மேடத்தில்
வெய்யோன் உச்சம் ஆயிடினும்
நல்ல பிருகு பொன்மதியும்
நயந்தே கூடி ஏழிலுற
அல்லல் அறவே புவிபுரக்கும்
அரசன் ஆகுங் கண்டீரே

**விளக்கம்**

மூன்று கோள்கள் உச்சம் பெற்று, குரு தனுசில் ஆட்சி பெற்று, மேடத்தில் சூரியன் உச்சம் பெற்று இருக்க, சுக்கிரன், குரு, சந்திரன் ஆகிய மூன்றும் இணைந்து ஏழில் இருக்க அச்சாதகன் எவ்விதத் துன்பமும் இல்லாது வல்லமையுடன் பூமியைப் பாதுகாக்கும் அரச யோகத்தினைப் பெறுவான்.

**வெளிநாட்டு யோகம்**

கண்ட பாக்கியா திபனும்
கருது வெள்ளி யிருவோரும்
மிண்டு சன்மத் திருந்திடினும்
வேந்தன் பாக்கி யாதிபத்தில்
அண்டி உறினும் பிறதேசத்து
அரசாய் தனவான் ஆகியுமே
பெண்ட தொன்றை மணம்புரிந்து
பிரதா பங்கள் பெருங்குணவான்

**விளக்கம்**

ஒன்பதாம் அதிபதியும் சுக்கிரனும் கூடி இலக்கினத்தில் இருந்தாலும், குருவும், ஒன்பதாம் அதிபதியும் கூடிப் பத்தில் இருந்தாலும் பிறருடைய நாட்டில் அரசு மரியாதையுடன், மிகுந்த செல்வத்துடன், பெண்ணொருத்தியை மணந்து புகழுடனும், வசதியுடனும் வாழும் பேறு பெற்ற நற்குணவான்.

**தர்மகர்மாதி யோகம்**

குணமார் தன்ம கன்மாதி
கூறுஞ் சுபக்கோ ளுடன்கூடி
மணமார் தன்ம கன்மத்தின்
மருவி இருக்கின் மன்னவனாம்
உணர்வாய் இவர்கள் இருவருடன்
ஓரைந் தாதி யுடன்கூடிப்
புணர்வர் எங்கே இருந்தாலும்
பூமி புரக்கும் புரவலனாம்

**விளக்கம்**

9 – 10 ஆம் அதிபதிகளாக தர்மகர்மாதி பதிகள் நற்கோள்களுடன் கூடிப் பத்தாம் வீட்டில் இருந்தால் ஆட்சி செய்யும் அரசன் ஆவான். இவற்றுடன் ஐந்தாம் அதிபதியும் கூடி எந்த இராசி வீட்டில் இருந்தாலும் பலராலும் அறியப்பட்ட அரசனாய் வாழ்வான்.

**வாயு யோகம்**

புரக்கும் வாயு யோகத்தைப்
புகலும் புகர்க்கும் காரிக்கும்
நிரைக்கும் திரிகோ ணங்கள்தனில்
நிருபன் இருக்க அவர்க்கஞ்சில்
பரக்கு மதியும் தானிருக்க
பரிதி மதிகேந் திரத்திருக்க
விரைக்குங் குமம்ஆர் முலையாளே
வினவி இதற்குப் பலன்சொல்லே

**விளக்கம்**

சுக்கிரனுக்கும் சனிக்கும் திரிகோணத்தில் குரு இருக்க, அதற்கு ஐந்தில் பிரகாசத்தைச் தரா நின்ற சந்திரன் இருக்க, சூரியனும் சந்திரனும் கேந்திரங்களில் இருக்க ஏற்படுவது வாயு யோகமாம்.

**மேலது**

சொல்லும் விசால நேத்திரமும்
துலங்கும்உன்னத மார்சொரூபனாய்
கல்வி உளனாய்த் தனவானாய்
கதித்த கீர்த்தி பிரபலனாம்
நல்ல குணமும் தருமனுமாய்
நாடுங் கிரைய விக்கிரைய
வல்ல வனுமாய்ப் பரதாரம்
வஞ்சித் திருக்கும் வஞ்சனுமாம்

**விளக்கம்**

வாயு யோகப் பலன்: அழகு பொருந்திய பரந்த விழிகளை உடையவன். உடற்பொலிவும், நிறைந்த உடற்கட்டும் உள்ள அழகன். கல்வி கேள்விகளில் சிறந்தவன். நிறைந்த செல்வமுடையவன். இவனது புகழைப் பலரும் போற்றுவர். நல்ல குணமுடையவன். பிறருக்கு உதவும் குணமுடையவன். பொருட்களை வாங்கவும் ஆதாயத்துடன் விற்கவும் தெரிந்த சாமார்த்தியமுள்ள வியாபாரி. பிறர் மனைவியுடன் கூடும் கெட்ட குணம் உடையவன்.

**சந்திர மங்கள யோகம் – கஜகேசரி**

**(யானை மத்தியில் சிங்கம்) யோகம்**

சந்திரன்செவ் வாய்கூடிச் சத்தமத்தில் இருக்கச்
சந்திரமங் களயோகம் தரணிஅர சாள்வான்

இந்திருக்கும் லக்கினகேந் திரத்தில்பென் இருக்க
இருங்கசகே சரியோகம் எழில்நிறைந்த மதிக்குச்
சுந்தரஞ்சேர் லக்கினத்தா றேழெட்டாம் இடத்தில்
சுபக்கிரகம் பார்க்கினில் சொலுராஜயோகம்
பந்தமுறு லக்கினத்தில் சசிசெவ்வாய் இருக்கப்
பானுகுரு பத்தொன்ப துறில்ராஜ யோகம்

**விளக்கம்**

சந்திரனும், செவ்வாயும் சேர்ந்து இலக்கினத்திற்கு எழில் இருப்பது சந்திர மங்களயோகம். அதன் பலனால் நாட்டை ஆட்சி செய்வான். சந்திரனுக்குக் கேந்திரங்களான 1, 4, 7, 10 களில் ஒன்றில் குரு இருக்க அது கசகேசரி யோகம். வளர்பிறைச் சந்திரனாக இருந்து 6, 7, 8ஆம் இடங்களைப் பார்த்தாலும் அல்லது இந்த இராசிகளில் ஒன்றில் இருந்தாலும் இராஜயோகம் என்பர். மேற்படி சந்திரனுடன் குருவும், சுக்கிரனும் சேர்ந்து பார்ப்பினும் இராச யோகமே. இலக்கினத்தில் சந்திரனும் செவ்வாயும் இருந்து, சூரியனும் 9, 10களில் ஒன்றில இருக்க அதுவும் இராஜயோகமே.

**கேசரி யோகம்**

வருசசி கேந்தி ரத்தில்
மன்னவன் நிற்க அந்த
அரசன் தன்கேந் திரத்தில்
அம்புலி தானும் நிற்கில்
விரவுமற் றிடத்தின் மற்றோர்
மேவிய தோசம் யானை
உறுசிங்கம் கணட வாறாம்
ஓது கேசரி யோகம்

விளக்கம்

சந்திர கேந்திரத்தில் குரு நிற்கவும், குரு கேந்திரத்தில் சந்திரன் நிற்கவும் ஏற்படுவது கேசரி யோகம். ஒரு யானையைச் சிங்கம் பார்த்தால் அந்த யானை எவ்வளவு அஞ்சுமோ அதுபோல் மற்ற இராசிகளிலுள்ள கோள்களால் ஏற்படும் துன்பங்கள் இந்த யோகத்தால நீங்கும் என்பதாம். கசகேசரி யோகத்தில் கூறப்பட்ட பலனே இதற்கும் உரியதாகும்.

**அங்கிச யோகம்**

வடிவுடன்கற் கடகத்தில் பொன்னவன்தான் இருந்து
வண்மையுடன் லக்கினத்தில் வான்சசியைப் பார்க்கப்
படிமிசையோர் காண்பார்கள் அங்கிசயோ காமென்றே
பலனிதற்கு வெகுபலனும் பாக்கியமும் உரித்தாய்த்
துடிஇடைமா தர்கள்பலரைத் தூகமணம் புரிந்தே
தொண்ணூற்றா றாம்வயது.
தொடங்கவரும் அளவும்
கடிகமழும் மலரணைமேல் அனுராகம் புரிந்தே
காசினியில் இருப்பனெனக் கருதிடுமிந்நூலே

**விளக்கம்**

கடகராசியில் குரு உச்சம் பெற்று நின்று சந்திரனைப் பார்த்தால் அதனை அங்கிச யோகம் என்பர். அதன் பலன்: பலவிதமான நல்ல பலன்களை அடையக் கூடியவன். அழகுடைய பெண்கள் பலரை மணம் செய்து வாழ்பவன். மணம் வீசும் மலர்ப்படுக்கையின் மேலிருந்து தான் விரும்பியதை விரும்பியவாறு பெற்றுத் தொண்ணூற்றாறு வயதளவு சுகபோக வானாக வாழக்கூடியவன்.

**இறை யோகம்**

உறுசன்மத் தாரகையில் சென்றநாழிகையை
ஓரைந்தில் கழித்தபலன் உதயமுத லாகப்
பெறுந்தாரா லக்கினமாம் ஓராலக் கினமும்
பிறந்தசன்ம லக்கினமும் பிறையிருந்த வீடும்
மறுவிலாஇந் நான்கும் மனைஉச்ச வீடாய்
வயங்க இறை யோகமென வேமுத்தல் வேண்டும்
கறையகலக் கலைநிறைந்த தண்மதியம் போலும்
கமலமலர் போலுமுகக் கன்னியரே கேளாய்

விளக்கம்

ஒருவரின் பிறந்த நட்சத்திரம் எத்தனை நாழிகையில் இருக்கிறதோ அதை ஒவ்வொரு இராசிக்கும் ஐந்து நாழிகைகளாக சன்ம லக்கினத்தில் இருந்து கழித்து வந்த மிச்சம் எந்த இராசிக்கு வருகிறதோ அதுவே தாராலக்கினமாகுங்ம. இந்தச் சந்திரா லக்கினமும், ஓரா லக்கினமும், சன்ம லக்கினமும், சந்திரன் இருக்கும் வீடும், உச்சகோள்களைத் தங்கள் வீடுகளில் பெற்றிருந்தாலும், இந்த நான்கின் அதிபதிகளும் உச்சம் பெற்நிருந்தாலும் அரசபோக வாழ்வு உண்டாகும்.

**சந்திர அதியோகம்**

சோமனுக்கு ஆறேழ் எட்டில்
சுபக்கிர கங்கள் நின்றால்
பூமலி அதிக யோகம்
இதன்பலன் புகழுங் காலை
நேமியோன் சவுரி யங்கள்
நிறைசீவன் பலமும் உள்ளான்
தீமையாம் பகையை வெல்லுஞ்
சேனாதி பதியும் ஆவான்

**விளக்கம்**

சந்திரனுக்கு 6, 7, 8 களில் நற்கோள்களான புதன், குரு, சுக்கிரன் ஆகியவை இருந்தால் சந்திர அதியோகம் என்று பெயர். இந்த யோகம் பெற்றவர்கள் அனைத்து வசதிகளையும் பெறுவர். உறுதியான உடலைப் பெறுவர். பகையை வெல்லும் திறமைசாலிகள். காவல்துறை, இராணுவம் போன்றவற்றில் பணியாற்றும் தகுதியைப் பெறக் கூடியவர்கள்.

**சுனபா யோகம்**

இந்துவுக்கு இரண்டாம் வீட்டில்
இனியகோள் இருந்த காலை
முந்திய சுனபா யோகம்
இதன்பலன் மொழியுங் காலை
சந்ததற் தனவான் ராஜ
சன்மானன் புத்தி யுள்ளான்
சுந்தரப் புவிகள் எங்கும்
துதித்திடு கீர்த்தி மானாம்

**விளக்கம்**

சந்திரனுக்கு 2இல் சுபக் கோள்கள் இருந்தால் சுனபா யோகமாகும். செல்வம் படைத்தவனாகவும், அரசுப் பணி, அரசு தொடர்பான துறையில் பணிபுரிபவனாகவும், அறிவாற்றலும், புகழும் உடையவனாகவும் இந்த யோகம் உடையவன் இருப்பான்.

**சிங்கடாடவி யோகம்**

ஆளும் லக்கினத்து ஒன்பதில் ஆனநற்
கோளுறில் சிங்க டாடவி யோகமாம்
தூளி காற்றெனக் கோபன் சுகமுளான்

நீளும் அற்ப நீதியுளன் பாவனே

**விளக்கம்**

இலக்கினத்திலும் ஒன்பதாம் பாவத்திலும் சந்திரன், புதன், குரு ஆகிய நற்கோள்கள் இருப்பது சிங்கடாடவி யோகமாகும். இதில் பிறந்தவர்கள் முன் கோபமும், நலமும், குறைந்த செல்வமும், பாவச் செயல்களும் உடையவர்கள்.

**இலக்கின நற்பலன் யோகம்**

பாவம் அற்றிடு லக்கின பார்த்திபர்க்கு
ஏவும் இரண்டில்சுபர்மூன் றிலெய்திடில்
தாவு நான்கெனும் தானுநற் கோளுறில்
கோவு மாகிக் குலாவி யிருப்பனே

**விளக்கம்**

இலக்கினாதிபதி பாவம் இல்லாது இருக்கவும், அடுத்துள்ள **2, 3, 4** ஆம் வீடுகளில் நற்கோள்கள்இருக்கவும் செய்தால் கோபமின்றி, அரசு புரிந்து, அனைவரிடமும் அன்பாக இருப்பான்.

**சன்யாசி யோகம்**

ஆமூன்றில் பத்தாறில் பன்னொன்றில் பாவர்
அமரிலோ உபசயமா மானதிரி கோணத்
தாமூன்று கேந்திரத்தில் உச்சங்கள் தன்னில்
தன்மனையில் சுபர்நிற்கத் தகுராஜ யோகம்
தேமூன்றும் முதசசி யிருந்தரா சிக்குள்
செறியுமதி பதினையுஞ் சென்மரா சிக்குள்
பாமூன்றின் அதிபதியும் மற்றோர் பாராமல்
பகைத்தசனி பார்க்கில்சன் னியாசியெனப் பகரே

**விளக்கம்**

சன்ம லக்கினத்திற்கு **3,10, 10 – 11** ஆகிய உபஜெயங்களில் தீய கோள்கள் இருந்தால் அது உபசய யோகமாகும். கேந்திரங்களிலும், திரிகோணங்களிலும் நற்கோள்கள் இருந்தாலும், அவ்வீடுகளுக்கு உரிய கோள்கள் ஆட்சி பெற்றிருந்தாலும் இராஜயோகம் உண்டாகும்.

மேற்சொன்ன மூன்று இராசிகளில் ஒன்றில் சந்திரன் இருந்து இச்சந்திரனைப் பகை பெற்ற சனி மட்டும் பார்த்தால் சன்யாசியாவான்.

**இராச யோகம்**

பகருமைந்த னுக்கிரண்டா மிடத்தில் இருந்து
பண்புடன்மூன் றாமிடத்தில் அரசன்தானும்
சுகமறிய வேஇருந்தால் ராஜயோகம்
சன்மலக்கி னங்கள்வி ரிச்சிகமே யாதி
நிகரிலந்த மனையைச்சேய் நின்று பார்க்கில்
நிலமெல்லாம் புரந்தருளும் ராஜயோகம்
நகர்கடக லக்கினத்தில் சசிக்கேழ் செவ்வாய்

நண்ணிடில் ராஜயோகம் என்பார் நல்லோர்

**விளக்கம்**

சனிக்கு 2இல் சந்திரனும், 3இல் குருவும் இருப்பது இராஜ யோகம். இலக்கினம் விருட்சிகமாக இருந்து அதில் செவ்வாய் இருந்தாலும், பார்த்தாலும் நஞ்சை, புன்செய், கிராமம், ஊர் போன்றவற்றைத் தேடி இராசுயோகத்துடன் வாழ்வான். இலக்கினம் கடகமாக அதில் சந்திரன் இருந்து அதற்கு 7இல் செவ்வாய் இருந்தாலும் இராஜயோகம் தரும்.

**இராசயோகம்**

ஆளும் கற்கடகம் சென்மம்
ஆகவே இரவி பொன்னாம்
கோளு மேயுச்ச மாகக்
குளிர்புதன் வெள்ளி தாமும்
நீளம் தன்வீட்டில் நிற்க
நுண்ட பாக்கியாதி தாமும்
மீளும் கேந்திரத்தில் நிற்க
வேண ராச்சியம் புரப்பன்

**விளக்கம்**

இலக்கினம், கடகமாக, சூரியன் மேடத்தில் உச்சமாகவும், குரு கடகத்தில் உச்சம் பெறவும், சுக்கிரனும், புதனும் ஆட்சி பெறவும், குரு கேந்திரங்களில் ஒன்றில் நிற்கவும் பிறந்த சாதகன் பல நாடுகளைத் திறமையுடன் ஆளும் மிகு இராஜ யோகம் பெற்றவனாம்.

**மேலது**

புரக்கும் புதனும் தானுச்சம்
பொருந்தும் இரண்டா மிடம்வெள்ளி
இருக்க வளரும் பிறை அரசன்
இருவர் கூடிப் பலவானாய்
தருக்கி இருக்க வெகுபூமி
தனக்கு மன்னன் தானாகிப்
பெருக்கும் வித்தை பிரபலமே
பிரசங் கிக்கும் துரையாவான்

**விளக்கம்**

புதன் இலக்கினத்தில் உச்சம் பெறவும், 2இல் சுக்கிரன் ஆட்சி பெறவும், வளர்பிறைச் சந்திரனும், குருவும் வலுப்பெற்றவர்களாகச் சேர்ந்து இருக்கப் பல நாடுகளுக்கு உரியவனாகச் சாதகன் இருப்பான். அறிவாற்றலில் கல்வி

கேள்விகளில் மேம்பட்டு விளங்கிச் சிறந்த சொற்பொழிவாளனாக இருந்து பலர் போற்றப்புகழுடன் வாழ்வான்.

**அனபா (இலாபமற்ற) யோகம்**

துரையாம் சனிக்கும் சுக்கிரர்க்கும்
நடுவே சோமன் தானிருந்தால்
உரையாய் அனபா யோகதிதில்
பலன்கள் நீதி யுளன்போகி
தரையாள் மன்னர் கைப்பொருளைத்
தான்கைக் கொள்வன் குலசிரேட்டன்
புரையா சார பாவன்தா
னியவான் புறக்கிரா மணியாமே

**விளக்கம்**

சனிக்கும், சுக்கிரனுக்கும் இடையில் சந்திரன் இருந்தால் அனபா யோகம். இந்த யோகம் பெற்றவன் நீதிமான். பெண்ணாசை உடையவன். பல நாடுகளை அரசாளும் இராஜாதி ராஜர்களுடைய பொருட்களைக் கைப்பற்றுபவன். ஆசார சீலன். தனதான்ய சம்பந்துகளுடன் ஊராட்சி, பேரூராட்சி ஆகியவற்றில் தலைவராகப் பணியாற்றுவான்.

**நீசபங்க ராஜயோகம்**

கண்டருளு நீசபங்க ராஜ யோகம்
காணும் வகை நீசத்தா னத்து வேந்தும்
திண்டிறல்சேர்ந் திடும்அவ்வீட் டுக்குச்ச வேந்தும்
திங்கள்கேந் திரந்தன்னில் சேர்ந்தா ராகில்
மண்டியிடு நீசபலனொ ழிந்து கீர்த்தி
மகாராஜ ராஜனென வாழ்ந்திடுவன் பூவில்
கொண்டபலர் நீசத்தி லிருந்தாலும் ஒருகோள்
குறிநீசங் கெடிலெல்லாக் கோளும்நன்றாமே

**விளக்கம்**

ஏதாவது ஒரு கோள் நீசம் அடைந்து இருந்தால் நீசம் பெற்ற இராசிக்கு உரிய கோள் உச்சம் பெறவும், நீசமும் உச்சமும் பெற்ற கோள்கள் சந்திரனுக்குக் கேந்திரங்களில் நின்றாலும் கெடுதியைச் செய்யும் நீசபலன் அனைத்தும் நீங்கிச் சாதகன் நல்ல புகழுடன் மேலான வாழ்க்கையைப் பெற்று அரசனைப் போல் வாழ்வான். பல கோள்கள் நீசம் பெற்று அதில் ஒரு கோளுக்கு மட்டும் நீசபங்க ராஜ யோகம் ஏற்பட்டால் மற்ற நீசக் கோள்களும் யோகம் தரும்.

**பர்வத யோகம்**

ஆமேடம் எருதுசுறா நண்டு கன்னி
ஐந்திடத்தில் கருநாகம் அமர்ந்து நிற்கில்
பூமேடை தனில்துயிலும் இராஜயோகம்
போற்றிடுவர் வேறின்னும் புகலக் கேளாய்
ஏமாறாதே நான்கு கேந்தி ரத்தும்
இடைவிடாமற் கிரகம் இருந்த தாகில்
தேமேவு பர்வதமாம் யோக மாகும்
சீமானா குவன்ராஜ யோகஞ் செப்பே

**விளக்கம்**

இராகு, மேடம், இடபம், கடகம், கன்னி, மதுரம் ஆகிய இராசிகளில் இருந்து இராகுவிற்கு 1–4–7–10 களில் இடைவிடாது எந்தக் கோளாவது இருப்பின் பர்வதயோகம். இதன் பலனாய் செல்வச் சீமானாய் அனைத்து வசதிகளையும் சாதகன் பெற்று வாழ்வான்.

**வாக்கு யோகம்**

ஏய லக்கின மீனத்தோற்கு
எழில்தண்டு நண்டு எருத்தில்
நேய மாய்கருங் கோளொன்று
நின்றிடில் ராஜ யோகம்
ஆய லக்கின மேகும்பம்
அதனில் பொன்ன ணுகப்புந்தி
தூய நல்லுச் சமாகத்
துரைநல் வாக்கர சாய்ச்சொல்வாய்

**விளக்கம்**

மீன லக்கினமாக இடபம், மிதுனம், கடகம் ஆகிய இராசிகளில் ஏதாவது ஒன்றில் இராகு இருந்தால் இராஜ யோகம் தரும். கும்ப இலக்கினமாக, அதில்

குருவும் இருக்க, புதன் உச்சம் பெறப் பிறந்தவன் நல்ல உயர்ந்த அந்தஸ்தும், நல்ல வாக்கு வன்மையும் பெற்று அரசனைப் போல் வாழ்வான்.

### இராஜ யோகம்

சொல்லிய சென்மம் தன்னில்
சோமனும் குருவும் கூடி
நல்லதோர் பத்தில் நான்கில்
சுக்கிரன் நயந்து நிற்க
அல்லலற் றிவரை உச்சம்
ஆனதோர் சனியும் காண
வல்லமை யரசர்க் கொப்பாய்
வாழ்வன் மானிலத் தின்மீதே

**விளக்கம்**

இலக்கினத்தில் குருவும், சந்திரனும் இருந்து 4, 10 ஆம் பாவங்களில் சுக்கிரன் இருந்து உச்சம் பெற்ற சனி பார்க்க அச்சாதகன் வீரமும், புகழும், திறமையும் படைத்த அரசனுக்கு நிகராக இவ்வுலகில் வாழ்வான்.

### தர்ம கர்மாதி யோகம்

மாதேகே டன்ம யோக
வகைகன்ம மன்ன னோடு
தாதை யுங்கூடி எந்தத்
தலத்தினி லிருந்த போதும்
ஓதிய ஒருவர் வீட்டில்
ஒருவர் மாறா யிருந்த
போது மாறாத செல்வம்
பொருந்திடும் ராஜ யோகம்

**விளக்கம்**

10, 9 ஆம் அதிபதிகள் இணைந்து எங்கிருந்தாலும், அல்லது ஒருவர் வீட்டில் ஒருவர் மாறியிருந்தாலும், அச்சாதகன் குறைவிலாத நல்ல வழியில் ஈட்டிய செல்வத்தைப் பெற்று இராச யோகத்தோடு இருப்பான்.

### பர்வத ராஜ யோகம்

யோக மிமி லக்கினாதி
இருந்த வீடுடை யோனுச்சம்
ஆகக் கேந்திரத் துற்றாலும்
பர்வத யோக மாமே
ஏக மாமனை பொன்றானும்

இருந்த வங்கிசத் தோன்தானும்
வாகு கேந்திர கோணத்தில்
வரின்மன் னர்மன் னன்ஆமே
விளக்கம் பர்வத யோகம்
மன்னிய சென்ம முன்பின்
மனைக்கிறை இருவர் கூடி
பன்னு கேந்திரத் திருக்கில்
பர்வத யோகம் என்ப
மின்னனை யாற்கு நேயன்
வெகுசவுக் கியவான் வேந்தன்
துன்னிய கீர்த்தி யுள்ளான்
துரகாதி பதியு மாவான்

**விளக்கம்**

இலக்கினத்திற்கு 2, 12ஆம் அதிபதிகள் இணைந்து கேந்திரம் பெறுமானால் பர்வதயோகம். இந்த யோகம் இருந்தால் பெண்ணாசைமிக்கவர். வசதி வாய்ப்புகளை உடையவர். அரசனைப் போல் உயர்வு பெற்றவர். மிகுந்த புகழோடு கோட்டைக் காவலின் தலைவனாகவும் இருப்பவர்.

**தேவேந்திர யோகம்**

ஆனதோர் பணப ரத்தில்
அடுத்த லக்கினத் தில்சோமன்
தானுற கேந்தி ரத்தில்
தமனி யன்தா னும்மேவ
வான வர்க்கு அரசயோகம்
மதிமகன் உச்ச மாகப்
கூனவில் லங்கி சத்தில்
தோன்றிடிற் செங்கோல் வேந்தாகும்

**விளக்கம்**

பண பரஸ்தானங்களான 2, 5, 8, 11களுக்கு அடுத்த இராசியில் சந்திரன் இருந்து கேந்திரத்தில் சனி இருப்பது தேவேந்திர யோகம் எனப்படும். மேலும் புதன் உச்சம் பெற்று, அம்சத்தில் தனுசு ராசிக்கு அதிபனாகிய குருவின் அங்கிசம் பெற்றிருந்தால் அரசாளும் யோகம் தரும்.

**நாபியோகம்**

உள்ளதோர் கடக லக்கினம் ஆக
உயர்குசன் குருவிரு வருமாய்
உற்றதோர் மேச நண்டு தேளும்
உறைந்திடப் பாவரை ஒழிக்கத்
தெள்ளிறை யாக வுறைந்திடில் தீர்க்க
சீவியாம் துரகாதி பதியாம்
செய்யலக் கினமாறு ஏழுடன் எட்டில்
செப்புமித் தலங்கள் நான்கிலும்
கள்ளமாய்ப் பாவர் அன்றிநல் லோர்கள்
காதலித் திடைவிடா திருக்கில்
கருதிய நாபி யோகமாம் இதற்குக்
கனபலன் மந்திரி யாகி
வள்ளலாய்ச் சேனைத் தலைவராய்க் கலவி
மாதர்கள் பலர்க்கு நாயகனாய்
வாலிப முதலாய் வெகுதனம் படைத்து
வாழ்வனென் றுரைப்பர் மாதவரே

**விளக்கம்**

கடக லக்கினமாக, செவ்வாயும், குருவும், சந்திரனும் இணைந்து மேடம், கடகம் என்னும் இராசிகளில் இருந்து பாவிகளுடன் சேராமலும், பாவிகள் பார்க்காமலும் இருந்தால் நிறைந்த ஆயுளைப் பெற்று, குதிரைப் படைத் தலைவனாய் இருப்பான். 1–6–7–8ஆம் பாவங்களில் தீய கோள்களுடன் சேராத நற்கோள்கள் வரிசையாக இடைவிடாதிருக்குமானால் அது நாபியோகம் எனப்படும். இதன் பலனால் சாதகன் அமைச்சனாகி, வாரி வழங்கும் வள்ளலாகவும், படைத் தளபதியாகவும் இருப்பான். விலைமாதர் பலருடன் நட்புடையவனாய் இருப்பான். வாலிப வயது முதலாகப் பெருஞ்செல்வங்களைப் பெற்று நலமுடன் இருப்பான்.

**மாலா – கத்திரி – கேந்திர யோகங்கள்**

மாதுகேள் மாலா யோகம் அம்புலிக்கு
மன்னிய பத்தினில் குருவும்
வந்துதான் இருக்கில் தனபதி யாகிய
மருவு சேனைக்கு அதிபனுமாம்
ஓதிய இரண்டில் இருவரும் ஐந்தில்

உபயரும் கூடியே இருக்கில்
உரைப்பர் கத்திரி யோகபலன் தருமம்
ஒன்றையு மாக வொட்டாது
தீதற வொன்றில் நான்குபத் தேழில்
சேரவொன் பதின்மரும் இருக்கில்
செப்பிடும் அரச கேந்திர யோகம்
தெரிபலன் மகம்புரிந் திடுவன்
நீதியாய் தனங்கள் தேடிவாழ்ந் திருப்பன்
நேமியில் தமர்முதல் பலரும்
நேயமாய்த் துதிக்கத் தனிமனு சனுமாய்
நிருபர்கொண் டாடவே இருப்பன்

**விளக்கம்**

சந்திரனுக்கு 10இல் குரு இருப்பது மாலா யோகமாகும். இந்த யோகத்தைப் பெற்றவர் செல்வந்தராய், இராணுவப் படைக்குத் தலைவராய் இருப்பார். 2, 5களில் குருவும், சந்திரனும் இணைந்திருக்கவும், 5இல் புதன் போன்ற உபயராசிக்குரிய கோள்கள் சேர்ந்து இருக்கவும் அதனைக் கத்திரி யோகம் என்பர். இது எத்தகைய நல்ல செயல்களையும் செய்ய விடாமல் தடை செய்யும். 1–4–7–10 களில் அனைத்துக் கோள்களும் வரிசையாகவும், தனித்தும், கூடியும் இருப்பின் அது மிகச் சிறப்பாகக் கூறப்படும் அரச கேந்திர யோகமாகும். இதன் பயனால் சாதகன் யாகம் செய்வான் அல்லது செய்விப்பான். நன்னடத்தையுடைய நேர்மையாளனாய் இருப்பான். நேர்மையான வழியில் செல்வத்தை ஈட்டி நலமாக இனிது வாழ்ந்திருப்பான். சுற்றத்தார் இவனை மதிக்கவும் போற்றவும் செய்வர். பெரிய மனிதர்களால் பாராட்டப்படுவான்.

**தீய யோகங்கள்**

**(விக்க – அவ – சிங்கடா யோகங்கள்)**

இருமைசேர் பத்தில் நான்கில் கிரகம்
இருந்திடில் விக்கயோ கமதாம்
இதன்பலன் தூது நடந்துதான் திரிந்தே
இன்னலால் கலக மிட்டிடுவன்
ஒருமைசேர் சன்மம் தனிலே பாவர்
ஒரேழினில் உத்தமர் இருக்க
ஓதிடும் அவயோ கங்கள்பொய் உரைப்பன்
உறுசிறை வெகுதினம் இருப்பன்

பருமைசேர் உச்ச கேந்திரம் தன்னில்
பாவர்கள் மேவியே இருக்கில்
பாவியாம் குரூர மன்னவ னாகிப்
பார்தனக் கரசனாய் இருப்பான்
அருமைசேர் ஒன்றைந் தொன்பதில் கிரகம்
அணுகில் சிங்கடா டவியோகம்
அதன்பலன் தீர்க்க ஆயுள் உண்டாகி
அம்புவி தன்னில் உற்றிடுவன்

**விளக்கம்**

இலக்கினத்திற்கு 4, 10 களில் சுக்கிரன், புதன் ஆகிய நற்கோள்கள் இருப்பின் அதற்கு விக்க (அச்சுறுத்தல்) யோகம் என்று பெயர். இந்த யோகம் உடையவன் தனக்குத் தொடர்பு இல்லாதவர்களிடம் வலிந்து சென்று அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட செய்திகளைப் பலவாறு திரித்துக் கூறி கோள்மூட்டும், பிறர் நலனைக் கண்டு கோபமுறும் குணமுடையவன்.

சன்ம லக்கினத்தில் தீயவையான சூரியன், சனி, இராகு, கேது ஆகியவற்றில் ஒன்றோ பலவோ இருக்க, 7இல் நல்லவை தனித்தோ, கூடியோ நட்புடன் இருக்க இது அவயோகம் எனப்படும். இந்த யோகமுடைய சாதகன் பொய் பேசுபவன். நீண்ட நாள் சிறையில் இருப்பவன். தீயவையான சனி, செவ்வாய், இராகு, கேது ஆகியவை கேந்திரங்களில் இருந்தால் கெட்ட நடத்தையும், தீய எண்ணமும் உடைய அரசனாகி வாழ்வான்.

இலக்கினத்திற்கு 1–5–9 களில் தவறாது கோள்கள் இருப்பின் சிங்கடாடவி (சிங்கவனம்) யோகம். இதன் பலனால் நீண்ட ஆயுளைப் பெற்று வாழ்வான்.

**இலை – வச்சிர யோகங்கள்**

உற்றமெய் லாப மதில்கிர கங்கள்
உறிலிலை யோகமாம் – உழவன்
ஒருமைநல் லோரொன் றேழினில் இருக்க
உண்மைசேர் வச்சிர யோகம்
மற்றநற் பலன்தீர்க் காயுளும் கீர்த்தி
மன்னிய கிருபையுள் ளவனாம்
மன்னவன் சனிசெவ் வாய்கதிர் நால்வர்
மருவிய மூன்றாமிடத் திருக்கப்
பெற்றிடி லுச்சாங் கிசம்சுயாங் கிசங்கள்

பெறின்மக ராஜயோ கந்தான்
பெருமையிந் நால்வர் சென்மமீ திருக்கப்
பிறைதன தகத்துறில் புவியில்
குற்றமில் லாமகா  ராஜன் மெய்யில்
குறைவற மறைந்து இருக்க
கோளொரு நால்வர் மதிதனைக் காணக்
கொற்றவ னாமெனக் கூறாய்

**விளக்கம்**

இலக்கினத்திற்குப் பதினொன்றில் கோள்கள் இருந்தால் அது இலை யோகம் எனப்படும். இதன் பலனால் சாதகன் வேளாண்மை செய்வான்.

இலக்கினத்திற்கு ஏழில் நற்கோள்கள் இருக்க, செவ்வாய் இலக்கினத்தில் இருக்க அதற்கு வஜ்ர (உறுதி) யோகம் என்று பெயர். இதனால் சாதகன் நல்ல பலன்கள் பலவற்றைப் பெறுவான். நிறைந்த ஆயுளும், புகழும், கருணையும் உள்ளவனாக இருப்பான்.

இலக்கினத்திற்கு மூன்றில் குரு, சனி, செவ்வாய், சூரியன் ஆகியவை இணைந்து உச்சாங்கிசமாகவும், சுயாங்கிசமாகவும் இருப்பின் இராஜயோகம் உண்டாகும். மேலே கூறிய நான்கு கோள்களும் இலக்கினத்தில் இருக்கவும், சந்திரன் கடகத்தில் இருக்கவும் பிறந்த சாதகன் எல்லா நலன்களும் பெற்று உண்மையுடனும், அமைதியுடனும் அரசனாக வாழ்வான். இந்த நான்கு கோள்களை வளர்பிறைச் சந்திரன் பார்த்தாலும் அரசாளும் யோகம் பெறுவான்.

**இராச யோகம்**

கூறறி மதிசேய் உச்சமாய்ச் சன்மம்
குலவுவில் மிதுனம் மேல்பாரில்
கொற்றவன் சென்மத்து இந்தொடு சனியும்
குசனுமே கூடவில் லதனில்
ஏறிடக் கதிர்மே சத்துற மன்னாம்
இயைந்தமுன் புராதன பூமி
இழந்து போய்விடுவன் இடபலக் கினமாய்
இதில்பிறை சனிகுரு வெய்யோன்
பேருடன் இருக்கில் ராஜயோ கமதாம்
பின்னுமே கன்னிலக் கினமாய்ப்
பிறைமகன் உச்சமாக நாலிடத்தில்
பிருகுசந் திரன்குரு இருக்க
வீறுடன் ஐந்தாம் இடத்தினில் சனிசேய்
மேவியே இருவரும் இருக்க
வெற்றிநற் குணங்கள் உள்ளமன் னவனாம்
மேதினி நீதியாய்ப் புரப்பன்.

**விளக்கம்**

சந்திரனும், செவ்வாயும் உச்சம் பெற்று தனுசு அல்லது மிதுனத்தில் இருக்க அதில் ஒன்றே இலக்கினமாக, அதற்கு மேல் குரு இலக்கினத்தில்

சந்திரன், சனி, செவ்வாய் ஆகியோருடன் கூடி இருக்க, அல்லது தனுசு ராசியில் இருக்க, சூரியன் மேட ராசியில் இருக்க சாதகன் முன்னோர் வழி வந்த பரம்பரைச் சொத்துகளை இழந்துவிடுவான்.

இடப லக்கினமாகி அதில் சந்திரன், சனி, சூரியன். குரு ஆகியவை கெடாது இருந்தால் இராச யோகம் உண்டாகும்.

கன்னி இலக்கினமாகிப் புதன் உச்சமாகவும், 4இல் சுக்கிரனும், சந்திரனும், குருவும் இருக்க, 5இல் சனியும் செவ்வாயும் இருக்க நீதிமானாகவும், அரசாளும் யோகம் பெற்றவன் ஆகவும் இருப்பான்.

**இராச யோகம்**

புரக்குமே கன்னி லக்கினம் ஆனதில்
புந்தியும் பத்தினில் புகரும்
பொன்பிறை மூவர் கூடியே இருக்கப்
பூபதி ஆகியும் இருப்பன்
பரக்குமெய் சிங்க மாயதில் செவ்வாய்
பரிந்துற ஏழிடம் தன்னில்
பனிமதி அரசன் இருக்கவே தனுசில்
பானுவின் புத்திரன் மேவ
இரக்கமாய் மைந்தர் தானும் இல்லாமல்
இப்புவி புரக்கும்மன் னவனாம்
எண்ணிய பத்தில் சசிபதி னொன்றில்
ஏழிற்சனி லக்கினத் தரசன்
வருக்கமாய் இரண்டில் புதன்குசன் இருக்க
வாகனம் திரவியம் மருவ
மாநிலம் புரக்கும் நரேந்திரன் ஆவான்
வாளயில் போல்விழி யாளே.

**விளக்கம்**

இலக்கினம் கன்னியாக இருக்க, அதில் புதன் இருக்க, 10இல் சுக்கிரன், குரு, சந்திரன் ஆகிய மூன்றும் சேர்ந்து இருக்கச் சாதகன் நாடாளும் அரசனாக இருப்பான். சிம்மலக்கினமாகி அதில் செவ்வாய் இருக்கவும், ஏழில் சந்திரனும் குருவும் சேர்ந்து இருக்கவும், தனுசுவில் சனி இருக்கவும் பிறந்த சாதகன் குழந்தைப் பேறு அற்றவனாக, மன்னனாக இருப்பான். பத்தில் சந்திரனும், 11 இல் சனியும், இலக்கினத்தில் குருவும், 2இல் செவ்வாயும், புதனும் இருக்கப் பிறந்தவன் உயர்ந்த ஊர்திகளையும், அதிகப்படியான திரவியங்களையும் பெற்று ஆட்சி செய்யும் மக்கள் தலைவனாக ஆவான்.

**சக்ரயோகம்**

ஆண்டினில் கேந்திர வானதி னல்லோன்
ஊண்டிடும் பாவர்கள் ஒன்றுவிட் டொன்றுறில்
தாண்டிய சக்கர யோகத் தளபதி
நீண்டிய பலபர வயதினில் சயமே

**விளக்கம்**

நற்கோள்களான சந்திரன், புதன், குரு, சுக்கிரன் ஆகியவை கேந்திரம் பெற்றும், தீய கோள்களான செவ்வாய், சனி, இராகு, கேது ஆகியவை ஓர் இராசி விட்டு ஓர் இராசியிலும் இருந்தால் அச்சாதகனுக்கு உண்டாகும் சக்ரயோகத்தால் நிறைந்த ஆயுளைப் பெறுவான்.

**வீணை யோகம்**

ஆமே கிரகமேழு மனையமர்ந்தால்
வீணை யோக முமினித்
தாமே நிபுண னெழிலுடையன்
சப்த குதப் பிரியமுளன்
தோமே நாலே லொன்றிலுறச்
சொல்லும் அதிக யோகபலன்
மாமே அரசன் பிரதாபி
வந்தே ஆண்டு நூறிருப்பான்

**விளக்கம்**

கோள்கள் வரிசை பெற்று ஏழு வீடுகளில் இருப்பது வீணை யோகம். இவனுக்கு இணை இவனே என்று கூறக்கூடிய வெகு சாமாத்தியம் நிறைந்தவன். நல்ல நடத்தையுள்ளவன். இசையில் விருப்பமுள்ளவன் என்பன இதன் பலன்களாகும். இக்கோள்கள் 1–4–7 ஆம் வீடுகளில் இருந்தால் சிறப்பான யோகப்பலனை உண்டாக்கும். அதன் பலனால் குதிரைப் படைகளை உடைய

அரசனும், புகழ் வாய்ந்தவனும், நூறு வயது வரையில் நலமுடன் வாழ்பவனும் ஆவான்.

**பட்சி – துரி யோகங்கள்**

இருபத்து நான்கில் கோளிருக்கப்
பட்சி யோகப் பலன்
பொருந்தும் தேச சஞ்சாரம்
புகலும் ஞானி கலகமுளன்
வருந்து சசியில் இருபுறமும்
வரவே நல்ல துரியோகம்
திருந்து யோகன ஈசுவரியன்
தேச ஜனத்துக் கதிபதியே

**விளக்கம்**

2, 4, 10ஆம் பாவங்களில் கோள்கள் இருந்தால் பட்சி யோகமாம். பல நாடுகளைச் சுற்றுதலில் விருப்பம், ஞான வழி நடக்கும் துறவி, கலகம் செய்வதில் விருப்பம் என்பன இதன் பலனாம். சந்திரனுக்கு இருபுறமும் நற்கோள்கள் இருந்தால் துரியோகமாம். மேலான வசதி வாய்ப்புகளைப் பெறுதல், செல்வத்தைப் பெறுதல், மக்களின் பிரதிநிதியாக இருந்து புகழ் பெறுதல் என்பன இதன் பலனாம்.

**வச்சிர – அவயோகங்கள்**

என்றால் ஒன்றேழ் சுபரிருக்க
வினிநால் பத்தில் பாவர்களும்
அன்றே யுறில்வச் சிரயோகம்
ஆதி அந்தத்து ஐசுவரியம்
நின்றே சூர தத்துவமும்
நிகழும் வயதில் தனபதியாம்
நன்றே மாரிக் கோள்வரினும்
நாடும் இனிய அவயோகம்

**விளக்கம்**

நற்கோள்கள் 1–7 களிலும், தீய கோள்கள் 4–10 களிலும் இருப்பது முதல் முதுமை வரை அனைத்து வசதிகளையும் நலங்களையும் பெற்று வீராதி வீரனாக வாழ்ந்து தனக்கு ஏற்ற வயது வரும் போது மிகப் பெருஞ் செல்வந்தனாக ஆவான் என்பவை இதன் பலனாம். 1–7 இல் தீயவையும், 4–10இல் நல்லவையும் எனக் கோள்கள் மேற்சொன்ன முறைக்கு மாறியிருந்தால் அது அவயோகமாகும். கொடிய பலன்களை இதனால் சாதகன் அனுபவிப்பான்.

**குதிரை யோகம்**

யோகம் சுகமாம் லக்கினத்துக்
கொன்றே நல்லோர் முன்னிருக்கப்
போகன் தனவான் வாழரசன்
பொருந்தும் பின்னே கிரகமுறில்
ஆகு மஸ்வ யோகமதா
மணிசன் மத்தி னிருபுறமும்
தாக முடனே சுபரிருக்கில்
தானும் அரசன் எனவருமே

**விளக்கம்**

இலக்கினத்துக்கு முன்வரிசையில் நற்கோள்கள் இருந்தால் உயர்வான நல்ல சிறப்புகளை அனுபவிப்பவனும், பெண்ணாசையில் அதிக நாட்டமுடையவனும், மேன்மையுடன் வாழும் அரசனும் ஆவான். இலக்கினத்ழக்குப் பின்வாரிசையில் நற்கோள்கள் இருந்தால் குதிரை யோகம் என்று பெயர். இலக்கினத்திற்கு முன்னும் பின்னும் நற்கோள்கள் இருந்தால் பெருமையும் புகழும் உடைய அரசனாகத் திகழ்வான்.

**நீச – அரச யோகம்**

வருமே சன்ம லக்கினாதி
வந்தும் இந்திரன் தன்வீடும்
பொருமே உச்ச மனையிரண்டில்
புகரும் கூடில் தனவானாம்
தருமே சன்மம் சிங்கமது
தன்னில் பரிதி தானிருக்க
அரிவை மனையில் புதனிருந்தான்
ஆனால் நீச அரசனுமாம்

**விளக்கம்**

இலக்கினாதிபதி நட்பு வீட்டிலும், உச்ச வீட்டிற்கு இரண்டாம் இராசியில் சுக்கிரனும் நிற்கப் பிறந்த சாதகன் பெருஞ் செல்வந்தனாக இருப்பான். இலக்கினம் சிம்மமாக அதில் சூரியன் இருக்க, கன்னியில் புதன் இருக்க அச்சாதகன் இழிதொழில் செய்யும் அரசனாக இருப்பான்.

**உலகாளும் யோகம்**

அரசே மூன்றில் ஈரைந்தில்
ஆறில் இருக்கச் சென்மாதி
சிரசாய் நல்லோர் தனைப்பார்க்கச்
செகத்துக் கதிப னாகுமிவன்
சரமாம் துலாத்தில் புகர்மேசம்
தன்னில் செவ்வாய் கடககுரு
பொரவே நிற்கத் தனபதியாய்ப்
பொருந்தும் அரசன் கண்டீரே

**விளக்கம்**

இலக்கினாதிபதி **3–6–10** களில் இருந்து நற்கோள்களால் பார்க்கப்பட்டால் அவன் உலகை ஆளும் யோகம் படைத்தவன் ஆவான். துலாத்தினில் சுக்கிரன் இருக்க மேடத்தில் செவ்வாயும், கடகத்தில் குருவும் நிற்கப் பிறந்த சாதகன் உயர்ந்த நிலையிலான செல்வங்களைப் பெற்று பலர் போற்றப் புகழுடன் வாழும் அரசன்.

**அரசாளும் யோகம்**

கண்ட ரிசபம் சென்மமதாய்க்
காணும் மதியாந் தானிருக்கக்
கொண்டு பரிதி சிங்கத்திற்
கூறுந் தேளிற்குக் குருவிருக்க
மண்டு கும்பச் சனிவரினும்
வந்தால் ராஜ யோகபலன்
பண்டே யுள்ள பூபதியாய்ப்
பாருக் கரசாய் இருந்திடுவன்

**விளக்கம்**

இடப லக்கினமாகி அதில் சந்திரன் உச்சம் பெறவும், சூரியன் சிம்மத்திலும், குரு விருட்சிகத்திலும், சனி கும்பத்திலும் இருக்கப் பிறந்தவன்இந்நில உலகிலுள்ளோர் அனைவருக்கும் சிறந்த அரசனாக இருப்பான்.

**அரசாளும் யோகம்**

திடமாம் சென்மம் மகரமதாய்ச்
செப்புங் காரி தானிருக்க
அடைவே செவ்வாய் மதிகூடி
ஆனு கடகம் தானுறவே
தொடர் சேர்பரிதி சிங்கத்தில்
சொல்லும் மிதுனம் புந்தியுற
வடிவார் கோவில் புகரிருக்க
வாழும் துரகத் தரசனிவன்

**விளக்கம்**

இலக்கினம் மகரமாக அதில் சனியும், கடத்தில் சந்திரனும் செவ்வாயும், சிம்மத்தில் சூரியனும், மிதுனத்தில் புதனும், துலாத்தில் சுக்கிரனும் இருப்பின் குதிரையைப் பெற்றுள்ள அரசனாவான்.

**சாங்கியா யோகம்**

இவனே சன்ம நான்கொன்பது
தெல்லாக் கிரகம் இருந்திடவே
அவனே சாங்கி யாயோகன்
அதற்குப் பலன்கள் சவுரியாவான்
தவமெய் ஞானி பாக்கியவான்
தன்னில் குணவான் ஆமென்றே
நவமாய் உரைத்தார் சோதிடத்தோர்
நறைமென் கமல முகத்திருவே

**விளக்கம்**

இலக்கினம் 4, 9 ஆம் இடங்களில் அனைத்துக் கோள்களும் இருப்பது சாங்கியா யோகம். எதனையும் செய்து முடிக்கும் வல்லமையும் வீரமும் பெற்றவனாக, தவத்தை மேற்கொள்ளும் துறவியாக, மேலான செல்வம் படைத்தவனாக, ஒழுக்க சீலனாக இவ்யோகம் பெற்ற சாதகன் இருப்பான்.

**சாமுத்திரி யோகம்**

திருவே இரண்டாம் வீடு முதல்
செறியு மனைக்கொன் றொன்றொழிந்து
வரவே கிரகம் தானிருக்க
வாழும் சாமுத்திர யோகபலன்
பொரவே சேனைக் கதிபதியாய்ப்

பொருந்தும் பாரி அநேகருளன்
தருபொன் கீர்த்திக் கதிகாரி
தனவான் அரசன் வெகுபிள்ளை

**விளக்கம்**

இரண்டாம் பாவம் முதல் இடையே ஒரு வீடு விட்டு ஒரு வீடு என்றவாறு கோள்கள் இருந்தால் அதற்கு சாமுத்ரி யோகம் என்று பெயர். இதன் பலனால் மேலான செல்வத்தையும், நல்ல மனைவியர் பலரையும், புகழையும்,அதிகமான குழந்தைச் செல்வத்தையும், அரச பதவியையும் பெற்றுக் சாதகன் வாழ்வான்.

**குபேர யோகம்**

பிள்ளை அனுசம் அசுபதியின்
பின்பா மவிட்டந் தனில்சேயும்
துள்ளும் சென்மம் ஒருபத்தில்
சூழ்ந்தே பரிதி யுறவதனைத்
தெள்ளு மதியம் குருநோக்கில்
செறிமூன் றைந்திற் கிரகமிலாது
தள்ளி இருக்கில் குபேரனைப் போல்
தனத்துக் கதிப னெனச்சொல்வாய்

**விளக்கம்**

அசுவினி, அனுசம், அவிட்டம் ஆகியவற்றின் நான்காம் பாதங்களில் ஒன்றில் செவ்வாயும், 1–10 களில் ஒன்றில் சூரியனும் இருக்க, அவற்றைக் குருவும் சந்திரனும் பார்ப்பதும், 3, 5 களில் கோள்கள் இல்லாமல் இருப்பதும் சாதகனைக் குபேரனைப் போல் தனத்துக் கதிபதி யாக்கிச் செல்வம் நிறைந்த அரச வாழ்வினை வாழச் செய்யும்.

**இந்திர யோகம்**

சொல்லும் சென்மம் ஐந்ததனில்
தொடர்ந்தே பரிதி தானிருக்க
வெல்லு நான்கேழ் பத்ததனில்
விரும்பிச் செவ்வாய் மேவிடினும்
ஒல்லும் லாபம் பன்னிரண்டில்
உடனே பலனாய்ப் புகர்மேவ
நல்ல இந்திர யோகமென
நவில்வர் தமிழுக் கினியோர்கள்

**விளக்கம்**

1–5களில் சூரியனும், 4–7–10களில் செவ்வாயும், 11–12 களில் சுக்கிரனும் வலுவாக இருப்பது இலட்சாதிபதியாகக் கூடிய இந்திர யோகமாகும்.

**இராச யோகம்**

இனிய மகரம் சென்மமதாய்
இருக்கச் செவ்வாய் தனிலுச்சம்
தனிலே நவத்தின் பன்னிரண்டில்
தணிந்தே புகரும் தானிருக்க
இனமாம் இந்து கதிர்கூடி
ஏழினில் நிற்கப் பிரபலமாய்த்
தனமே திரளா யார்ச்சித்துச்
சம்மா னடத்து மானபரன்

**விளக்கம்**

மகர லக்கினமாகி அதில் செவ்வாய் இருந்து, 9, 12 களில் ஒன்றில் சுக்கிரன் தனியாக இருக்க, சந்திரனும் சூரியனும் இணைந்து வலுவுடன் 7இல் இருக்கத் திரண்ட சொத்துகளை ஈட்டுவதுடன் கப்பல் தொழிலும் சாதகன் செய்து வருவான்.

**சந்நியாசி யோகம்**

ஆன பரிதி சோமனிவர்
அமர்ந்து சுபாங்கிசம் ஏறித்
தான பலவான் ஆகியிவர்
தக்க வியத்தில் அடையாமல்
ஆன உச்ச அங்கிசையில்
அமர்ந்தே சனியை மிகநோக்கில்
ஈன மறவே திக்குபல
வியைந்தின் புறுவன் சந்நியாசி

**விளக்கம்**

சூரியனும் சந்திரனும் இணைந்து அம்சத்தில் வலுப்பெற்று 12இல் இல்லாமல் அம்சத்தில் உச்சம் பெற்றுச் சனியைப் பார்த்தால் அந்தச் சாதகன் பல நாடுகளிலும் சுற்றித் திரிந்து அதனால் மகிழும் ஞானியாக இருப்பான்.

**சுமத்ரா யோகம்**

வல்லோர் சென்மச் செம்பாம்பு
வரவே அதற்கேழ் சோமனுற

சொல்லும் சோமற் கெட்டதனில்
வெய்யோன் சுமத்திர யோகபலன்
சொல்லும் கிராம புரந்தரனாம்
துரையாம் வந்து ரட்சகனாம்
நல்ல வருசம் இருபதின்மேல்
நடக்கும் யோகம் இருமூன்றே

**விளக்கம்**

இலக்கினத்தில் கேதுவும், அதற்கு 7இல் சந்திரனும், சந்திரனுக்கு 8இல் சூரியனும் இருக்கச் சுமத்ரா யோகமாகும். இதன் பலனால் சாதகன் கிராமத்தின் தலைவனாக இருப்பான். கிராமத்தில் தலைவனாக இருப்பான். கிராமத்தில் உள்ளவர்களால் பெரிதும் மதிக்கப்படுவான். 20 வயது முதல் 26 வயது வரை இந்த யோகம் நடக்கும்.

**சரப யோகம்**

நடத்தும் பத்துக் கதிபதியும்
நான்கில் இருக்க நான்காதி
மிடத்த பத்தில் உடன்நிற்க
லக்கி னாதி யுச்சமுறில்
அடுத்த சரப யோகபலன்
அனேகம் சேனைக் கதிபதியாம்
கொடுத்த நாலா றதன்மீதில்
கூறும் யோகம் ஏழாண்டே

**விளக்கம்**

4–10ஆம் அதிபதிகள் பரிவர்த்தனையாகி, இலக்கினாதிபதி உச்சமாக இருப்பது சரப யோகம். இதன் பலன் படைத்தலைவனாக இருப்பான். 24 வயதிற்கு மேல் ஏழு ஆண்டுகள் வரை இவ்யோகம் இருக்கும்.

**சக்கர யோகம் பலன்**

ஆண்டு மூவே ழுதன் மீதில்
ஆன சக்கர யோகபலன்
நீண்ட சீவன் உள்ளளவு
நிறைந்தே பத்தில் கருநாகம்
பூண்ட பத்தாம் இடத்ததிபன்
பொருந்து சன்மம் தனிலிருக்க
வேண்டும் சன்மன் பாக்கியத்தில்

விளங்கில் தேசா திபதியாவன்

**விளக்கம்**

இலக்கினத்திற்கு 10இல் இராகுவும், 10ஆம் அதிபதி இலக்கினத்திலும் இருப்பது சக்கர யோகம். மேலும் இலக்கினாதிபதி வலுவாக 9இலிருப்பதும் யோகமே. அதன் பலனாய் சாதகன் பல நாடுகளுக்கு அதிபதியாய் இருப்பதுடன் 21 வயதுக்கு மேல் தன் இறுதிக் காலம் வரையில் சக்கரதார யோகங்களை அனுபவிப்பான்.

**நாகயோகம் – 1**

ஆவன் பத்தா திபனிருந்த
வங்கி சாதி சென்மத்தோன்
மேவும் பத்தை இருவோரும்
விரும்ப நாக யோகபலன்
கோவாம் வித்தை தனவானாம்
கூறின் வயது பதினாறின்
பூவுக் கரசாய் மூவாண்டு
பொருந்தி நடக்கும் தானிதுவே

**விளக்கம்**

பத்தாம் அதிபதி இருக்கும் அம்சாதிபதியும், இலக்கினாதிபதியும் 10ஆம் பாவத்தைப் பார்க்க நாகயோகம். இதன் பலன் ஒழுக்க சீலன் கல்விமான். செல்வமுடையவன். 16 வயதுக்கு மேல் மூன்று ஆண்டு வரையில் இவ்யோகத்தால் அரச அந்தஸ்தைப் பெறுவான்.

**நாகயோகம் – 2**

இதுவே குருவும் ஒன்பதினில்
இருக்க ஒன்பதின் அதிபதி
துதிசேர் ஏழில் இருந்திடவே
சோமன் சுபரோ டெங்குறினும்
கதிர்சேர் நாக யோகபலன்
கண்ட வயது பதினாறின்
புதிதாய் மூன்றாண்ட டளவுமிகப்
பொன்ஐஞ் ஞூறு தேடுவனே

**விளக்கம்**

சனலைக்கினத்திற்கு 9இல் குருவும், 9ஆம் அதிபதி 7இலும் இருக்க, சந்திரன் நற்கோளுடன் இணைந்து எங்கிருப்பினும் நாகயோகம். 16வயதில் இருந்து 19 வயது வரை 500 பொன்னைச் சம்பாதித்து வாழ்வான்.

**பேரி யோகம்**

தேடும் லாபன் தனபாவம்
திறல்சேர் அதிபன் உச்சனெனின்
நாடு மைந்தாம் வீட்டாதி
நண்ணும் தனத்தைப் பார்த்திடவே
கூடும் பேரி யோகபலன்
குதிரை யானை நரர்தேரும்
ஊடும் ஆறாத தன்மேலே
ஓங்கும் வருசம் நாலளவே

**விளக்கம்**

11, 2 ஆம் அதிபர்கள் உச்சம் பெற, 5ஆம் அதிபதி 2ஆம் பாவத்தைப் பார்க்கப் பேரியோகமாம். குதிரை, காலாள், தேர் ஆகியவற்றை 36 வயதுக்கு மேல் 4 ஆண்டுகள் வரை அனுபவிப்பான்.

**பதும யோகம்**

அளவே ஒன்பான் தனில்புகர்
அமர்ந்தே ஒன்பான் அதிபதி
வளமாம் மதிக்கே ஒன்பதனில்
வந்தால் பதும யோகபலன்
தளமோ டரசர் புடைசூழத்
தானும் பாராண் டகத்திலிருந்
துளவாந் தனம்ஐம் பதின்மேல்
ஓங்கும் வருசம் ஐந்தளவே

**விளக்கம்**

சுக்கிரன் 9இலும், ஒன்பதாம் அதிபதி சந்திரனுக்கு 9இலும் இருந்தால் பதுமயோகமாகும். அரசர் புடை சூழ அரசு செய்வதுடன் 50 வயதுக்கு மேல் 5 ஆண்டு வரை சிறப்பாக ஆட்சி செய்வான்.

**அரசாளும் யோகம்**

ஓங்கும் லக்கி னாதிபதி
உற்ற வீட்டிற் கதிபன்
பாங்காய் கேந்திரம் திரிகோணம்
பற்றி மூலத் திரிகோணம்
தாங்கும் உச்சன் ஆனாலும்
தக்க புரத்துக் கதிகாரம்
வீங்கும் பர்வம் ஏழைந்தின்
மேலொன் பானாம் ஆண்டுளதே

**விளக்கம்**

இலக்கினாதிபதி இருக்கும் வீட்டின் அதிபதி கேந்திரம், திரிகோணம், மூலத்திரிகோணம், உச்சம் ஆகியவற்றைப் பெற உயர்ந்த பட்டணத்திற்கு அரசனாவான். இந்த யோகம் 35க்கு மேல் 9 ஆண்டு வரை உண்டாகும்.

**காகள (ஒரு பறவை) யோகம்**

உளதே லக்கி னாதிபதி
உற்ற வீட்டுக் குடையோனும்
அளவா மதிவீட் டதிபதி
உச்சன்ஆகிச் சோமன் நாலேழில்
களவே கேந்திரம் ஏறிவரக்
காகள யோகம் திரவியவான்
வளவன் ஆகு நாலேழ்மேல்
வயதுள் ளளவும் ரசவாதி

**விளக்கம்**

இலக்கினாதிபதி நின்ற வீட்டின் அதிபதியும், சந்திரன் இருக்கும் வீட்டின் அதிபதியும் உச்சம் பெற்று இருக்க, சந்திரன் கேந்திரத்தில் இருப்பது காகள யோகம். இதன் பலனால் சாதகன் செல்வந்தனாக இருப்பான். 28 வயதுக்கு மேல் தான் உயிர் வாழும் காலம் வரை இரசவாதத் தொழில் புரிவான்.

**தாந்திரி யோகம்**

வாதி இரண்டாம் ஐந்தாதி
வருமே பாக்கி யாதிபனும்
ஓதும் சென்மம் தனிலுற்றே
ஒங்கும் அரசன் பார்வையுறில்
ஈது தாந்திரி யோகப்பல

னிவனே வெகுதே சாதிபதி
நீதி நடத்தும் பன்னிருமேல்
நேரும் வயதோர் ஆறளவே

**விளக்கம்**

**2–5–9**ஆம் அதிபதிகள் இலக்கினத்தில் இருந்து குருவின் பார்வை பெறுமானால் தாந்திரி யோகமாம். பல நாட்டுக்கு அதிபதியாய் இருந்து நீதி தவறாது அரசு செய்யும் இச்சாதகன் **12** வயதுக்கு மேல் **6** ஆண்டு வரை இவ்யோகத்தை அடைவான்.

**மிருதங்க யோகம்**

வயது ஆறெட்டு மேல்மூன்று
வருசம் மிருதங்க யோகபலன்
சுயலா பாதி யத்துச்சன்
சுங்கன் கூடி யிருந்தமனை
நயவீட் டுடையோன் பத்தேழு
நான்கி லொன்பான் அமர்ந்திடவே
செயமாய் அரசர்க் கதிபதியாய்
செப்பும் ஞானி தனவானே

**விளக்கம்**

**11**ஆம் வீட்டில் உச்சம் பெற்ற கோளும், சுக்கிரனும் இருந்து அந்த வீட்டின் அதிபதி **4–7–10–9**களில் இருந்தால் பலரையும் வெற்றி கொள்ளும் ஆற்றலும், அரசர்களுக்கு மேம்பட்டவனும், சிறந்த ஞானியும், செல்வந்தனும் ஆவான். **48** வயதுக்கு மேல் இவ்யோகப் பலனை அனுபவிப்பான்.

**சக்கர யோகம்**

செப்பும் லக்கினம் வர்க்கமேற
செறிந்தே இருக்கச் சென்மாதி
ஒப்பும் சபர்க ளுடன்கூடி
உறும்சன் மாதி சன்மத்தைத்
தப்பா முழுநோக் காகவிது
சக்கர யோகம் சவுக்கியவான்
அப்பா யைம்பான் ஐந்தின்மேல்
ஆன வருசம் நான்கினிதே

**விளக்கம்**

இலக்கினாதிபதி வர்க்கங்களில் வலுப்பெற்று நற்கோள்களுடன் இணைந்து இலக்கினத்தைப் பார்த்தால் சக்கரயோகமாகும். 55 வயதிற்குமேல் நான்கு ஆண்டுகள் இந்த யோகத்தால் நலமாக இருப்பான்.

**சாம்ராஜ்ய யோகம்**

இனிதாம் கன்னி சென்மமதாம்
இரண்டோ டொன்பா னாதிபதி
தனியே சுங்கன் இருந்தங்கி
சந்தோ னுமரச னுடன்கூடி
மனுவாம் தனபா வத்திருக்க
வயது பதினா றதன்மேலே
றனியார் சீவ னுள்ளளவு
நடக்கும் சாம்ராஜ்ய யோகம்

**விளக்கம்**

கன்னியா இலக்கினமாக 2, 9 ஆம் அதிபதிகள் தனித்திருக்க, சுக்கிரன் இருக்கும் அம்சாதிபதியும், குருவும் இணைந்து 2ஆம் பாவத்தில் இருக்க 16 வயதிற்கு மேல் இறுதிக்காலம் வரை சாம்ராஜ்ய யோகத்தை அளிக்கும்.

**யோகம்**

யோக மாதி யந்தமெனும்
உயரா திருத்தங் கிசாதிபதி
பாக சென்மம் திரிகோணம்
பத்தில் இருக்கச் சேயுச்சம்
வாகு பெறவே பத்தாதி
வந்தே ழிருக்கத் துர்க்காதி
போகம் உடனே வனங்களுக்கும்
தனியே அரசாய்ப் பொருந்திடுவன்

**விளக்கம்**

அம்ச லக்கினாதிபதி 1–10–5–9களில் இருந்து செவ்வாய் உச்சம் பெற, 10ஆம் அதிபதி 7இல் இருக்க அச்சாதகன் குதிரைப் படைகளும், போக இன்பமும் உள்ளவன். தெய்வானுகூலம் பெற்ற ஆன்மிகவாதியாகத் திகழ்பவன்.

**அரசாளும் யோகம்**

பொருந்தி வெய்யோன் பாக்கியத்தில்
புகத்துடன் நான்காம் அதிபதி

திருந்தி இருக்கப் பத்தாதி
சேர்ந்தோர் இரண் டேழிலுற
வருந்தாத் துர்க்காதித் ததிபதியால்
வைய முழுதும் அரசாளத்
தெரிந்தே யோக பலனென்று
செப்பும் கணித மாதவனே

**விளக்கம்**

சூரியன் **9** இல் இருக்க அதோடு **4**ஆம் வீட்டதிபதி சேர்ந்து இருக்க **10** ஆம் அதிபதி **2,7** களில் இருக்கப் பிறந்தவன் குதிரைகளைப் படைத்து அரசாள்வான்.

**கோடீஸ்வர யோகம்**

மாதே நான்காம் அதிபதி
வந்தே இரண்டாம் ஆதியுடன்
மீதே கூடிப் பாக்கியத்தில்
விரைந்தே இருக்கப் பத்தாதி
போதும் இரண்டில் பலவானாய்
பொருந்தி இருக்க லாபாதி
ஓதும் லக்கி னாதிபதி
உச்சம் கோடியி லயிஸ்வரியன்

**விளக்கம்**

**2, 4** ஆம் அதிபதிகள் **9**இல் இருக்க, **10** ஆம் அதிபதி **2**இல் வலுப்பெற்று இருக்க, **1–11** ஆம் அதிபதிகள் உச்சம் பெற்று இருக்க கோடி ஐஸ்வரியம் கிட்டும் யோகத்தைச் சாதகன் அடைவான்.

**அரசாளும் யோகம்**

சுரவே சென்மம் திரமாகச்
சுங்கன் இருக்கச் சென்மாதி
வரவே திரிகோ ணத்துற்றான்
மன்னன் ஆகும் சிலபூமிக்
குரவோன் சேனைக் கதிபதியாம்
ஒருமை ஞானி துரகாதி
இரப்போர் தமக்கும் வேதியர்க்கும்
ஈவான் சீவ பரியந்தம்

**விளக்கம்**

இலக்கினம் ஸ்திரமான இருந்து, இலக்கினத்தில் சுக்கிரன் இருக்க, இலக்கினாதிபதி திரிகோணம் ஏற அரசனும், சில பூமிகளுக்குச் சொந்தக்காரனும், படைத்தலைவனும், ஞானியும், குதிரைகளை உடையவனும் ஆவான்.

**சமர யோகம்**

அந்த நான்காம் இடந்தனக்கு
அதிபன் உச்சம் அவ்வீட்டோன்
வந்தும் ஐந்தாம் அதிபனுடன்
மகிழ்வாய்க் கூடப் பாக்யாதி
முந்தும் சமர யோகமென
மொழியும் பலன்கள் சேனாதி
சொந்த வருசம் ஐம்பதின்மேல்
துலங்கும் அரசன் ஆவானே

**விளக்கம்**

4ஆம் அதிபதி உச்சம் பெற, அந்த வீட்டுக்குடையது 5, 9 ஆம் அதிபதிகளோடு சேரச் சமர யோகம் உண்டாகும். அதன் பலனாய் படைத் தலைவனாயும், 50 வயதுக்கு மேல் சிறந்த அரசனாயும் ஆவான்.

**சிவயோகம்**

ஆவார் ஐந்தாம் அதிபதியும்
அன்பாம் லாபத் தாதிபனும்
போவார் ஒன்பான் தனிலிருக்கப்
பொருந்தும் பத்தாம் ஆதிபனைந்தில்
கோவே ஆகும் சிவயோகம்
குதிரை யானை நரர்தேரும்
மேவும் வெகுதே சாதிபதி
விளங்கும் பரமா யுள்ளவனாம்

**விளக்கம்**

5, 9 ஆம் அதிபதிகள் 9இல் இருக்க, 10 ஆம் அதிபதி 5இல் இருக்கச் சிவயோகமாம். இதன் பலனால் சாதகன் யானை, காலாள், தேர் ஆகியவற்றையுடைய அரசனாய் நிறைந்த வயது வரை வாழ்வான்.

**விஷ்ணு யோகம்**

உள்ள பத்தாம் அதிபதியும்
ஒன்பான் அங்கிசம் தானேறி
மெள்ள இரண்டாம் இடத்திலுற
விரும்பி ஒன்பான் தனஞ்சேரில்
கள்ள விஷ்ணு யோகபலன்
கதித்த அரசர் அடிதொழவே
கொள்ளும் லட்சம் பொன்தேடிக்
குலாவி இருப்பான் ஈரேழ்மேல்

**விளக்கம்**

10ஆம் அதிபதி 9 ஆம் அதிபதியின் அம்சத்தில் இருந்து, 2 ஆம் பாவத்தில் இருக்க, 9 ஆம் அதிபதி 2ஆம் பாவத்தில் இருக்க விஷ்ணு யோகமாம். இதன் பலனாய் அரசரிடம் பணிபுரிந்து இலட்சம் பொன் வரையில் சம்பாதித்து தன் 14 வயதுக்கு மேல் யோகத்தோடு இருப்பான்.

**அரசாளும் யோகம்**

மேலாம் பாக்கிய கேந்திரத்தில்
மேவி குருவும் லாபத்திற்கு
ஏலும் கேந்திரச் சுக்கிரனும்
கிட்டி இருவர் மனைமாறிச்
சால இருக்க அவன்யோகம்
தனவான் கீர்த்திப் பிரதாபன்
மாலாய் வளரொன் பதின்மேலும்
வயது உள்ள மன்னவனாம்

**விளக்கம்**

9ஆம் பாவத்திற்குக் கேந்திரத்தில் குருவும், 11 ஆம் பாவத்திற்கு கேந்திரத்தில் குருவும், 11 ஆம் பாவத்திற்கு கேந்திரத்தில் சுக்கிரனும் இருந்து, குருவும், சுக்கிரனும் பரிவர்த்தனையாகப் பிறந்த சாதகன் பொருளுடையவன். நற்பெயருள்ளவன். பலரும் போற்றிப் பேசும்படியான நலங்களை உடையவன். ஒன்பது வயதுக்கு மேல் இறுதிக் காலம் வரை அரச யோகம் உடையவனாய் இருப்பான்.

**கவுரி யோகம்**

மன்னும் பத்தா திபனிருந்த
வங்கி சாதி பதிபத்தில்
மின்னும் உச்சம் ஆயிருக்க
இலக்கி னாதி யுடன்கூடச்
சொன்ன கவுரி யோகபலன்
துரையாம் கீர்த்தி உதாரகுணன்
பொன்னும் மணியும் ஆறாறில்
பொருந்தும் ஆண்டு பன்னிரண்டே

**விளக்கம்**

10ஆம் அதிபதி இருக்கும் அம்சாதிபதி 10இல் உச்சம் பெற்று இலக்கினாதிபதியுடன் சேர்ந்திருக்கக் கவுரி யோகமாகும். இப்பலனை உடைய சாதகன் உயர்ந்தவன். புகழுடையவன். அஞ்சாநெஞ்சமுடையவன். 12 வயதிற்கு மேல் 24 வயது வரை இந்த யோகத்தை அனுபவிப்பான்.

**இலட்சுமி யோகம்**

ஏய பாக்கி யாதிபதி
இருந்த அங்கிசை ஒன்பான்
தூய உச்சன் ஐந்தாதி
தொடர்ந்தே கூட யுறநோக்கக்
காய லட்சுமி யோகபலன்
கனத்து தரையாய்த் தனவானாய்
பாயும் பரியும் நாற்பதின்மேல்
படைப்பன் பத்தாண் டிவன்பாரில்

**விளக்கம்**

9ஆம் அதிபதி இருக்கும் அம்சத்தின் அதிபதி 9இலும், அவ்வீட்டுக்கு உரியது உச்சம் பெற்று, 5 ஆம் அதிபதியைச் சேர்ந்தும், பார்த்தும் இருப்பின் இலட்சுமி யோகமாகும். இந்த யோகமுடையவன் செல்வந்தனாகவும், யானைப்படை, குதிரைப்படை முதலிய படைகளைப் பெற்றவனாகவும் இருப்பான். இந்த யோகம் 40 வயது முதல் 50 வயது வரை இருக்கும்.

**பாரதி யோகம்**

பாரில் லாபா திபனிருந்த
வங்கி சாதி லாபத்தில்
ஊருங் கோளு முச்சமதாய்ப்
பாக்கி யாதி யுடன்கூடப்
பேரும் பாரதி யோகபலன்
பெரிய கண்ணன் சிற்றூணன்
நாரி வெகுவாம் அறுநாள் மேல்
நாடும் வயதெட் டினில்யோகம்

**விளக்கம்**

11ஆம் அதிபதி இருந்த அம்சாதிபதி 11இல் இருக்க, அதனைப் பார்க்கும் கோள்கள் உச்சம் பெற்று 5ஆம் அதிபதியுடன் கூடப் பாரதி யோகமாம். இச்சாதகன் பெரிய கண்களை உடையவன். சிற்றுண்டிப் பிரியன். பெண் சேர்க்கை அதிகம் உடையவன். 24 வயதுக்கு மேல் 8 ஆண்டுகள் வரையில் இந்த யோகம் பலன் தரும்.

**கலாநிதி யோகம்**

யோக மூன்றா லாபாதி
ஒருமித் தேழுற வேழாதி
வாகு பன்னி ரண்டினிற்க
அரசன் பனிரண் டாதியிவர்
ஏக பாக்கியம் தன்னிலுற
இதுவே கலாநிதி யோகபலன்
போகி அரசன் மதிமந்திரி
பொருந்தும் பதினா றெட்டுளதே

**விளக்கம்**

3, 11ஆம் அதிபதிகள் 7இலும், 7 ஆம் அதிபதி 12இலும், 1–9களில் குருவும், 12ஆம் அதிபதியும் இருக்கக் கலாநிதி யோகம். இதன் பலனால் போகத்தை, அமைச்சர் பதவியை 16 வயதுக்கு மேல் 2 ஆண்டுகள் அனுபவிப்பான்.

**இந்திர யோகம்**

உள்ள சன்மாதி லாபத்தில்
உறவே அந்த லாபாதி
தள்ளும் சன்மம் தனிலிருக்கத்
தனத்தா னத்தான் பத்திலுறக்
கொள்ளும் பத்தோன் இரண்டுறவே
கொண்டு சென்மம் திரமாக
வள்ள இந்திர யோகமென
வழுத்தும் பலன்கள் இனிதுரைப்பாம்

**விளக்கம்**

இலக்கினாதிபதி 11இலும், 11ஆம் அதிபதி இலக்கினத்திலும் இருந்து பரிவர்த்தனை யோகம் பெற, 2ஆம் அதிபதி 10இலும், 10ஆம் அதிபதி 2இலும் இருந்து இவையும் பரிவர்த்தனை யோகம் பெற இலக்கினம் ஸ்திரராசியாக இருக்குமானால் அது பின்வரும் நற்பலன்களைத் தரக்கூடிய இந்திர யோகமாகும்.

**இந்திர யோகப்பலன்**

உரைப்பா மதுர நல்வசனம்
உயர்ந்த துர்க்கத் ததிபதியாய்
பரப்பு நிறைந்த வெகுபூமி
பதியிற் கரசாய்ப் பேரிகையும்
இரைக்கு மல்லரி வாத்தியமும்
இனிய தனவான் ஸ்தீரிலோலன்
நரைக்கு முன்னே யாறாறில்
நல்கும் வருசம் எட்டாமே

**விளக்கம்**

இனிய வார்த்தைகளை மென்மையாகப் பேசுபவன். குதிரைப்படை, காலாற்படை, யானைப்படை, இராதம் முதலியவற்றைப் பெற்றவன். அதிகமான நிலங்களை உடையவன். மல்லரி வாத்தியத்தை உடையவன். மேன்மையான செல்வந்தன், பெண்களுக்கு விருப்பமானவன், 36 வயதுக்கு மேல் 8 ஆண்டுகள் வரை இந்த யோகத்தை அனுபவிப்பான்.

**மதன யோகம்**

ஆமே தேளும் இலக்கினமாய்
அரசன் சுங்கன் இருவருறத்
தாமே லாப – புதனுச்சம்
தரிக்கும் மதன யோகபலன்
காமர் வனிதை இச்சிக்கும்
கருணை உள்ள சவுந்தரியன்
தோமின் மனோகர மந்திரியாய்த்
துலங்கும் இருபான் மேலெட்டே

**விளக்கம்**

இலக்கினம் விருட்சிகமாக, அதில் குருவும் சுக்கிரனும் கூடி இருந்த, 11இல் புதன் உச்சம் ஆகப் பிறந்த சாதகனுக்கு மதனயோகம் உண்டாகும். காமம் உடையவன். பெண்கள் விரும்பத்தக்க கருணையுள்ளம் உடையவன். அழகன், புகழுடையவன். மனத்திடமுள்ள கூர்ந்த மதியுள்ள அமைச்சன். 20 வயதுக்கு மேல் 20 ஆண்டு இவ்யோகத்தைச் சாதகன் அனுபவிப்பான்.

**கலாநிதி யோகம்**

எட்டு வரும்பதி னைந்தினிதன்
மேல்யோ கம்கலா நிதியாம்
மட்டே சென்மம் சராங்கிசத்தில்
வரவே ஒன்பான் சென்மமுறத்
தொட்ட நாள்கோ ணரசனுடன்
துலங்க ஐந்தில் பத்தாதி
ஒட்டி யிருக்க லாபத்தில்
ஓங்கும் அரசன் வெகுதேசம்

**விளக்கம்**

மேடம், கடகம், துலாம், மகரம் ஆகிய சர ராசியில் ஒன்று அம்ச இலக்கினமாக சன்ம இலக்கினத்தில் 9ஆம் அதிபதி 11இல் இருக்கப் பிறந்த சாதகன் 8 ஆண்டுக்கு மேல் 15 ஆண்டு வரையில் நல்ல கலாநிதி யோகத்தோடு இருப்பான். பல நாடுகளை ஆட்சி செய்வான்.

**அரசாளும் யோகம்**

தேசக் குருவுக் கொருமூன்றில்
செறிந்தே சுங்கன் தானிருக்க
வாசம் சுங்கற் கொன்பதனின்

மதிதா னுறவே பத்தாதி
நேச நான்கி லுறத்தனவான்
இருபன் ஆகி மூவொன்பான்
போசன் எனமேல் மூவாண்டு
பொருந்து நகர நாட்டரசே

**விளக்கம்**

குருவுக்கு மூன்றில் சுக்கிரன் இருக்க, சுக்கிரனுக்கு 9இல் சந்திரன் இருக்க, 10 ஆம் அதிபதி 4 இல் இருக்கப் பிறந்தவன் செல்வந்தன். 27 வயது முதல் 30 வயது வரை பேர் அரசனாய் திறமையுடன் அரசு புரிவான்.

**மால் யோகம்**

அரசே லாபம் இரண்டொன்பான்
ஆதி யரவர் தம்மனையில்
சிரசாய் இருக்க மால்யோகம்
சேனைக் கதிபன் பூபாலன்
பொரவே கீர்த்திக் கதிபதியும்
பூமிக் கரசன் அமைச்சனுமாய்
தரைசேர் முப்பத் தாறின்மேல்
எட்டு வருசம் தனஞ்சயனே

**விளக்கம்**

2, 9, 11 ஆம் அதிபதிகள் ஆட்சியாக இருப்பது மால் யோகம் எனப்படும் விஷ்ணு யோகமாகும். செல்வம், புகழ், வீரம், கௌரவம் ஆகியவற்றைப் பெற்ற அரசனும் அமைச்சனும் ஆகப் பூமியில் 36 வயது முதல் 44 வயது வரை இந்த யோகத்தை முழுமையாகப் பெறுவான்.

**விசுவாவசு (வான்நிதி) யோகம்**

செயமே மேசம் சென்மமதாய்ச்
செங்கதிர் உறவே சனிபத்தில்
தயவாய் இருக்க ஒன்பதனில்
குருவும் மதியும் தானுறவே
நயமே விசுவா வசுயோகம்
நடக்கும் தனவான் தேசாதி
சுயமே நடத்தும் பதினான்மேல்
கண்ட வருடம் பதினைஞ்சே

**விளக்கம்**

மேட லக்கினமாக அதில் சூரியனும், 10இல் சனியும், 9இல் குருவும் சந்திரனும் இருக்க விசுவாவசு யோகமாகும். இதன் பலன் செல்வந்தனாம். அரசனாம். இளமைப் பருவமான 14 வயதுக்கு மேல் 15 வயதுக்குள் நல்ல யோகத்தைப் பெறுவான்.

**நாள (குழாய்) யோகம்**

அஞ்சே பாக்கி யாதிபதி
இருந்த வங்கி சாதிபதி
துஞ்சா துச்சம் அவனுடனே
சொல்லும் லக்கி னாதியுற
விஞ்சா நாள யோகபலன்
நல்லார்க் கரசன் ஸ்திரீலோலன்
வஞ்சு மறவே குருபத்தி
வழுத்து மாறேழ் பதினெண்ணே

**விளக்கம்**

9ஆம் அதிபதி இருக்கும் அம்சாதிபதி உச்சம் பெற்ற கோளுடன் இணைந்து இலக்கினாதிபதியுடன் இருக்க நாள யோகமாகும். மக்களுக்கு நல்ல அரசனாகவும், பெண்ணாசை உடையவனாகவும், குரு பக்தி நிறைந்தவனாகவும் இருப்பான். 42ஆம் ஆண்டு முதல் 8 ஆண்டுகள் வரையில் இவ்யோகத்தைப் பெறுவான்.

**கார்முக யோகம்**

எண்ணும் லக்கி னாங்கிசையில்
பத்தாம் இடத்தா திபனிருக்க
ஒண்ணும் பத்தாம் அங்கிசையில்
உறச்சன் மாதி அரசனுடன்
நண்ணும் இவரை அவர்பார்க்க
நாடும் கார்முக யோகபலன்
பண்ணும் ஞானி மூவொன்பான்
பாரில் எட்டு வித்தையுளன்

**விளக்கம்**

அம்சாலக்கினத்தில் 10–ஆம் அதிபதி இருக்கவும். இலக்கினாதிபதி அம்சத்தில் 10–ஆம் பாவத்தில் இருக்கவும், இலக்கினாதிபதியும் குருவும் ஒருவரை ஒருவர் பார்க்கவும் கார்முக யோகம் உண்டாகிறது. தூய்மையான

செயல்களைச் செய்யும் ஞானி, 27 வயதுக்கு மேல் எட்டுவித மொழிகளையும் எட்டு ஆண்டுகளுக்குள் குறைவறக் கற்கும் கல்வியாளன்.

**அரசாளும் யோகம்**

வித்தை லாபத் ததிபனைந்தின்
மேவ ஐந்தாமா திபதி
புத்தி லாபத் திருந்திடவே
புகரு நான்கோன் மதியுடனே
பத்தி இருக்க மகபதிபோல்
பாரை முழுதும் அரசாள்வான்
உத்த போகி ஏழாறில்
யோகம் நடக்கும் பதினாறே

**விளக்கம்**

இரண்டாம் வீட்டிற்குப் 11–ஆம் அதிபன் 5–ஆம் இராசியில் இருக்க, 11–இல் 5–க்கு அதிபதி இருக்க, சுக்கிரன் 4–ஆம் வீட்டானோடு சேர்ந்து இருக்க அல்லது தொடர்பு பெற்றிருக்கப் பிறந்த சாதகன் 42 வயதுக்கு மேல் 58 வயது வரை இப்பூமியை ஆளும் யோகம் பெற்றிருப்பான்.

**கேதாரி யோகம்**

பதியாம் அரசன் மதிபுகரும்
புரிந்து மூவர் தனத்துறவே
விதியாம் பாக்கி யாதிபதி
விரும்பு நோக்கம் உற்றிடவே
கதிர்சேர் யோகம் கேதாரி
காணும் பதாதி யானைபரி
துதிசேர் ஐம்பான் இரண்டாண்டு
தொடங்கி யேழும் பிரபலமே

**விளக்கம்**

குரு, சந்திரன், சுக்கிரன் ஆகிய மூவரும் 2–ஆம் பாவத்தில் இருந்து, 9–ஆம் அதிபதியின் பார்வை பெற்றால் கேதாரி யோகமாகும். யானை, குதிரை, காலாள், தேர் ஆகியவற்றைப் பெற்றுள்ள அரசனாய் வாழ்வான். 52 வயதுக்கு மேல் 59 வயது வரை இந்த யோகத்தைச் சிறப்புற அனுபவிப்பான்.

**சண்டமாருத யோகம்**

பலமாம் பத்தில் கருநாகம்
பத்தாம் ஆதி சனியிருவர்
பலமாய் மூன்றில் உற்றிடவே
பகரும் சண்ட மாருதமாம்
தலமே தோறும் தன்மங்கள்
தானம் செய்யும் சாத்திரவான்
உலவி உண்பான் பராக்கிரமன்
யோகம் பதினைந் ததன்மேலே.

**விளக்கம்**

**10–**இல் இராகு வலுப்பெற, **10–**ஆம் அதிபதியும், சனியும் இலக்கினத்திற்கு மூன்றில் இருக்கப் பிறந்தவனுக்கு உயிரைப் பெற்று எமனின் பிடியிலிருந்து தப்பிக்கும் வலுவான யோகம் உண்டாகும். இவன் கோயில் குளங்களுக்குச் சென்று தானம் பல செய்யக்கூடிய ஞானத்தைப் பெற்றவன். பல்வேறு இடங்களுக்குச் சென்று சந்நியாசி போல உணவு அருந்துபவன். வீரமுடையவன். தன்னுடைய 15 வயதிற்குப் பின் அதிர்ஷ்டசாலியாக இருப்பான்.

**பாரிசாத யோகம்**

மேலே பாக்கி யாதிபதி
மேவும் அங்கிச நாதன்தான்
ஏலவந்தாங் கிசை யேறி
இருந்த வங்கிசத் தானேனும்
தூலம் அந்த வங்கிசையில்
துலங்கும் உச்சன் ஆனாலும்
சால லக்கினாதி கேந்திரத்தில்
சுங்கன் உடனே தானுறவே

**விளக்கம்**

**9–**ஆம் அதிபதி இருக்கும் அம்சத்தின் அதிபதி அம்சத்தில் ஆட்சி பெற்றும், உச்சம் பெற்றும் இருக்க, இலக்கினாதிபதி கேந்திரம் பெற்றுச் சுக்கிரனுடன் நட்பாக இணைந்திருக்க,

**பாரிசாத யோகப்பலன்**

தானுறும் பலன்கள் பாரி
சாதமாந் தனவான் யோகம்
மானனை யார்க்கு நேயன்
மன்னவர் கப்பம் கட்டும்
தேனுதென் கொடையான் காத்திரி
சேயுளன் நல்லூண் கீர்த்தி
ஆனதோர் இருப தின்மேல்
ஆயுளின் பரியந் தந்தான்

**விளக்கம்**

செல்வந்தன். அதிர்ஷ்டசாலி. பெண்களுக்கு விருப்பமானவன். மன்னர்கள் எல்லாம் இவனுக்குக் கப்பங் கட்டுவர். உயர்வான நல்ல குழந்தைகளைப் பெறுவான். நல்ல உணவு உண்ணுபவன். புகழுடையவன். 20 வயதிற்கு மேல் தன் வாழ்நாள் முழுதும் அதிர்ஷ்டசாலியாகவே இருப்பான்.

**கேதார யோகம்**

அந்த லாபன் உற்றமனைக்
கொன்பா னதிபன் சோமனுடன்
வந்த லாபம் தனிலிருக்க
வஞ்சன் மாதி நோக்கமுற
விந்த கேதார யோகபலன்
மேவும் பேரி மல்லாரி
சொந்த கரிமா விருபதுமூன்
றுடன்மேல் வருடம் இருபதுமே

**விளக்கம்**

11–ஆம் அதிபதி இருக்கும் வீட்டிற்கு 9–ஆம் வீட்டுக்கு அதிபதி சந்திரனுடன் இணைந்து 11–இல் இருந்து, இலக்கினாதிபதியின் பார்வையைப் பெற்றால் கேதார யோகமாகும். மல்லாரி வாத்தியம் உள்ளவன். யானை, குதிரைகளை உடையவன். 23வயதுக்கு மேல் 20 ஆண்டுகள் வரை யோகத்துடன் இருப்பான்.

**சுபயோகம்**

துலங்கும் பாக்கி யாதிபதி
சூழ்ந்தங் கிசாதி பதியுச்சம்
இலங்கி இரண்டில் உற்றிடவே
இரண்டாம் ஆதி பாக்கியத்தில்
பலங்கள் கொடுக்கும் சுபயோகம்
படிப்பன் நீதி அரசாள்வான்
குலங்கள் போற்று மையொன்பான்
கூறும் இருபத் தோராண்டே

**விளக்கம்**

9–ஆம் அதிபதியும், அது இருக்கும் அம்சத்தின் அதிபதியும் சேர்ந்து உச்சம் பெற்று 2–ஆம் பாவத்திலும், 2–ஆம் அதிபதி 9–இலும் இருப்பது சுபயோகமாகும். இந்த யோகம் உடையவன் கல்வியாளன். அரசு செய்பவன், உயர்ந்ததோர் போற்றும் புகழுடையவன். 45 வயதுக்கு மேல் 66 வயது வரை யோகசாலியாக இருப்பான்.

**சரிதாம யோகம்**

ஒன்றே ஏழா மாதிபதி
ஒன்பான் இருக்க ஒன்பஃதோன்
நன்றே ஏழில் தாரகையின்
ராசிக் கதிபன் இவர்களுடன்
ஒன்றி யிருக்கச் சரிதாம
யோகம் அரசாம் சேனையுளன்
என்றே நீதி முப்பதின்மேல்
இயங்கும் வயதோ யையாறே

**விளக்கம்**

ஏழாம் அதிபதி 9–இலும், 9–ஆம் அதிபதி 7–இலும் பரிவர்த்தனை பெற்று இருக்க, 9–ஆம் அதிபதியோடு ஆறாம் அதிபதியும் சேரக் சரிதாம யோகம் என்று பெயர். இந்த யோகத்தைப் பெற்றவன் அரசனும், படைகளை உடையவனும் ஆகி 30 வயதுக்கு மேல் 60 ஆண்டு வரை நீதியுடன் வாழ்வான்.

**காம்ப (விரும்பிய) யோகம்**

ஐயர இரண்டில் குருவிருக்க
அமர்ந்தே நான்கில் சுங்கனுறப்
பொய்யா தேழில் சேய்மதியும்

பொருசென் மாதி சுபருடனே
நையா திருக்க இதன்பலன்கள்
நாடும் காம்ப யோகமதாம்
வையம் புகுந்தீர் பத்திரண்டு
வருசம் ஆறும் சவுக்கியமே

**விளக்கம்**

இரண்டில் குருவும், 4–இல் சுக்கிரனும், 7–இல் செவ்வாயும், சந்திரனும் இருக்க, இலக்கினாதிபதி நற்கோளுடன் சேர்ந்து வலுப்பெற்று இருக்கக் காம்ப யோகம் உண்டாகும். இதன் பலனாகச் சாதகன் 20 வயதுக்கு மேல் 26 ஆண்டு வரையில் முற்றிலும் அதிர்ஷ்டம் நிறைந்தவனாக இருப்பான்.

**நளயோகம்**

மேய ஐந்தாம் அதிபனொன்பான்
வீட்டில் இருக்க லாபத்தோன்
தூய மதியும் இரண்டிலுறச்
சோடச தானம் பண்ணுவனே
ஆய அரசர் சன்மானம்
அதிகம் பெறுவன் நளயோகம்
காய பலன்களை ஒன்பான்
அதன்மேல் மூன்றாண் டாங்காணே

**விளக்கம்**

5–ஆம் அதிபதி 9–இலும், 11–ஆம் அதிபதியும் சந்திரனும் 2–இலும் இருக்க நளயோகமாம். இந்த யோகத்தை உடைய சாதகன் 16 வகையான தானங்களைச் செய்யக்கூடியவன். அரசர்களுடைய வெகுமதியை அதிகமாகப் பெறும் வாய்ப்பைப் பெற்றவன். 9 வயது முதல் 12 வயதிற்குள் இந்த யோகத்தைப் பெற்றவனாக இருப்பான்.

**பிரபை (பிம்பம்) யோகம்**

காணும் லாபா தியத்துச்சன்
கண்ட சுங்க னுடன்கூடி
வேணும் சென்மாதி கேந்திரன்
மேவி இவர்கள் இருந்திடவே
நாணும் பிரபை யோகபலன்
நடத்தும் தியாகி வெகுபோகி
தானும் அரசன் சேனாதி

தனிமூ வைந்தின் எட்டாண்டே

**விளக்கம்**

**11–**ஆமிடத்தில் உச்சம் பெற்ற சுக்கிரனுடன் இலக்கினாதிபதி சேர்ந்து கேந்திரத்தில் இருந்தால் பிரபை யோகமாம். இதனைப் பெற்ற சாதகன் தன்னலமற்ற பொது நலத் தொண்டில் ஆர்வமுள்ளவன். அரசன், போர்க்கலையில் திறமிக்கவன். 15 வயதுக்கு மேல் 23 வயது வரை யோகம் பெறுவான்.

**சுகபா (சுகம்) யோகம்**

ஆண்ட மதியும் குருவிருவர்
அமர்ந்தே ஒன்றில் உற்றிடவே
பூண்ட இரண்டோன் லாபத்தில்
பொருந்தி இருக்கச் சென்மாதி
நீண்ட சுபர்க ளுடன்கூடி
நிற்கச் சுகபா யோகபலன்
வேண்டும் வருசம் நாற்பான்மேல்
விளம்பும் மூன்றுந் தேசாதி

**விளக்கம்**

இலக்கினத்தில் சந்திரனும், குருவும் இருக்க, **11–**இல் **2–**ஆம் அதிபதியும் இலக்கினாதிபதியும் சுபருடன் சேர்ந்து இருக்கச் சுகபாயோகமாகும். இதனால் சாதகன் 40 வயது முதல் 43 வயது வரை யோகம் பெறுவான்.

**யூப (வேள்வி) யோகம்**

சாதி லக்கினா திபதியிருந்
தங்கிசை யோனு டன்சசியும்
ஓதும் இவரைப் பத்திடத்தோன்
ஓங்கும் பார்வை நோக்குறவே
வாத யூப யோகபலன்
மந்திரி மண்ட லாதிபதி
நீதி நடத்தும் பதினொன்றில்
நேரும் வருசம் மூன்றினுமே

**விளக்கம்**

இலக்கினாதிபதி இருக்கும் அம்சாதிபதியுடன் சந்திரன் இருக்க, அதற்குப் பத்தாம் அதிபதி சந்திரனைப் பார்க்க யூபயோகமாம். இதன் பலனாய் சாதகன் அமைச்சனாய், மண்டலாதிபதியாய் இருப்பான். 11 வயதுக்கு மேல் 3 ஆண்டுகள் வரை இது நிறைந்த யோகத்தைத் தரும்.

### தூம யோகம்

இனிதாம் லக்கி னத்ததிபன்
இருந்தங் கிசாதி திரிகோணம்
மணிவா யுற்றே குருசுங்கன்
வரவே இருவர் கடாமிருக்க
நனியார் பத்தினில் சனியுச்சம்
ஆகில் தூம யோகபலன்
தனியே பத்தொன் பான்மேலே
தரணி யாள்வான் ஆண்டொன்பான்

**விளக்கம்**

இலக்கினாதிபதி இருக்கும் அம்சாதிபதி திரிகோணத்தில் இருக்க அதனுடன் குருவும் சுக்கிரனும் சேர, சனி 10–இல் உச்சம் பெறத் தூமயோகமாகும். 19 வயது முதல் 28 வயது வரை அரசாளும் யோகம் பெறுவான்.

### காந்தர்வ யோகம்

ஆளும் ஐந்தாம் அதிபதிதான்
ஐந்தேழ் ஒன்பான் அமர்ந்திடவே
நாளும் அரசன் சன்மாதி
தானும் கூடி அங்குறிலும்
நீளும் சோமன் ஒன்பதனில்
நிற்கக் கதிரோன் உச்சமெனக்
கேளும் காந்தர்வ யோகமெனக்
கிடைக்கும் பலன்கள் உரைத்திடுமே

**விளக்கம்**

5ம் அதிபதி 5–7–9களில் ஒன்றில் இருக்க, அதனுடன் குருவும் இலக்கினாதிபதியும் சேர, சந்திரன் 9இல் இருக்க, சூரியன் உச்சமாகக் காந்தர்வ யோமாகும். இவ்வித யோகம் பெற்றால் கிடைக்கும் பலன்கள்.

**காந்தர்வ யோகப் பலன்**

உரைக்கும் பலவான் பிரசித்தன்
நோக்கும் புத்தி உள்ளவனாம்
தரைக்கும் அரசன் ஆபரணம்
தானும் வெகுவாய்ப் பூண்டிடுவன்
துரைக்கும் புத்தி சொல்லிடுவன்
சுகந்த கீதப் பிரியனென
விரைக்கும் அறுபத் தாறதன்மேல்
விளங்கும் வருடம் எட்டுளதே

**விளக்கம்**

வீரமுள்ளவன். அறிவாற்றல் உடையவன். அரசனாக இருப்பவன். ஆபரணங்களை வெகுவாய் அணிபவன். அரசர்களுக்கெல்லாம் புத்தி கூறும் மதி நுட்பம் படைத்தவன். இசைப்பிரியன். 66 வயதுக்கு மேல் எட்டு ஆண்டு இந்த யோகத்தை நல்லபடி அனுபவிப்பான்.

**பிரத்திம (பொம்மை) யோகம்**

உளதே பத்தாம் அதிபதிதான்
உற்ற வங்கிசத் தோன்பத்தில்
அளவே சுங்க னுடன்கூட
வான ராசிக் கதிபதிதான்
கலவாய் இருந்தங் கிசநாதன்
காணும் உச்சம் பிரத்திமமாம்
இளகா வரசன் பூபாலன்
ஈரெட் டதன்மேல் ஏழென்ப

**விளக்கம்**

பத்தாம் அதிபதி இருக்கும் அம்சாதிபதி, 10ஆம் பாவத்தில் சுக்கிரனோடும், சந்திரனோடும் இருக்க, இவை எந்த இராசியில் நின்றனவோ அந்த இராசிநாதன் உச்சம் பெறப் பிரத்திம யோகமாம். இவ்யோகத்தைப் பெற்றவன் 16 வயதுக்கு மேல் 7 ஆண்டுகள் மிகவும் சிறப்புடன் மேன்மையான வாழ்க்கை வாழ்வான்.

**முதி (மகிழ்ச்சி) யோகம்**

பதிசேர் பாக்கி யாதிபதி
இருந்தங் கிசாதி பதிநான்கில்
துதிசேர் நிற்க நான்காதி
துலங்கு கேந்திரம் உச்சத்தில்
விதியா நிற்கின் முதியோகம்
விளங்கும் அரசர் சன்மானன்
சதிசேர் சுகவான் பாக்கியவான்
காணும் இருப்பான் கொற்றவன்மேல்

**விளக்கம்**

**9**ஆம் அதிபதி இருக்கும் அம்சாதிபதி **4**இல் இருக்க, **4** ஆம் அதிபதி கேந்திரங்களில் இருக்க அல்லது உச்சம் பெற்று இருக்கப் பிறந்தவனுக்கு முதியோகம் உண்டாகும். இந்த யோகத்தால் சாதகன் அரசர்களின் வெகுமதியைப் பெறுவான். திரண்ட செல்வத்தைப் பெற்று இன்பமுடன் கூடிய நலவாழ்வு வாழ்வான். **20** ஆண்டுகளுக்கு மேலும் அரசு புரிவான்.

**அரச யோகம்**

தவமாம் சன்மத் துச்சனுறத்
தரணி சுதனு முழுநோக்க
நவமாம் இடத்தோன் காரியுடன்
நண்ணப் புலவன் இதன்பெயரோ
கவன சண்ட யோகபலன்
கருணை அரசர் மதிமந்திரி
இவனன் வயது பன்னிரண்டாம்
இதன்மேல் மூன்றும் தனபதியே

**விளக்கம்**

இலக்கினத்தில் உச்சம் பெற்ற கோள் இருந்து, அதனைப் புதன் பார்க்க, **9**ஆம் அதிபதி சனியுடன் இருக்கப் பிறந்தவன் புலவன் ஆவான். கட்டான உடலும், கவர்ச்சியான அழகும். கட்டாண உடலும், கவர்ச்சியான அழகும் உள்ளவன். கருணையுள்ள அரசன். யூகித்தறியும் ஆற்றல் உடையவன். **12**வயதுக்கு மேல் **3** ஆண்டு அதிர்ஷ்டமுடன் இருப்பான்.

**கானயோகம்**

பதிசேர் ஒன்பான் அதிபதி
பண்பாய் மூன்றில் இருந்திடவே
துதிசேர் அரசன் முழுநோக்கச்
சொல்லும் கான யோகபலன்
அதிசேர் ரூபன் முத்தழகன்
ஆடை பணிதி உள்ளவனாம்
கதிசேர் வயது பதினாறில்
காணு ம் மூன்றின் முகவசியம்

**விளக்கம்**

**9**ஆம் அதிபதி **3**இல் இருக்க, அதனைக் குரு வலுவுடன் பார்க்கக் கான யோகமாம். இந்தம யோகமுடைய சாதகன் உடற் பொலிவு உடையவன். அழகன். ஆடை அணிகலன் சேர்க்கை உள்ளவன். **16** வயதுக்குப் பிறகு பலரும் அறிந்து போற்றாக் கூடிய பிரபலனாய் இருப்பான்.

**மகிட (எருமை) யோகம்**

வசயம் ஐந்தில் குருவிருக்க
ஐந்தாம் ஆதி சுபரிருவர்
நசையாய்க் கூடித் தானிருக்க
நாடும் பத்தில் சனியுறவே
பொசியும் மகிட யோகபலன்
புடவி வனத்துக் கதிபதியாம்
முசியும் வருசம் முப்பதின்மேல்
முன்னும் எட்டு மேஅரசாம்

**விளக்கம்**

**5**ஆம் இடத்தில் குரு இருக்க, ஐந்தாம் அதிபதியோடு நற்கோள் சேர்ந்திருக்க, சனி **10**இல் இருக்க மகுடயோகமாம். அடர்ந்து செழித்த நந்தவனத்துக்கு அதிபதியாய் **30** வயதில் இருந்து **38** வயது வரை இந்த யோகத்தைச் சிறப்பான முறையில் அனுபவிப்பான்.

**கோள்களின் ஆதிபத்தியம்**

பனிரெண்டு ராசி யென்னும்
பதிலக் கினமாகக் கொண்டு
இனியதாய் தந்தை புத்திரர்
இசைமனை யுடன்வந் தோர்கள்
தனியுமா மத்தா யங்க
டனலாப வாக னங்கள்
முனியும் பாக்கிய கர்மங்கள்
முதற்பலன் மொழிந்தி டீரே

**விளக்கம்**

**9** கோள்களுக்குச் சொந்த வீடுகள் உள்ளன. **12** இராசிகளில் இலக்கினம் உடல், **2**ஆமிடம் குடும்பம், **3**ஆமிடம் சகோதரம், **4**ஆமிடம் தாய், **5**ஆமிடம் புத்திரர், **6**ஆமிடம் அம்மான், பகைவர், 7ஆமிடம் மனைவி, **8**ஆமிடம் ஆயுள், **9**ஆமிடம் தந்தை, **10**ஆமிடம் தொழில், **11**ஆமிடம் ஆதாயம், **12**ஆமிடம் செலவு என்று அந்தந்த இராசிக்குரியவர்களே இடத்ததிபதிகள் ஆகின்றனர்.

**அரசாளும் யோகம்**

பாக்கி யத்திறை யுங்காமத்
தாதியும் லக்கினத் தோனும்
தாக்கியே கூடி னாலும்
தயவுடன் ஒன்றிற் கொன்று
நோக்கிய கண்ணுற் றாலும்
நுண்ணிய அறிவு வேள்வி
வாக்குகள் செலுத்தும் கோவாய்
மண்ணினில் வாழ்வன் கண்டீர்

**விளக்கம்**

**9–10–1** ஆம் அதிபதிகள் சேர்ந்திருந்தாலும், ஒன்றையொன்று பார்த்துக் கொண்டாலும் அந்தச் சாதகன் சிறந்த அறிவும், கூர்ந்த மதியும், சிறந்த பேச்சாற்றலும், அனைத்து வசதி வாய்ப்புகளும் பெற்று மன்னவனாக வாழ்வான்.

**சகல பாக்கிய யோகம்**

கேந்திரத் தானத் தாதி
திரிகோணத் தோனுங் கூடிச்
சோந்திடு வதொன் றுக்கொன்
றிகழவே நோக்கி னாலும்
பார்த்தவார் திசைகள் தன்னில்
பூணு மந்திரி யோகங்கள்
சார்ந்திடுஞ் சுத்தம் ஆகச்
சகல பாக்கியம் என்றோதே

**விளக்கம்**

கேந்திராதிபதியும், திரிகோணாதிபதியும் சேர்ந்தாலும், பார்த்தாலும் அவற்றினுடைய தசாபுத்திகள் வரும் போது அறிவுடைய அமைச்சன் ஆகவும், எல்லாச் செல்வங்களையும், நன்மைகளையும் நிறையப் பெற்றவனாகவும் சாதகன் இருப்பான்.

**இலட்சுமி யோகம்**

வாகனா தியுங்கோ ணத்தா
னாதியுங் கூட மற்றும்
தாகமாம் ஒன்றுக் கொன்று
சார்ந்துடன் பார்ப்பா ராயின்
ஏகமாய்ப் பதுமத் தற்ற
இலக்குமி யோகம் என்பர்
போகவான் சகல பாக்கியம்
பூணும் பூபா லன்கண்டீர்

**விளக்கம்**

4ஆம் அதிபதியும் திரிகோணாதிபதிகளான 5, 9களும் ஒன்று சேர்ந்தாலும், ஒன்றையொன்று பார்த்துக் கொண்டாலும் அனைத்து விதமான நலங்களையும் தரக் கூடிய இலட்சுமி யோகமாகும். இதனைப் பெற்றவன் பெண்ணின்பத்தை விரும்புபவனும் அனைத்துச் செல்வங்களையும் பெற்ற அரசனுமாவான்.

**செல்வ யோகம்**

தனபதி பாக்கி யத்தோன்
லாபத்தோன் சந்திர கேந்திரம்
தனின்மிக விவர்க ளாறே
சார்ந்திடப் பன்னொன் றைந்தும்
வினவிய குருவி னாட்சி
வீடெனில் செல்வம் உள்ளன்
புனையிழை யாளே லட்சுமி
யோகமாய்ப் புகலு வாயே

**விளக்கம்**

**2–9–11**ஆம் அதிபதிகள் சந்திரனுக்குக் கேந்திரத்தில் இருக்க, **11–5** ஆம் வீடுகளில் ஒன்று குருவின் வீடாக, அதில் மேற்கொன்ன**2–9–11**ஆம் அதிபதிகள் இருக்க அச்சாதகன் செல்வமுடையவன். மேலும் இவன் இலட்சுமி யோகப் பலன் அனைத்தையும் இவ்யோகம் இருந்தாலும் பெறுவான்.

**இராஜ யோகம்**

ரண்டினுக் கதிபன் பாக்கியம்
தன்னிலும் லாபம் தன்னில்
தண்டிடாப் பாக்கி பாதி
தானுறில் லாபத் தாதி
ஒண்டொடி உடனின் றாலும்
உயர்ராஜ யோகம் மூன்று
கொண்டநற் கிரகம் சொந்தக்
கிரகமுற் றிருக்கின் மன்னனாம்

**விளக்கம்**

**2**ஆம் அதிபதி **9**இல் இருக்க, **9** ஆம் அதிபதி **11**இல் இருக்க, இவை **11**ஆம் அதிபதியுடன் சேர்ந்து இருக்கச் சாதகன் சிறந்த இராஜ யோகத்தை அனுபவிப்பான். அத்துடன் நற்கோளான சந்திரன், புதன், குரு, சுக்கிரன் ஆகியவை ஆட்சி பெற்றிருப்பின் அரசனாக ஆவான்.

**தரித்திர யோகம்**

கண்ட சன்ம லக்கினங்கள்
காரி மனையாய் அதிற்சோமன்
மண்டி ருக்க அவன்தனக்கு
வளர்பதி னொன்றில் அரசனுறக்
கொண்ட தரித்திரம் கடகம்
குருலக் கினமாய் அதிற்காரி
மிண்டி யிருக்கப் பன்னொன்றில்
வேந்தி ருக்கத் தரித்திரமே

**விளக்கம்**

சன்ம லக்கினம் மகரம் அல்லது கும்பமாக இருந்து அதில் சந்திரன் இருக்க, அதற்குப் 11இல் குரு இருக்கத் தரித்திர யோகமுடையவன். கடகம் இலக்கினமாகி அதில் சனியும் 11இல் குருவும் இருக்கப் பிறந்தவன் தரித்திரன் ஆவான்.

**இளமையில் தரித்திர யோகம்**

தரிக்கும் சன்மம் லக்கினத்தும்
சசிதான் இருந்த லக்கினத்தும்
பரிக்கும் உபய பாரிசத்தும்
பாவர் இருக்கத் தரித்திரமாய்
விரிக்கும் முன்னோர் பாரிசத்தின்
மேவில் உடனே தரித்திரமாம்
தெரிக்கும் பின்னே உறில்பாலி
யத்தில் தரித்திரம் சேரும்

**விளக்கம்**

இலக்கினத்திற்கும், சந்திரனுக்கும் இரண்டு பக்கங்களிலும் உள்ள வீடுகளில் பாவிகள் இருப்பது தரித்திர யோகமாம். இதில் இவற்றுக்கு முன் பாவிகள் இருப்பின் குழந்தை பிறந்த போதும், பின் பாவிகள் இருப்பின் அக்குழந்தையின் இளமைக் காலத்திலும் வறுமை வந்து துன்புறுத்தும்.

**தரித்திர யோகம்**

சேரும் சன்மம் கேந்திரத்தில்
திரிகோ ணத்தில் குடும்பத்தில்
மேருவியத் திற்பா வர்நிற்கின்
மிகவும் தரித்திர யோகம்
வாரும் சன்ம லக்கினத்தின்
மதியும் சனியும் மருவுகினும்
நேரும் சன்மம் தனில்பாவர்
நிற்கில் தரித்திரம் நிறையும்

**விளக்கம்**

1–4–7–10, 5–9–2–12களில் தீய கோள்கள் இருப்பது தரித்திர யோகமாம். இலக்கினத்தில் சனியும், சந்திரனும் சேர்ந்து இருந்து தீயவற்றின் தொடர்பும் பெற்று வலுவற்று இருப்பது தரித்திர யோகமாகும்.

**கேமுத்திர யோகம்**

விறையும் இரண்டாம் இடத்தில்கோள்
நீங்க மூன்ற தாமிடத்தில்
உறையும் கிரகம் உண்டாயின்
ஓதும் கேமுத் திரயோகம்
குறையும் பலனோ வையங்கைக்
கொண்டே உண்ணும் குறைவுடையோய்
நறைசேர் குழலாய் இரண்டில்கோள்
நண்ணில் இல்லை நல்குரவே

**விளக்கம்**

2ல் கோள் இல்லாமல் 3இல் கோள் இருப்பின் கேமுத்திர யோகம். இந்த யோகம் இருப்பின் பிச்சையெடுத்து வாழும் வாழ்க்கையுள்ளவனாக இருப்பான். 2ஆம் பாவத்தில் கோள் இருக்குமானால் இந்தத் தரித்திர யோகம் ஏற்படாது.

**கேமுத்திர யோகம் 2**

குரவார் மதிக்கு முன்பின்னும்
குணமாநல் லோர்குறு காரேல்
வரவான் மதியின் கேந்திரத்தின்
மருவி னாலும் இருபுறமும்
உரவோர் தாமில் லாதிருந்தால்

உண்டாம் கேமுத்திர யோகம்
திரவேற் கண்ணாய் வெகுபாவம்
செய்தார்க் கிந்தச் செயலாமே

**விளக்கம்**

சந்திரனுக்கு 2, 12களில் நற்கோள்கள் இல்லாமல் இருக்க, சந்திரன் கேந்திரம் பெற்று இருக்க, அதற்கு இருபுறமும் உள்ள கோள்கள் நட்பாக இல்லாது இருக்க கேமுத்திர யோகமாகும். இந்த யோகமானது கொடிய பாவம் செய்தவர்களுக்கே இருக்கும்.

**பிச்சை எடுக்கும் யோகம்**

செயலா ருடலைச் சனிநோக்கத்
திகழ்மே டத்தில் சேய்மதியும்
இயலாய் இருக்கப் பிறந்தவனும்
இருந்தே உண்பன் எந்நாளும்
பயிலார் சென்மம் எட்டிடத்தைப்
பங்கு பாதன் பார்த்திடினும்
கயலார் விழியாய் சீர்கேடன்
காணும் எனவே கருதிடுமே

**விளக்கம்**

இலக்கினத்தைச் சனி பார்க்கவும், மேடத்தில் செவ்வாய், சந்திரன் இருக்கவும் பிறந்த சாதகன் எந்நாளும் எந்த வேலையும் செய்யாது பிச்சை எடுத்து உண்பான். சனை லக்கினத்தையும், 8ஆம் பாவத்தையும் சனி பார்த்தாலும் நலங்கள் குறைந்து ஒழுக்கம் அற்றவனாக இருப்பான்.

**கோள் யோகம்**

மேலாம் கிரகம் எட்டுமொரு
வீட்டில் ஒன்றி யிருந்திடவே
சாலும் கோள்கள் யோகமிது
சாற்று ஞானி தரித்திரனாம்
மாலாய் இரண்டு வீட்டிலுற
வண்மை தான்கை யோகங்கள்
நீலாய் மந்தன் நிட்டுரன்
நில்லான் அவனே லட்சையிலான்

**விளக்கம்**

எட்டுக் கோள்கள் ஒரே வீட்டில் இருப்பது கோள்யோகமாம். இந்த யோகமிருப்பின் துறவியாயும், வறுமையுடையவனாயும் இருப்பான். எட்டுக் கோள்களும் இரண்டு வீடுகளில் இருந்தால் தன் துன்பத்தைக் கொண்டே யோகமும் வரும். அதனால் சாதகனுக்குத் தொல்லை, துன்பம் விலகும். பாவச் செயல்களையும் செய்யாது இருப்பான்.

**சூல யோகம்**

ஆன மூன்று இராசிதனில்
அணுகிக் கிரகம் இருந்திடவே
தானே சூல யோகமதாம்
சரீரம் தன்னில் காயவடு
மானே குலத்தில் பாதகம்தான்
வருமே இவன்தன் கரமதனால்
ஊனப் படுத்தும் தரித்திரவான்
உதவான் தருமருக் கிவ்வசனம்

**விளக்கம்**

எட்டுக் கோள்களும் மூன்று வீடுகளுக்குள் இருந்தால் சூலயோகம். உடலில் காயமுள்ளவன். தான் பிறந்த குலத்தின் வளர்ச்சியைக் கெடுப்பவன். கொடிய பாவச் செயல்களை மனவருத்தமின்றிச் செய்யும் கல் நெஞ்சன். பிறருக்கு உதவாதவறியவன். பெரியோரிடத்திலும், ஞானிகளிடத்திலும் இனிக்கப் பேசுபவன்.

**திரி யோகம்**

வசமே லெட்டோன் பதுபத்தின்
மருவி இருக்கில் திரியோகம்
நிசமாய் ஈனத் தொழில்புரிவன்
சோம்பன்நீச நடையுடையன்
தசமே லாபம் ஒன்றுவியம்
தன்னில் கிரகம் தாமுறவே
வசையாய் ஈனத் தொழில்புரிந்து
மன்னு செலவு கொஞ்சமதாம்

**விளக்கம்**

எட்டுக் கோள்களும் **7–8–9–10** களில் இருப்பின் திரியோகமாம். இந்த யோகம் இருப்பின் இழிவு தருவும் செயல்களைச் செய்வான். சோம்பேறி. அசிங்கம் தரக் கூடிய தொழில்களைச் செய்வான். நன் நடத்தை இல்லாது இருப்பான். **10–11–1–12** ஆகிய இடங்களில் மட்டும் கோள்கள் இருந்தால் இழிதொழில் செய்து, குடும்பத்திற்கும் கொஞ்சம் செலவு செய்து வருவான். பிறருக்கு உதவாத கஞ்சன்.

**தேச சஞ்சார யோகம்**

தாமே சன்மம் சசியுறவே
தானும் கேந்திர காரியுறல்
ஆமே வியத்தல் குருவிருக்கில்
ஐயமெடுப் பனெனப் புகல்வர்
தோமே வியமா றெட்டதனில்
தொடர்சன் மாதி தானிருக்கத்
தீமை புரியுங் கோள்கூடத்
தேசம் எலாம் நடந்திடுவன்

**விளக்கம்**

இலக்கினத்தில் சந்திரன் இருக்க, சனி கேந்திரம் பெற, **12**இல் குரு இருக்கப் பிறந்தவன் பிச்சை எடுத்துச் சாப்பிடுவான். இலக்கினாதிபதி **6–8–12**களில் இருந்து அவற்றைத் தீய கோள்கள் பார்த்தால் சாதகன் பல நாடுகளைச் சுற்றித் திரிந்திடுவான்.

**தரித்திரி யோகம்**

நடக்கும் தனபாக்கி யம்எட்டைந்
தெனும்நால் வீட்டில் பாவருறக்
கொடுக்கும் வெகுவாய் தரித்திரங்கள்
கூறு மூன்றா மனையாயின்
கொடுக்கும் முக்கால் இரண்டிலரை
குலவும் ஒன்றில் காலாகும்
விடுக்கும் இதனில் உறப்பாவர்
விரவி இருக்கில் தரித்திரமே

**விளக்கம்**

**2–5–8–9–**களில் பாவிகள் வலுவற்று இருப்பது அந்தச் சாதகனுக்கு மிகவும் வறுமையை ஏற்படுத்தும். இவற்றுள் மூன்று வீடுகளில் பாவிகள் இருப்பது முக்கால் பங்கு வறுமையை ஏற்படுத்தும். இரண்டு வீடுகளில் பாவிகள் இருப்பது

முக்கால் பங்கு வறுமையை ஏற்படுத்தும். இரண்டு வீடுகளில் பாவிகள் இருப்பது அரைப்பங்குத் தரித்திரத்தை உண்டாக்கும். இலக்கினத்தில் மட்டும் பாவிகள் இருப்பது கால்ப் பங்குத் தரித்திரத்தைத் தரும்.

**அங்கவீனம் (உடற்குறை)**

கண்ட பன்னிரண் டாம்வீட்டோன்
கனத்திரி கோணம் ஏறிக்
கொண்ட கேந்திரத் தினில்நிற்க
அவனோடு கூடி ராகு
அண்டியே நிற்கப் பாவர்
அவர்க ளைப்பார்த் திருக்க
எண்டிசை யுலக இலங்க
வீன னாயிருப் பனென்னே

**விளக்கம்**

12ஆம் அதிபதி கேந்திர கோணங்களில் இருந்து அதனுடன் இராகுவும் சேர்ந்து இருந்தால் உடல் உறுப்புகள் குறைவாக இருக்கும். அல்லது உடல் உறுப்புகளில் குறை இருக்கும்.

**உடல் ஊனம் – துன்பம்**

சிந்தை காரி குருபதி
செவ்வாய் ராகு கேந்திரத்தில்
அந்த முடனே திரிகோணத்
தணுகா திருக்கப் பலனில்லார்
வந்தால் அங்க வீணமுறும்
மருவும் தேச சஞ்சாரம்
நொந்தே புதல்வர் நாசமுறும்
நொய்யனும் இடியன் கண்டீரே

**விளக்கம்**

சனி, குரு, சூரியன், செவ்வாய், இராகு ஆகியவை கேந்திரங்களில் இருந்து, திரிகோணங்களில் இல்லாமல் இருந்தால் சாதகர்க்கு உடலில் ஊனம் உண்டாகும். மேலும் அவர் வெளிநாடுகளுக்குச் செல்பவர். குழந்தைகளுக்கு அழிவை உடையவர். அடுக்கடுக்காயும், திடீரென இடி போலும் பலவிதமான துயரைப் பெறுபவர்.

**தீய யோகம்**

இந்து ஒடு சுபர்கூடி
ஈரிரண் டெய்தில் கள்ளன்
முந்தி ரண்டில் சேய்மாந்தி
முழுப்பா வர்உறில் தீநோயன்
அந்த மறப்பொய் யன்பெண்டிர்
வியபி சாரியாண் மையில்லான்
சிந்தனை வியபி சாரத்தன்
நிசமிலான் தீய ஊணன்

**விளக்கம்**

சந்திரனுடன் தீயவை சேர்ந்து 4–இல் இருந்தால் திருடனாக, குறுக்கு வழியில் பணம் சேர்ப்பவனாக இருப்பான். 2–ஆம் வீட்டில் செவ்வாயும், குளிகனும் இருந்து, தீயவற்றின் தொடர்பு பெற்றால் தீராத கொடிய வியாதியை உடையவன், பொய் பேசுபவன், பெண்களுக்குப் பணிவிடை செய்பவன், ஆண்மையற்ற கோழை, மனத்தில் தேவையற்ற சிந்தனைகள் பலவற்றை உடையவன், முறையற்ற உணவு வகைகளை உண்பவன்.

**இரட்டைப் பிறவி**

ஆடுஅரி ஏறு மான்வில்
அலரி உற்று ஏனையோர்கள்
நாடியே உபய லக்கி
னத்தினிற் பலமாய் நண்ணில்
கூடிய குழவி இரண்டாம்
குசன்ஏழிற் கதிரோன் ஏட்டில்
நீடிடில் சரத்தின் மற்றோர்
நின்றிடில் பலன்கள் இல்லை

**விளக்கம்**

மேடம், இடபம், சிம்மம், தனுசு ஆகிய இடங்களில் ஒன்றில் சூரியன் இருக்க, மற்றவை உபயத்தில் வலுப்பெற தாய்க்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கும். 7–இல் செவ்வாயும், 8–இல் சூரியனும், சரராசியில் மற்றவையும் இருப்பின் கர்ப்பத்திலிருந்து இரண்டு குழந்தைகள் பிறக்கும். இது பயனற்றது.

**தந்தை தேசாந்திரி**

நாலிடத் ததிபன் பாக்கி
யாதிபன் இலக்கி னத்தில்
சாலவே நல்லோர் பார்க்கத்
தான்உறில் ராச பூச்சியன்
கோலிய சனிஒன்று அல்லால்
குசன்ஏழில் உறினும் சுங்கன்
மாலிவர் நடுவில் இந்து
மருவினும் பிதாவேற் றூரே

**விளக்கம்**

**4, 9** – ஆம் அதிபதிகள் இலக்கினத்தில் இருக்க, அவற்றை நற்கோள்கள் பார்க்கப் பிறந்தவன் அரசாங்க ஆதரவு உடையவனாம். சனி இலக்கினத்திலும், செவ்வாய் ஏழிலும் இருந்து, சந்திரன் சுக்கிரனுக்கும் புதனுக்கும் இடையில் இருந்தால் தந்தையானவன் வேற்று ஊரில் வசிப்பான்.

**குழந்தையின் நிலை**

சேய்க்குப் பன்னொன்றி லிந்து
சேர்கிலோ குழவிக் கீனம்
ஆக்கிய நல்லோர் காணில்
அவனை மற்றோர் வளர்ப்பர்
வீக்கிய பாவர் காணில்
வியமதாங் குழவி யேகும்
பாக்கிய ரிந்தைக் காணில்
தகப்பன் வாழ்பதி யில்செனனம்

**விளக்கம்**

செவ்வாய்க்குப் பதினொன்றில் சந்திரன் இருந்தால் குழந்தைக்கு ஈனமாகும். இந்தச் செவ்வாயை நற்கோள்கள் பார்த்தால் குழந்தையை மற்றவர் வளர்ப்பர். தீயகோள்கள் பார்ப்பின் குழந்தை இறந்து போகும். சந்திரனை **9**–ஆம் வீட்டோன் பார்க்கில் சாதகன் தன் தந்தை வீட்டிலேயே பிறப்பான்.

**குழந்தையின் பிறப்பிடம்**

நீசத் தானத் தில்நல்லோர்
நின்று சந்திர னைக்காணில்
பேசுவர் மரத்தின் கீழே
பிறந்திடும் பிள்ளை என்றே
பூசல் செய்பா பர்நீசம்
பொருந்திய சசியைக் காணில்
ஏசுறு நீசர் வீட்டில்
பிறந்த சேயெனச் சொல்வாரே

**விளக்கம்**

நற்கோள்கள் நீசம் பெற்றுச் சந்திரனைப் பார்த்தால் மரத்தடியில் பிறந்த குழந்தை என்று சொல்வார்கள். தீயவை நீசம் பெற்றுச் சந்திரனைப் பார்த்தால் அக்குழந்தை கீழான செயல்பாடுள்ளவர்களின் வீட்டில் பிறந்தது என்று கூறுவர்.

**அலி – குள்ளன்**

புந்தி வீட்டினில் பிறக்கப்
புதனா றாமிடத் தில்நிற்க
அந்த ஆறாம் இடத்து
அதிபன் லக்கினத் தில்நிற்க
நிந்தையாம் அலியும் ஆவன்
நிலவுசன் மாதி யோடும்
மந்தனும் புதனும் கூடில்
வடிவினில் குள்ளன் ஆவன்

**விளக்கம்**

புதனுடைய ஆட்சி வீடு இலக்கினமாகி, புதன் 6–இல் இருக்க, புதன் இருக்கும் வீட்டின் அதிபதி இலக்கினத்தில் இருந்தால் சாதகன் ஆண்மைக் குறையுடையவனாக, அல்லது அலியாக இருப்பான். இலக்கினாதியோடு சந்திரன், சனி, புதன் ஆகியவை கூடி நின்றால் சாதகன் உயரம் குறைந்த குள்ளனாக இருப்பான்.

**பிற்பகுதியில் சுகம்**

பகரும்லக் கினபன் பத்தில் இரண்டினில்
வகையில் நிற்க வலுத்துலா பாதிபதியும்
இகலில் லாபத்தில் ஆண்டு இருந்திட
நுகரும் விஞ்சாதி ஆண்டில் சுகம்தரும்

**விளக்கம்**

இலக்கினாதிபதி 2–10 களில் இருக்க, 11–ஆம் இடம் வலுப்பெற்றிருக்க, 11 – ஆம் அதிபதியும் அதிலேயே இருக்க, சாதகன் தன் காலத்தின் பிற்பகுதியில் சுகத்துடன் வாழ்வான்.

**தத்துப் பிள்ளை**

உற்றிடும்சன் மத்தாதி ஈரைந்தில் இருக்க
உண்மையுடன் பத்தாதி உறுபலவீ னனுமாய்ப்
பற்றிடும்வி யமாறெட்டில் சுபர்நோக்க நிற்கில்
பயில்தத்துப் புத்திரனாம் பகருவெகு வயதே
வெற்றிகொளும் லக்கினத்தில் மிகுபாபர் இருக்க
மேவியசன் மாதிபதி மிகுபலவா னாக
குற்றமுறும் பிணிகொள்பவன் சுபர்சன்மம் கண்டால்
குணமாமப் பிணிவேறுகொடுமையுஞ் யாதே

**விளக்கம்**

சனனலக்கினாதிபதி 10–இல் இருக்கவும், 10–க்குரியது 6, 8, 12– களில் ஒன்றில் நற்கோள் பார்வையின்றி இருக்கவும் பிறந்த சாதகன் தக்க வயதில் தத்துப் புத்திரனாக வளருவான். இலக்கினத்தில் தீயகோள்கள் இருந்து, இலக்கினாதிபதியும் மிகுந்த வலிமை பெற்று இருப்பின் சாதகன் குற்றமான நோயினை அடைவான். நற்கோள்கள் சனன இலக்கினத்தைப் பார்த்தால் அந்த நோய் நாளடைவில் குணமாகும். துன்பங்கள் பெரிய அளவில் இருக்காது.

**இரட்டைக் குழந்தை**

செய்யபுதனார் பாவரங்கி சத்தில்நின் றாலும்
செறிந்தந்த உபயவங்கி சத்தில்நின்றாலும்
ஐயமறவே நிற்கில்பிள் ளையிரட் டையதாம்
ஆம்தனுவே லக்கினமாய்ப் பிற்பாதி ஆகில்
பையஅதில் நின்றவர்சிங் காங்கிசத்தில் தானே
பரிந்துநிற்கப் புதன்சனியப் பதியதனைப் பார்க்க
துய்யகருக் கொண்டிருந்த பையுடனே கூடத்
தோன்றவே சிறுகுழவி தான்தோன்றும் தானே

**விளக்கம்**

புதன் அம்சத்தில் உபயராசியிலும், தீயவற்றின் வீட்டிலும் இருந்தால் இரட்டைக் குழந்தை பிறக்கும். தனுசு லக்கினமாகவும் அதில் 15 பாகைக்கு மேல்

இலக்கினம் அமைந்து, அதில் உள்ள கோள் சிம்மராசி அம்சத்தில் இருந்தாலும், புதனும் சனியும் தனுசு ராசியைப் பார்த்தாலும் கருப்பையுடன் குழந்தை பிறக்கும்.

**மச்சம்**

தோன்றும்சன் மத்திரவி புதன்வெள்ளி அரசன்
தொடர்ந்தேஉற் றிடில்வலப்பக் கத்தில்மறுச் சொல்லே
ஊன்றுசெவ்வாய் திங்கள்சனிக் குலவுமிடப் பக்கம்
உறையுமறு வென்றென்றே உரைப்பரதைக் கேண்மின்
ஏன்றசுடர்க் கதிபனுற்றால் வயிற்றில்மதி சிரத்தில்
இயல்செவ்வாய்க் கிருப்பிடத்தில் எழிற்புதன்பக் கத்தில்
ஆன்றமறு வரசனுக்கு முகத்தில் வெள்ளி துடையில்
அருஞ்சனிக்குக் காலிடத்தில் ஆம்மறுவாம் என்னே

**விளக்கம்**

இலக்கினத்தில் சூரியன், புதன், சுக்கிரன், குரு ஆகியவை இருந்தாலும், அல்லது இலக்கினம் முதல் தொடர்ந்து இருந்தாலும் சாதகனுக்கு வலப்பக்கத்தில் மச்சம் இருக்கும். செவ்வாய், சந்திரன், சனி ஆகியவை இருந்தால் இடப்பக்கத்தில் மச்சம் இருக்கும். சூரியன் இலக்கினத்தில் இருந்தால் வயிற்றில் மச்சம் உண்டு. சந்திரன் இலக்கினத்தில் இருந்தால் தலையில் மச்சம் இருக்கும். இவையன்றிச் செவ்வாய் இருந்தால் இடுப்பிலும், புதன் இருந்தால் விலாப் பக்கங்களிலும், குரு இருந்தால் முகத்திலும், சுக்கிரன் இருந்தால் தொடையிலும், சனி இருந்தால் காலிலும் மச்சங்கள் உண்டு.

**கொடி சுற்றிப் பிறத்தல்**

கண்ணார் இடபம் தகர்சிங்கம்
கண்ட சன்ம லக்கினமாய்ப்
பண்ணார் சனிசெவ் வாய்கூடிப்
பார்க்கில் கொடிரண் டுளதாகும்
தண்ணார் செவ்வாய் கண்பார்வை
தான்செங் கொடியொன் றேசுற்றும்
எண்ணார் சவுரி பார்வைக்கே
இருக்கும் கரிய கொடியொன்றே

**விளக்கம்**

மேடம், இடபம், சிம்மம் ஆகியவற்றில் ஒன்று இலக்கினமாக, அதில் செவ்வாயும் சனியும் இருக்க, பார்க்கப் பிறக்கும் குழந்தை இரண்டு கொடிகள் சுற்றிப் பிறக்கும். செவ்வாய் மட்டும் பார்த்தால் செங்கொடி ஒன்று சுற்றிப் பிறக்கும். சனி மட்டும் பார்த்தால் கருமை நிறமுள்ள கொடி சுற்றிப் பிறக்கும்.

**தலையில் கொடி சுற்றிப் பிறத்தல்**

கொடிய பாம்பி னுடனிரவி
கூடி இருக்கில் கொடிதலையாம்
நெடிய சன்மம் எட்டாதி
நெருங்கில் ரோக சரீரனுமாம்
படிய செவ்வாய் சனிசன்மம்
பற்றி இருக்கில் கல்லெரிப்பாம்
உடனே அவன்தன் விழிதனக்கே
உறக்கம் மிகுதி உண்டாமே

**விளக்கம்**

இராகு கேதுக்களுடன் சூரியன் இணைந்திருந்தால் குழந்தையின் தலையில் கொடி சுற்றிப் பிறக்கும். 1–8– ஆம் அதிபதிகள் இணைந்திருந்தால் நோயால் துன்பம் ஏற்படும். இலக்கினத்தில் செவ்வாயும் சனியும் இருந்தால் கண்பார்வை மங்கும். வெங்கடுப்பு நோய் உண்டாகும். இதனால் கண்தெரிவது குறைந்து போதல் போன்ற துயரங்கள் ஏற்படும்.

**மலைவாசம்**

கருதும் சன்மம் உபயமதாய்
கண்டால் சிலநாள் விதேசத்தில்
பரிதி சன்மா திபனாகில்
பரவுங் கிரியில் சஞ்சாரம்
சிரரோ கம்சற் றுண்டென்பர்
செவ்வாய் சன்மா திபனாகில்
உருவா யுதத்தால் அக்கினியால்
உறுநோய் காட்டும் உண்மையிதே

**விளக்கம்**

இலக்கினம் உபயராசியானால் சில காலம் வெளியூரிலும், இறுதிக்காலம் சொந்த ஊரிலும் வசிப்பவன். இலக்கினாதிபதி சூரியனாக இருந்தால் மலைப்

பிரதேசத்தில் வாழ்பவன். தலைநோய் உள்ளவன். இலக்கினாதிபதி செவ்வாயாகில் ஆயுதங்களாலும், நெருப்பினாலும் நோய் ஏற்படும்.

**கணிதம் – வியாபாரம்**

உண்மைப் புதன்சன் மாதிபனே
உளது வித்தை கணிதமுடன்
வண்மை வியாபா ரத்தொழிலே
வரும்பொன் வெள்ளி மனையானால்
பண்மை சுருதி யுணர்தனவான்
பாங்கில் சனித்த பதிநீங்கான்
தண்மை பகரச் சுபகர்மத்
தலைவன் என்றே சாற்றிடுமே

**விளக்கம்**

இலக்கினாதிபதி புதன் ஆனால் கல்வியில் தேர்ச்சியும், கணிதத்தில் ஆர்வமும், வியாபார நுணுக்கமும் அறிந்தவர். இலக்கினாதிபதி சுக்கிரனும் குருவும் ஆனால் சாத்திரங்களைக் கற்று அதனால் உயர் பதவியும் செல்வமும் அடைபவர். பிறந்த ஊரிலேயே வாழ்பவர். நல்வார்த்தை பேசுபவர். ஊர் மக்களுக்கு நற்காரியங்களைச் செய்து வைக்கும் தலைவனாக விளங்கும் மேன்மையுடையவர்.

**மயானம் – விருப்பமற்ற சனனம்**

தேசார் மனித லக்கினமாய்
செவ்வாய் பார்க்கச் சனித்தவகனும்
மாசார் மசானக் கரையென்றே
வழுத்த லாகும் சனிசெவ்வாய்
நேசார் திரிகோ ணத்தில்மதி
நிற்கப் பிறந்த நேயனையே
கூசாள் அன்னைஎறி வாளிந்தைக்
குருநோக் கிற்கைக் கொள்வானே

**விளக்கம்**

மனித லக்கினங்களான மிதுனம், கன்னி, துலாம், கும்பம் ஆகியவற்றில் ஒன்று இலக்கினமாக அதைச் செவ்வாய் பார்க்கச் சாதகன் இடுகாட்டிற்கு அருகில் பிறந்த குழந்தையாகும். சனியும் செவ்வாயும் சேர்ந்திருந்து, அவற்றுக்கு **1–5–9** களில் ஒன்றில் சநதிரன் இருக்க குழந்தையின் தாய் அஞ்சாது, மனம்

நாணி வெட்கப்படாது குழந்தையை வீசி எறிந்து விடுவாள். இச்சந்திரனக் குரு பார்ப்பின் வீசாமல் தானே வைத்துக் கொள்வாள்.

**அயல்நாட்டுப் பயணம்**

பேசும் சன்மம் சரராசி
பிரியாச் சரத்தில் அதிபனும்
பாசம் சரத்தில் உறத்தோன்றிப்
பார்க்கில் தூல சரீரனுமாம்
வீசு லக்கினம் சரமாயவ்
வீட்டுக் குடையோன் சரத்திருக்க
தேசம் விடுத்தே தேசசஞ்சாரம்
திகழத் திரிவன் எனச்சொல்வாய்

**விளக்கம்**

இலக்கினம் சரராசியாக, அதில் இலக்கினாதிபதி இருந்தாலும் அல்லது வேறு இடங்களில் இருந்து இலக்கினத்தைப் பார்த்தாலும் சாதகன் பெருத்த உடலினை உடையவன். இலக்கினம் சர ராசியாகவும், அதன் அதிபதி அந்த வீட்டிலேயே இருக்கவும் பிறந்தவன் பல நாடுகளைச் சுற்றித் திரிவான்.

**கண்ணோய்**

ஆமே ரவிசுக் கிரன்ரண்
டாதி சன்மத் தாதியிவர்
தாமே கூடி அவரவர்கள்
தானம் தனக்கா றெட்டுவியம்
தாமே இருக்கில் அவரவர்கள்
திருஷ்டிக் கூனம் சார்ந்திடுமே
நாமே சொல்லாப் பலபார்வை
நயனபலன் கண்டெனுஞ் சொல்லாம்

**விளக்கம்**

சூரியன், சுக்கிரன், இலக்கினாதிபதி, இரண்டாம் அதிபதி ஆகியவை இணைந்து அவரவர்களுடைய சொந்த வீட்டிற்கு **6–8–12** களில் இருந்தால் கண்ணோய் ஏற்படும்.

**ஊமை**

குடும்பத் தானாதி யோடு
குலவிய புதனும் கூடி
உடன்பட ஆறான் தானத்து

உற்றிடில் ஊமை ஆகும்
இடும்புறும் மூணா மாதி
லக்கினத் ததிபன் தானும்
திடம்பெறக் கூடில் ஊமை
ஆகியே திரிவன் தானே

**விளக்கம்**

**2–**ஆம் அதிபதியும் புதனும் இணைந்து **6–**ம் பாவத்தில் இருந்தால் ஊமையாம். **3–**ஆம் அதிபதியும் இலக்கினாதிபதியும் சேர்ந்தால் ஊமையாம்.

**ஊமை**

கூறிய லக்கி னாதி
சுக்கிரன் கூடி ஆறெட்டு
ஏறிய வியத்தில் நிற்க
ஊமையாம் இரண்டா மாதி
பேறுடன் அவரைக் கூடில்
ஊமையாம் பின்மற் றோரும்
சீறிடா தவரைக் கூடில்
ஊமையாய்த் திரிவன் தானே

**விளக்கம்**

இலக்கினாதிபதியும் சுக்கிரனும் கூடி 6, 8, 12 – களில் இருந்தால் ஊமையாவார். 2–ஆம் அதிபதியும் சுக்கிரனும் இணைந்து வலுவற்று இருந்தால் ஊமையாவார். மேலும் தீயவையும் இத்துடன் இணைந்தால் பேசும் திறன் இருக்காது.

**கல்வி – வித்தை**

பொன்புதன் இரண்டின் கோவும்
பொருந்திய கேந்தி ரத்தில்
பின்திரி கோண மேறில்
பெற்றிடும் வித்தை லாபம்
இன்பமாய் இவரெட் டாறில்
இருந்திடில் இல்லை வித்தை
அன்புசேர் கணக்கன் உச்சம்
ஆகினல் வித்தை கூறே

**விளக்கம்**

குரு, புதன், 2–ஆம் அதிபதி ஆகியவை கேந்திரம் அல்லது திரிகோணம் பெற்றால் கல்வி விருத்தியும் அதாவது உயர்கல்வியும், அதனால் ஆதாயமும் உண்டு. இவை 6–8களில் இருந்தால் கல்வியில் தடை ஏற்படும். புதன் உச்சமானால் யாவரும் புகழத்தக்க மேன்மையான உயர்கல்வியைப் பெறுவர்.

**சோதிடப் புலமை**

ஆனகேந் திரத்தில் புந்தி
இருக்க ரெண்டாம் வீட்டாதி
தானுமே உச்சமா கத்தகும்
பிருகு உபயம் மேவ

ஊனமில் மூன்றில் நல்லோர்

உறவெள்ளி உச்சம் ஆக

மானிலத்து உதித்த காளை

சோதிடம் வழுத்த வல்லான்

**விளக்கம்**

புதன் கேந்திரத்திலும், 2–ஆம் அதிபதி உச்சம் பெற்றும், சுக்கிரன் உபயராசியிலும், சுபர் 3–இலும், சுக்கிரன் உச்சம் பெற்றும் இருந்தால் சாதகன் சோதிடம் என்னும் கணித சாத்திரத்தில் வித்துவான்.

**தனலாபம்**

சென்மாதி பதிக்கிரண்டா மிடத்தில் நல்லோர்

திறல்மூன்றா மிடத்தீயோர் நான்கில் நல்லோர்

நன்மார்க்க முடனிருந்தால் தனவான் சன்ம

லக்கினத்தோன் உபயத்தில்

நண்ணினும் பொன் னுளனாம்

சன்மார்க்க முடனந்த தனபா வத்தில்

தரும்பாக்கிய லாபாதி தரிக்கில் பார்க்கில்

துன்மார்க்க மறவளகைக் குபேரன் போலத்

தொலைவிலாத் தனம்படைப்பா

ரெனச்சொல் வாரே

**விளக்கம்**

இலக்கினாதிபதிக்கு 2–இல் நற்கோள்களும், மூன்றில் தீயகோள்களும், 4–இல் நற்கோள்களும் இருந்தால் நிறைந்த செல்வத்தை உடையவன். இலக்கினாதிபதி உபயத்தில் வலுவாக இருந்தால் பொன்னும் பொருளும் உடைய செல்வந்தனாம். 2–ஆம் பாவத்தில் 9–11 ஆம் அதிபதிகள் இருந்தாலும், பார்த்தாலும் அளகாபுரிக்கு அரசனான குபேரனைப் போல் செல்வம் படைத்து எந்நாளும் அழியாத செல்வத்தோடு வாழ்வன்.

**வறுமை – செல்வம்**

சாதகன்லக் கினமுதலாய் லக்கி னாதி

தானிருந்த வீடளவும் எண்ணிக் கண்ட

ஓதுதொகை லக்கினாதி பனைத்தொட் டேயுடன்

எண்ணிக் கண்டமனை பாவர் வீடேல்

ஏதமுறும் தரித்திரயோ கங்கள் ஆகும்

இனிமையுள் ளோர்வீடா யின்தனவா னாவன்

போது சன்மம் தனக்கைந்தீ ராறி ரண்டும்
புனிதர்மனை ஆகில் பொன்னுளனே ஆவன்

**விளக்கம்**

இலக்கினம் முதல் இலக்கினாதிபதி இருக்கும் வீடுவரை எண்ணி வந்த தொகையை இலக்கினாதிபதி இருக்கும் வீட்டில் இருந்து எண்ண வரும் இராசி தீயகோளின் வீடாயின் துன்பத்தைத் தரக் கூடிய வறுமை யோகம் என்பர். நற்கோளின் வீடாயின் செல்வமுடையோன். 2–5–12ஆம் பாவங்கள் நற்கோள்களின் இராசிகளே ஆயின் செல்வம் படைத்தவன்.

**புதையல்**

தனம்சேரும் வகைஒன்ப தாமதிபன் திசையில்
தகும்பத்தா திபன்புசிப்பில் அப்போகோ சாரத்தில்
இனஞ்சேர்நான் காதிபன்பத் தாமிடத்தில் இருக்க
இயல்பத்தாம் அதிபனுக்கு நாலாம் ராசியிலும்
கனஞ்சேரும் குசனுடைய கேந்திரத்தில் ஏனும்
கலந்துநிற்கப் புராதனமாம் காணிமனை அதனில்
முனஞ்சேர்பத் தாமதிபன் திக்கினில்நிட் சேபம்
முதற்கொண்டு வாழ்வரென மொழிந்திடுவர் தக்கோர்

**விளக்கம்**

9–ஆம் அதிபதியின் தசாவில் 10–ஆம் அதிபதியின் புத்தியில், கோசார நிலையில் 4–ஆம் அதிபதி 10–இலும், 10–ஆம் அதிபதி 4–இல் செவ்வாய் கேந்திரத்திலும் இருக்கும் காலம் சாதகனின் அனுபவத்தில் இருக்கும். நிலம், வீட்டுமனை ஆகியவற்றில் 10–ஆம் அதிபதி குறிக்கும் திக்கில் புதையல் கிடைக்கும்.

**இலட்சாதிபதி**

சொல்லும் இரண்டா மாதிபதி
சூழ்ந்து லாபத் திலிருக்க
வெல்லும் லாபன் பாக்கியாதி
விரும்பி இரண்டில் உற்றிடவே
நல்ல குணமும் தருமனுமாய்
நான்கு லட்சம் பொன்தேடி
அல்லல் அறவே வாழ்ந்துண்டே
அவனி தன்னில் இருந்திடுவான்

**விளக்கம்**

2–ஆம் அதிபதி 11–இல், 9, 11 – ஆம் அதிபதிகள் இணைந்து 2–இல் இருந்தால் சாதகன் நல்ல குணத்துடன் தருமவானாக நான்கு இலட்சம் பொன் சம்பாதித்து, துன்பம் இன்றி நல்லபடியாக வாழ்வான்.

**கோடீசுவரன்**

இருந்த வில்லே லக்கினமாய்
இதிலே குருவும் தானுறவே
பொருந்து துலாத்தில் சனிஉச்சன்
புகல்லா பாதிபன் நான்கிடத்தில்
திருந்தி இருக்கத் தனம்தேடி
திகழ்வன் நீதி தவறாமல்
தெரிந்து பலரை ரட்சித்துச்
சொம்பொன் கோடி தேடுவனே

**விளக்கம்**

தனுசு லக்கினமாக அதில் குரு இருக்க, துலாத்தில் உச்சம் பெற்ற சனி இருக்க, 11– க்கதிபதி 4–இல் இருக்கச் சாதகன் செல்வத்தினை அறிவுத்திறனால் தேடிச் சேர்த்து நீதி தவறாமல் நல்வாழ்வினைப் பெற்று, தனக்குத் தெரிந்த பலரை அரவணைத்து, பொன்னையும் பொருளையும் கோடிக்கணக்கில் சேர்ப்பான்.

**சகோதரர் அரிட்டம்**

சேரும்செவ் வாய் புடத்தை வைத்துக் கொண்டு
செய்யகருங் கோள்புடத்தை எடுக்கில் அப்போ
நேருமந்த ராசியில்பொன் மருவும் போது
நிற்குமிளை யோர்க்கரிட்டம் கருங்கோள் தன்னைக்
பாருமந்தப் புடத்தில்அங் காரகனை வாங்கி
பண்பொடுநின் றிடும்ராசி தனிலரசன் வந்தால்
ஊருமுற்றா ருமறியச்சேட் டன்பார் விட்டே
உயர்பரம பதியணுகு மெனவுரைசெய் வாயே

**விளக்கம்**

செவ்வாயின் பாகையில் இருந்து இராகுவின் பாகையைக் கழித்து வரும் இராசியில் கோசார குரு வரும் காலம் இளைய சகோதரனுக்குக் கண்டம் உண்டாகும். இராசியில் குரு ஓர் ஆண்டு இருக்கும் போது சாதகனின் முன் பிறந்தவன் இறக்கும் நிலை ஏற்படும்.

**வாகனம்**

சசிவா கனாதி சன்மத்
தாதி இம்மூவர் கூடில்
அசுவ வாகனம் உண்டாகும்
அவருடன் வெள்ளி கூடில்

வசையிலாம் தோணி யுண்டாம்
வாகன தானத் தாதி
ஒசிவின்றி வியத்தில் இன்றி
உற்றிடில் சிவிகை உண்டே

**விளக்கம்**

வாகன அதிபதியான 4 –ஆம் அதிபதி, சந்திரன், இலக்கினாதிபதி ஆகியவை சேர்ந்தால் குதிரைவாகனம் உண்டாகும். இவற்றுடன் சுக்கிரனும் இணையப் பல்லக்கு வாகனம் அமையும். 4–ஆம் அதிபதி 12–இல் இல்லாமல் இருப்பதும் பல்லக்கு வாகனத்தைத் தரும்.

**பலவகை வாகனங்கள்**

சாரமுறும் சோமனுக்கு மூன்றில்சுக் கிரனும்
தானிருக்கச் சுக்கிரனார் தமக்குமே மூன்றில்
வீரமுறு மதியிருக்க அன்றியே பின்னும்
வினவியொரு வரையொருவர் பார்த்துமே நிற்கப்
பாரமுறும் குடும்பத்தா னத்தைநல்லோர் நோக்கிப்
பார்த்துலக்கி னத்தைப் பார்க் கினும்வா கனங்கள்
சேருமிக வென்றென்றே நல்லோர்கள் சொன்னார்
சிலைப்புருவக் கயலொத்த விழித்தெரிவை கேளாய்

**விளக்கம்**

சந்திரனுக்கு 3–இல் சுக்கிரன் அல்லது சுக்கிரனுக்கு 3–இல் சந்திரன் இருந்தாலும் அல்லது சந்திரனும் சுக்கிரனும் ஒன்றையொன்று பார்த்துதுக் கொண்டாலும், 2–ஆம் வீட்டை நற்கோள்கள் பார்த்தாலும் பலவகை வாகனங்கள் சேர்ந்து வாகன விருத்தியுண்டாகும்.

**பூமிக்கரசன்**

வாக னாதி மருவு மனைதனக்
காக ஈரைந் தகத்துக் கதிபனும்
ஏக வீட்டுக் கிறைவனைக் கூடிடில்
போக வான்வெகு பூமிக் கரசனே

**விளக்கம்**

4–ஆம் அதிபதி இருக்கும் வீட்டிற்கு 10–ஆம் அதிபதி சூரிய சந்திரர்களோடு கூடி இருக்கில் போகவானாகவும் பூமிக்கு அரசனாகவும் இருப்பான்.

**அரசவெகுமதி**

உண்டாம்விப் பிரதுரையா லதிகதனம் உடையவன்
உறுசன்மத் தில்பத்தி லுத்தமர்கள் இருக்க
மிண்டாம்சன் மாதிபன்பத் தாமதிப னோடும்
விரும்பியேநல் லோர்தாமும் மேவியே நிற்க
வண்டாருங் குழவின்மட வாயரச ராலும்
மாணிக்க வகைசேரும் மன்னரைச்சே வித்தே
கொண்டாடு சத்திரசா மரைகள்மிக வுள்ள
கோமானா குவனென்றே கூறவர்மே லோரே

**விளக்கம்**

**1–10**களில் நற்கோள்கள் இருக்க மேலான உயர் அதிகாரிகளால் தகுதியும், செல்வமும் உண்டாகும். வலிமை பெற்ற இலக்கினாதிபன் **10**க்குரியதுடனும், நல்லோருடனும் கூட அரசரால் நவரத்தின வகைகள் சேரும். அரசரிடத்து உயர்பதவியினைப் பெற்றவனாய் மக்களால் மதிக்கப் பெறும் தகுதியில் குடை சாமரைகள் உள்ள அரசனாவான்.

**மாதுரு பலன்**

அன்னை தன்தானத் தாதி
அதிஅட் டமத் தில்காரி
**8**ன்னு டன்கூ டில்பின்கோ
சரமன் னைக் கைந்து ஒன்பானில்
மன்னிய காரி மேவின்
மாதா வுக்கரிட் டம்சொல்லும்
மின்னிய நற்கோ ளுச்சம்
எய்திடின் நன்காம் நல்லாய்

**விளக்கம்**

**4**–ஆம் அதிபதி **8**–இல் அதோடு சனி சேர்ந்திருக்கில் சாதகனுக்குப் பின் ஒரு தாய் வருவாள். நான்காம் இராசிக்கு **5–9** களில் சனி இருக்கில் தன் தாயாருக்குக் கண்டம் வரும். மேற்சொல்லிய இராசிகளில் நற்கோள்கள் உச்சம் பெற்றிருக்க அவன் தாயாருக்கு மேலே கூறிய தோசங் வராது.

**அன்னைக்கு அரிட்டம்**

நாலிரண்டு ஏழு இடத்தே
அதிபராய் நண்ணு மூவர்
நாலிரண்டு ஏழு இடத்தில்
சனிகுசன் உடனே நண்ணில்

நாலிரண்டு ஏழில் செவ்வாய்
நண்ணிடில் காரி பார்க்கில்
சால வன்னைக் கரிட்டம்
சாற்றுவர் சனியைக் கொண்டே

**விளக்கம்**

2, 4–ஆம் வீட்டுக்குரியவை அவரவர் ஆட்சி இடங்களில் இருந்து, சனியும் செவ்வாயும் இணைந்தாலும், மேற்சொன்ன இடங்களில் சனியொன்று தனித்து இருந்தாலும், சனி எங்கிருந்து பார்த்தாலும் அவன் தாய்க்குச் சனியின வன்மைக் கேற்பக் கண்டம் ஏற்படும்.

**பிறர் வளர்ப்பு**

சனிகுசற் கைந்தே ழொன்பான்
தனில்சசி உறில்தாய் நில்லான்
இனியபொன் பார்க்கில் நிற்பாள்
லக்கினத்து இந்து நிற்கில்
முனிபவர் இந்தை நோக்க
முந்தும் ஏழிடத் தில்செவ்வாய்
தனியுற வந்த பிள்ளை
தனைப்பிறர் வளர்ப்பர் காணும்

**விளக்கம்**

சனியும் செவ்வாயும் நின்ற இராசிக்கு 5–7–9 களில் சந்திரன் இருந்தால் சாதகனின் தாய் இறந்து போவாள். மேற்கூறியவாறே சந்திரன் இருந்து குரு பார்த்தால் நிறைந்த ஆயுள் உடையவன். சந்திரன் இலக்கினத்தில் இருக்க அதைப் பகைக் கோள்கள் பார்க்க, செவ்வாய் 7–இல் நிற்கப் பிறந்தவனை அந்நியர் வளர்ப்பர்.

**பெற்றோர்க்கரிட்டம்**

கதிரவற் கிரண்டில் பன்னி
ரண்டில் காரி நிற்க
மதிதனக் கிரண்டில் பன்னி
ரண்டில் மந்தன் நிற்க
கதிர்குசன் கூடி மற்றும்
காரி சந்திரனைக் கூட
அதிபனாம் தந்தை தாய்க்கும்
அரிட்டமென் றுரைகள் பண்ணும்

**விளக்கம்**

சூரியனுக்கு 2–12 களில் சனி நிற்கவும் அல்லது சந்திரனுக்கு 2, 12 களில் சனி சேரவும், சூரியன், சந்திரன், சனி, செவ்வாய் ஆகியவை இணைந்து ஓர் இராசியில் இருக்கவும் தந்தை தாய் இருவருக்கும் இறப்பு நேரிடும்.

**ஆகாத பிள்ளை**

இசைந்த அன்னை பிதாதானத்
திறைவர் இரவி யுடன்கூடி
அசைந்தி டாது எட்டாறு
வியத்துறினு நீச மாகவுமே
நிசந்தான் உறவே இருக்கின்தாய்
நின்ற தந்தை இருவருக்கும்
கசந்தே பிரிய மில்லாத
கடின மைந்தனாம் கண்டீர்

**விளக்கம்**

**4–9** ஆம் அதிபதிகள் குரு சூரியனுடன் இணைந்து **6–8–12**ஆம் பாவங்களில் இருந்தாலும், அவை நீசம் பெற்று இருந்தாலும் , கடின மனதுடைய, பெற்றோர்கள் விரும்பாத பிள்ளையாக இருப்பான்.

**பலவீடு**

பங்கமில் வியத்தின் மன்னன்
பரிந்து இரண்டாம் இடத்தில்
தங்கநல் வீடு கட்டிச்
சகலபாக் கியமும் சேர்ப்பன்
இங்கித வியத்தோன் தன்னோடு
எத்தனை கிரகங் கூடும்
சங்கையத் தனையாய் வீடு
கட்டிடுஞ் சமர்த்தன் தானே

**விளக்கம்**

**12** – ஆம் அதிபதி **2–**இல் இருக்க அழகு பொருந்திய வீட்டைப் பெறுவான். அனைத்துப் பாக்கியங்களையும் உடையவனாய் இருப்பான். **12–**ஆம் அதிபதி **2–**ஆம் பாவத்தில் எத்தனை கோள்களுடன் இணைந்துள்ளதோ அத்தனை வீடு கட்டி வாழும் சமர்த்துடையவனாய் இருப்பான்.

**நல்ல பிள்ளை**

மருவுஞ் சன்ம லக்கினத்தில்
வாழும் சன்மா திபனோடும்
அருளும் ஐந்தாம் இடத்ததிபன்
அணுகில் பார்க்கில் அன்புடனே
ஒருவர் தமது பதியினில்மற்

றொருவர் மாறா கவும்நிற்கில்
பெருமைப் புதல்வர் பிறந்திடுவர்
பிறந்தால் நமனுக் கஞ்சாரே

**விளக்கம்**

**1–5–**ஆம் அதிபதிகள் இணைந்து இலக்கினத்தில் இருந்தாலும், பார்த்தாலும், பரிவர்த்தனை பெற்றாலும் பெருமை சேர்க்கும் பிள்ளைகள் பிறப்பார்கள். அவர்கள் உயிருக்கஞ்சாத வீரமுடையவர்களாய் இருப்பர்.

**பிள்ளை உண்டு – இல்லை**

புத்திரத் தானத் தாதி
ஏகனாய் புதன்வீ டேறில்
புத்திரர் இல்லை நல்லோர்
கூடிடில் பிறந்து சாவர்
ஒத்திடும் பாபர் சேரின்
மகவில்லை எருது கும்பம்
வித்தக யோரை யார்க்கு
மகவில்லை விளம்புங் காலே

**விளக்கம்**

ஐந்தாமிடத்ததிபன் தனியாகப் புதன் வீட்டில் இருந்தால் பிள்ளை இல்லை. அதனுடன் சுபர் கூடியிருந்தால் பிள்ளை பிறந்து இறந்து போகும். அதனுடன் தீயவை கூடினால் பிள்ளை இல்லை. இடபம், கும்பம் ஆகிய இடங்களில் **5–**ஆம் அதிபதி இருப்பினும் பிள்ளை இல்லை.

**இளைய மனைவிவழி பிள்ளை**

விளம்பும் ஏழாம் இடத்தோன்
மேவு உச்ச நீசமின்றிக்
கலங்கம் இல்லாது இருக்கின்
கருது மூத்தா ளுக்கில்லை
இளங்கொடி யாளுக் குண்டாம்
ஏழுளோ னுச்ச நீசம்
வளம்பெரு மங்கி சத்தின்
மருவிடின் மகவுண் டாமே

**விளக்கம்** ஏழுக்குரியது உச்சநீசங்கள் இன்றி இருந்தால் முதல் மனைவிக்கு பிள்ளை இல்லை. இளைய மனைவிக்குப் புத்திரர் உண்டு. **7–**ஆம் அதிபதி அம்சத்தில் நீச, உச்ச வீடுகளில் இருந்தால் பிள்ளைப் பேறு உண்டாகும்.

**தந்தைமகன் பகை**

ஐந்தா மிடத்தில் செங்கதிரோன்
அரவும் கூடித் தானிருக்கின்
மஞ்சார் குழலாய் தந்தைக்கும்
மைந்தன் தனக்கும் வரும்பகையே
செஞ்சா லிகளும் திரவியமும்
சேதம் உண்டாம் திறமையுடன்
வஞ்சா திருந்த தலங்கள்விட்டு
தூரப் போவ திலக்கணமே

**விளக்கம்**

சூரியன், இராகு, கேதுக்களுடன் 5–இல் இருந்தால் சாதகருக்கும் புத்திரர்க்கும் பகையுண்டாகும். அதனால் நெல் முதலான தானியங்களுக்கும் திரவியங்களுக்கும் சேதமுண்டாகும். தந்தை மகனுக்குப் பகை ஏற்படாவிட்டால் இருவரும் பிரிந்து இருக்கும் சூழ்நிலை ஏற்படும்.

**அலி**

உரைசெறி யலியோ கங்கள்
ஒண்மதிக்கு ஏழில் வெய்யோன்
பரவியே தானின் றாலும்
பயில்சனிக் கேழில் புந்தி
திறமுடன் நின்ற போதும்
தீதாம் இரட்டை ராசி
இரவி மேவிடச் செவ்வாய்பார்த்
திடிலலி யோக மூன்றாம்

**விளக்கம்**

சந்திரனுக்கு 7–இல் சூரியன் அல்லது சனிக்கு 7–இல் புதன் இருந்தாலும் அல்லது இரட்டை இராசியில் சூரியன் இருந்தாலும் இவற்றைச் செவ்வாய் பார்த்தாலும் அலியோகச் சாதகன் பிறப்பான். இம்மூன்று வகை கோள் நிலைகளும் அலியோகம் தருவனவே.

**தத்துப்பிள்ளை**

மைந்தர் தானங் கள்காரி
புந்தி தன்மனை யதாக
அந்த வீடத னைக்காரி
குளிகனோடு அமரில் பார்க்கில்

சுந்தரத் தத்த னாவன்
சுபர்பல முடனே ஐந்தில்
வந்திட ஐந்தோன் நோக்கம்
அற்றிடில் தத்தாய் வாழ்வன்

**விளக்கம்**

**5–**ஆம் பாவம், புதன் ஆகியவற்றின் வீடாக, அதில் சனியும் குளிகனும் இணைந்தாலும் பார்த்தாலும் நல்ல முறையில் தத்துப்பிள்ளையாய் வளர்வான். **5–**இல் சுபர் வலுப்பெற்று **5–**ஆம் அதிபதியின் பார்வை இல்லாமல் இருந்தாலும் தத்துப்பிள்ளை யோகமே.

**பரவிசயம் – கருச்சிதைவு**

நல்லதோ ரைந்தா மதிபதி யிரவி
நற்சனி அங்கிசம் ஏறி
அல்லலார் சனிகண் டிடவுமைந் திடத்தில்
அமர்ந்திடில் பரவிச யத்தால்
வல்லமை புதல்வ னுளனென மொழிவர்
மற்றும் ஐந்தாம் இடந்தன்னில்
சொல்லிய குசனுங் காரியங் கிசத்தில்
சூழ்ந்திடக் கருச்சுரோ ணிதமாம்

**விளக்கம்**

**5–**ஆம் அதிபதியும், சூரியனும் இணைந்து சனி அம்சத்தில் அல்லது தீய வீடுகளில் இருக்க மேற்படி சனியால் பார்க்கப்படச் சாதகனின் பிள்ளை அந்நிய விசயமெனக் கூறுவர். **5–**இல் செவ்வாயும், சனியும் இணைந்து நிற்க, மேற்சொன்ன செவ்வாய் சனி அங்கிசம் ஏறக் கர்ப்பமான கரு கலைந்து போகும்.

**அந்நியர் வளர்ப்பு**

ஒன்பதாம் வீட்டுக் குடையவன் குருவாய்
இன்ப மாய்ச்சனி எய்தியே நோக்கிட
அன்பு புந்தியோ டாதவன் அங்குறில்
பின்பு பிள்ளையை அன்னியர் பேணுவார்

**விளக்கம்**

**9–**ஆம் அதிபதி குருவாக அதைச் சனி பார்க்க, சேர, புதனும் சனியும் இணைந்து ஏதேனும் ஓர் இராசியில் இருக்கப் பிறந்த குழந்தையை அந்நியர் வளர்ப்பர்.

**பகைவர்க்கு வலியன்**

காதல் ஆறாம் இடத்தில்
கடினராம் தீக்கோள் நிற்கில்
ஓதுபொல் லார்க்குப் பொல்லாங்
குரைத்து வேலவனைப் போல
ஏதிலார் தங்கட் கெல்லாம்
இடியென வலியன் ஆகி
பூதலத் தெவரும் வந்து
புகழுந்திடப் பொருந்தி வாழ்வன்

**விளக்கம்**

**6–**இல் தீங்கு செய்யும் பாவக் கோள்கள் இருந்தால் தனக்குத் தீங்கு செய்வோருக்கு அவர்கள் அடங்கும்படியான கடின வார்த்தைகளை உரைப்பான். தன்னுடைய பகைவர்களுக்கெல்லாம் வலிமையுடையவனாகி, அனைவரும் புகழ்ந்திட அவர்களோடு சேர்ந்து வாழ்வான்.

**தண்டனை இல்லை – விசக்கடி இல்லை**

கோளினில் கரிய நாகம்
கூறுமா றாமிடத்தில் நிற்கில்
தாளினில் தளைகள் பூண்டே
தடைபடுங் காவல் இல்லான்
நாளுமே பலரும் போற்ற
நண்ணிடம் கீர்த்தி மானாய்
தேள்முதல் விடங்கள் சற்றும்
தீண்டிடாத் திடவா னாமே

**விளக்கம்**

இராகு **6–**இல் இருந்தால் கட்டுக் காவல் இல்லாதவனாக இருப்பான். சோதனைகள் பலவற்றை எதிர்நோக்கி வெற்றி பெறும் கீர்த்திமான். தேள் முதலிய விச உயிரினங்கள் இவனைத் தீண்டாது. திடவானாகவும் இருப்பான்.

**ஒரு திருமணம்**

மேவிய களத்தி ராதி
விரும்பு கேந்திர கோணத்தில்
பாவியர் சேத்திரம் நட்பும்
பரிந்துறப் பத்தோன் கூடத்
தாவிய ஏழோன் அங்கிசை
தரிப்பச் சொட்டேத் திரம்கண்டால்

தேவியும் நேச மாகத்
திடமணம் புரிவன் தானே

**விளக்கம்**

7 – ஆம் வீட்டோன் கேந்திர கோணங்களிலும், பாவ கோள்களின் வீடுகளில் நட்பு பெற்றும், 10–ஆம் அதிபதியோடு கூடியும், இப்பத்தாம் அதிபதி அம்சத்தில் 7–ஆம் இராசியிடத்திலும் இருக்க, தன் சொந்த வீட்டைப் பார்க்கச் சாதகன் அழகிய பெண்ணை மணம் புரிவான்.

**செல்வமுள்ள மனைவி**

ஆனதோ ரேழி டத்தில்
அரசனும் பலம தாகி
ஈனமில் பளிங்கு தானும்
இருந்திட வலுவ தாகத்
தேனிகர் குடும்ப வாதி
சினேக ரங்கிசை யிருக்க
தானதி ரூபம் உள்ள
தளபதி நாரி என்றே

**விளக்கம்**

7–இல் குரு வலுத்திருக்க, சுக்கிரனும் வலிமை பெற, 2 ஆமிடத்தோன் நட்பு ராசியிலும் உறவோர் அம்சத்திலும் இருக்க, மிகுந்த அழகும் சொத்தும் உடைய பெண் மனைவியாக வருவாள்.

**பல திருமணம்**

இருந்திடும் இரண்டே ழாதி
லக்கின கோபுராங் கிசைக்குள்
பரிந்துறும் பத்தா மாதி
பண்புடன் ஏழில் உற்றால்
தெரிந்த நற்களத் திரங்கள்
திடமெனக் கொள்வார் என்றே
புரிந்திடும் கணித நூலின்
புண்ணியர் ஓதி னாரே

**விளக்கம்**

2, 7 ஆம் அதிபதிகள் இலக்கின கோபுர அங்கிசம் பெற, 10ஆம் அதிபதி 7இல் நிற்க அச்சாதகனுக்குப் பல மனைவிகள் உண்டு.

**மூன்று திருமணம்**

கொள்ளும் லாபாதி களத்திராதி
கூடி னாலும் பார்த்தாலும்
தெள்ளும் பலவா னாகியிவர்
திரிகோ ணத்தில் இருந்திடினும்
உள்ள விவாகம் மூன்றென்றே
உரைப்பர் கணித வல்லோர்கள்
கள்ள விடம் போல் விழிமருட்டுங்
கருமென குழல்திரு காரிகையே

**விளக்கம்**

**7, 11** அதிபதிகள் சேர்ந்தாலும் ஒன்றை யொன்று பார்த்தாலும் இரண்டும் வலுப்பெற்றுத் திரிகோணங்களில் இருந்தாலும் அச்சாதகனுக்கு மூன்று திருமணம் நடக்கும்.

**33–66–100 வயதுகள்**

நடிக்கும் சன்மம் முதல்நான்கா
மிடத்து நடுவே நாற்காலையும்
படுக்கம் புதன்சுக் கிரன்அரசன்
பரிந்தே இருக்கில் தசவருசம்
துடிக்கும் புதனொன் றேநின்றால்
தொடர் முப்பத்து மூன்றாகும்
அடிக்கும் வெள்ளிக் கறுபத்தா
றரசன் இருந்தால் நூறாமே

**விளக்கம்**

இலக்கினம் முதல் நான்கு இராசிக்குள் புதன், குரு, சுக்கிரன் ஆகியவை இருக்கச் சாதகனுக்கு ஆயுள் நூறாம். புதன் மட்டும் இருந்தால் **33** வயது. சுக்கிரன் மட்டுமானால் **66** வயது. குரு மட்டுமானால் நூறு வயது.

**12 வயது**

ஆகும் லக்கினம் எட்டாதி கூடியே
வாகு கேந்திரத் தெய்தமற் றெட்டினில்
தாகு மேளவர் ஆயினும் தானுறில்
ஏகுவன் பன்னி ரண்டினில் கண்டமே

**விளக்கம்**

**1–8** ஆம் அதிபதிகள் சேர்ந்து கேந்திரம் பெற்று, **8**இல் கோள்கள் எவை இருந்தாலும் **12** வயதில் கண்டத்தால் இறப்பான்.

**ஆயுதம் – கள்ளர் – சலம்**

அட்டமா திபனும் குசனுமே கூடி
ஆறுபன் னிரண்டிடத் திருக்கில்
துட்டரா யுதத்தால் மரணமுற் றினியோர்
சூழ்ந்துகண் டிடப்படும் காயம்
எட்டினா திபன்பாம் புடன்விய மெட்டா
றெய்திடில் கள்ளரா லரிட்டம்
தொட்டலக் கினமெட் டாதிசேர்ந் துதகம்
சூழ்மனை உறில்சல கண்டம்

**விளக்கம்**

**8–**ஆம் அதிபதி செவ்வாயுடன் கூடி **6–12** களில் இருந்தால் ஆயுதத்தால் மரணம் ஏற்படும். சுபர் பார்க்கில் காயமுண்டாகும். **8–**ஆம் அதிபதி இராகு கேதுக்களுடன் கூடி **6–8–12**களில் இருந்தால் திருடரால் மரணம் ஏற்படும். **1, 8** அதிபதிகள் **6–**இல் இருக்க நீரினால் உயிரிழப்பான்.

**வாகனம் – சன்னிவாதம்**

கண்டவெட் டாதி வாகனா திபனைக்
கலந்துபன் னிரண்டோடா றெட்டில்
மிண்டிய நீசர் சத்துரு மனையில்
மேவில்வா கனங்களால் மரணம்
மண்டியெட் டதிபன் காரியங் கிசத்தில்
வரின்மரத் தேறிவீழ்ந் திறப்பான்
அன்றியொன் றெட்டோ னீசரங்கி சம்புக்
கில்சன்னி வாதமாம் சூழம்

**விளக்கம்**

**8–** க்குரியது **4** – ஆம் அதிபதியுடன் இணைந்து **6–8–12**களில் இருந்தாலும், நீசம் பெற்றாலும், பகைவீட்டில் இருந்தாலும் வாகனங்களால் தாக்கப்பட்டு உயிர்விடுவான். **8–**ஆம் அதிபதி அம்சத்தில் சனி வீட்டில் இருந்தால் மரத்திலேறி வீழ்ந்து இறப்பான். **1, 8** அதிபதிகள் நீசக்கோளின் அம்சங்களில் இருந்தால் குளிர் சன்னி வாதநோய் ஏற்பட்டு இறப்பான்.

**கல்லடி – இடி – குன்மம்**

சூரனாம் கால மிருத்தியோ டெட்டாம்
துறைலக்கி னாதியும் கூடிப்
பாரமாம் கல்லா கினுமிடி யேனும்

பட்டிறந் திடுவன்மற் றிண்ணம்
சேரவே யட்ட மாதிநீ சத்தில்
செறிந்துபன் னிரண்டிலா றெட்டில்
வீரமாம் கருங்கோள் நோக்கவே குன்மம்
வியாதியால் வியமடைந் திடுவன்

**விளக்கம்**

**1–8**ஆம் அதிபதிகள் காலமிருத்தியோடு சேர்ந்திருந்தால் பாரமான பெரிய கல்லடி படுவதாலும், இடி மின்னலாலும் இறப்பு நேரிடும். **8–**க்குரியது நீசம் பெற்றாலும், **6–8–12** ஆம் பாவங்களுக்கு இராகுவின் தொடர்பு ஏற்பட்டாலும் கடுமையான நீங்காத வயிற்று வலியினால் உயிர்துறப்பான்.

**கை கால் அடிபடுதல்**

அடைந்திடும் சன்மத் தாதிபன் ஏனும்
அட்டமத் தாதிபன் ஏனும்
மிடைந்திடும் குளிகன் தன்னுடன் கூடி
வியமெட்டா றிடத்தினில் மேவ
நடத்தகால் கரங்கள் பின்னமே பட்டு
நலிவனந் நோயினால் மடிவன்
தொடர்ந்த நல்லோர்கள் பரிவுடன் காணில்
சொல்கை காலூனமுற் றிருப்பன்

**விளக்கம்**

இலக்கினாதிபதி அல்லது **8–**க்குரியது குளிகனுடன் சேர்ந்து **6–8–12** களில் இருந்தால் நன்றாக நடந்த கால்களும், கைகளும் முடக்கமாகித் துன்புறுத்தும் கொடிய நோயினால் நலிந்து இறப்பான். மேற்சொல்லியவற்றை நல்லவை பார்ப்பின் கைகால்கள் ஊனமடைந்த நிலையில் வாழ்ந்திருப்பான்.

**இறப்பு**

**தன் ஊர் – தூரதேசம்**

வேண்டிடு நான்காம் அதிபதி யுடனும்
மேவுமெட் டாதிபன் தானும்
ஈண்டியே தனது வீட்டினில் பதியில்
இறப்பது தாதைவாழ் பதியில்
தூண்டியே வியத்தில் ஆறினில் இருக்கில்
தூரதே சத்தினில் இறப்பன்
நீண்டுங் காதளவு சென்றுகூர்யிலை
நிகர்த்திடும் கருங்கண் ஆரணங்கே

**விளக்கம்**

**4–8** க்குரியவை இணைந்து **4–**ஆம் அதிபதியின் வீட்டில் இருக்கச் சாதகன் தந்தை வசிக்கும் ஊரில் அல்லது வீட்டில் இறப்பான். இவை **6–12** களில் இருக்க தூர நாடுகளில் உயிரிழப்பான்.

**இறப்பு ஏற்படும் முறை**

மலைஉச்சி – விலங்கு

தனக்குமோ ரெட்டாம் அதிபதி உடனும்
தபனனும் குசனுமே கூடி
இனக்கதிர் குசனும் எட்டினில் இருக்க
இருவரும் எட்டிடம் பார்க்க
கனத்துயர் வெற்பில் ஏறிவீழ்ந் திறப்பன்
காணிவ ரொடுபுகர் கூடில்
சினத்தறு விலங்கு பூண்டுகொண்டிருந்தது
சீவனை விடுத்திடு வார்கள்

**விளக்கம்**

**8**ஆம் அதிபதியுடன் சூரியனும் செவ்வாயும் சேர்ந்து **8**இல் இருக்கவும், சூரியனும் செவ்வாயும் **8**ஆம் பாவத்தில் இருக்கவும், பார்க்கவும் மிக உயரமான மலைஉச்சிக்கு ஏறி அதிலிருந்து விழுந்து இறப்பான். மேற்சொன்ன சூரியன் செவ்வாயோடு சுக்கிரனும் கூடி இருக்க, கோபமடைந்த கொடிய விலங்குகளினால் தாக்கிப் பிடிபட்டிருந்த நிலையில் வருந்தி உயிர்விடுவான்.

**தன்கை – கிணறு**

வாருறை முலையாய் சனிமதி இருவர்
மருவிஅட் டமத்தினி லிருக்க
காரிசந் திரனெட் டதிபனைக் கூடக்
கண்டிடக் கிணற்றில் வீழ்ந்திறப்பன்
கூரிய செவ்வாய் சனிசசி மூவர்
கூடிமுன் போலவே இருக்கில்
பாரினில் தன்கை யாலுயிர் மாய்ப்பன்
பலர்களும் பழித்திடும் படியே

**விளக்கம்**

சனியும் சந்திரனும் **8**இல் இருந்தாலும், அல்லது **8**ஆம் அதிபதியோடு சேர்ந்தாலும், பார்த்தாலும் சாதகன் கிணற்றில் விழுந்து இறப்பான். செவ்வாய், சனி, சந்திரன் ஆகியவை கூடி **8** இல் இருந்தாலும், **8**ஆம் அதிபனைச் சேர்ந்தாலும் பார்த்தாலும் பலரும் கேவலமாகப் பேசும்படி தன்கையால் உயிரை அழித்துக்கொள்வான்.

### சிறையில் தற்கொலை

உரைத்திடும் பாவர் ஒன்பதில் ஏழில்
உரைந்திட அட்டமம் தன்னில்
நிரைதிரை யக்கா ணாதிபன் இருக்க
நீடிமிம் மூன்றுவீட் டினையும்
விரைந்திடு நல்லோர் பார்வையற் றிருக்க
விலங்குடன் இருந்தவன் தனது
கரத்தினால் சீவன் தனைவிடுத் திடுவன்
காணெனச் சொல்லுவர் கண்டீரே

**விளக்கம்**

**7–9**களில் பாவிகள் இருக்க, **8**ஆம் அதிபதி இருந்த அம்ச அதிபதி **8**இல் இருக்க இம்மூன்றும் நல்லவற்றின் பார்வை இல்லாது இருக்கக் குற்றவாளியாக விலங்குடன் இருக்கும் சாதகன் தன் கையாலேயே தன் உயிரை மாய்த்துக் கொள்வான்.

### பெண்களால் இறப்பு

கண்டலக் கினங்கள் கன்னியாய் அதனில்
கருதிடாப் பாவரும் இருக்க
எண்டிசை புகழ்மீ னத்தினில் பாவர்
இருந்திட அட்டமம் தன்னில்
மண்டிய பிறையும் சுங்கனும் இருக்கில்
மாதர்செய் வாதையால் மடிவன்
கெண்டையம் பயின்மா வடுமிடம் போல்கண்
கிஞ்சுகம் போலும் மென்மொழியாய்

**விளக்கம்**

இலக்கினம் கன்னியாகி அதில் பாவர் இருக்க, மீனத்திலும் பாவிகள் இருக்க, **8**இல் சந்திரனும் சுக்கிரனும் இருக்கத்தாய், மனைவி, பெண்கள் ஆகியோர் கொடுமையால் இறப்பான்.

### கிருமிகளால் இறப்பு

வசமுடன் எட்டில் கதிர்சனி செவ்வாய்
மருவவே லக்கினம் தன்னில்
இசைபுதன் தேய்ந்த பிறைகரு நாகம்
இருக்கின்மெய் புழுத்துடன் மடிவன்
புசபல காரி தேய்பிறை எட்டில்

பொருந்திடில் அவர்தம்மைச் செவ்வாய்
நிசமுடன் பார்க்கில் அரசனற் கிருமி
நிறைந்திடும் துயரினால் இறப்பன்

**விளக்கம்**

**8**இல் செவ்வாய், சனி, சூரியன் ஆகியவை இருக்க, **1**இல் புதன், தேய்பிறைச்சந்திரன், இராகு இருக்க, உடல் புழுத்து இறப்பார். சனி, தேய்பிறைச் சந்திரன் **8** இல் இருக்க, இவற்றைக் குருவும் செவ்வாயும் பார்க்கக் கிருமிகளால் காயங்கள் புழுத்துத் துன்பப்பட்டு இறப்பான்.

**தந்தைக்குக் கண்டம்**

ஓதும் ஐந்தொன் பானாதி
பதிகதி ருடனே கூட
ஓதிடும் காரி பார்க்க
உறும்பிதா விற்கு அரிட்டம்
ஓதும் ஐந்தொன் பானாதி
பதிகதி ருடனே காரி
ஓது சேயிவர் தாமூன்றில்
உறத்தந்தை யுடனே போமே

**விளக்கம்**

**5–9**க்குரியவை சூரியனுடன் சேர, அவற்றைச் சனி பார்க்க, தந்தைக்குக் கண்டம் ஏற்படும். **5–9**க்குரியவை சூரியன், சனி, செவ்வாய் ஆகியவற்றுடன் கூடி **3**இல் இருந்தால் தந்தைக்கு உடனே மரணம் ஏற்படும்.

**சில நாளில் இறப்பு**

கண்ட சனியும் கதிரோனும்
கதித்த வொன்பா னாதிபனும்
அண்டி பொருவீட் டினிலிருக்க
அய்யர்க் கரிட்டம் வரையொன்
மண்டி நோக்க ஐந்தாதி
மனையோன் உச்சம் ஆயிருக்க
மிண்டாய்ச் சிலநாள் இருந்தரிட்டம்
மேவு விடம்போல் விழிமானே

**விளக்கம்**

சனி, சூரியன், **9** ஆம் அதிபதி ஆகியவை சேர்ந்து இருந்தால் அவன் தந்தை மரணமடைவான். இவற்றைக் குரு பார்க்க, **5**ஆம் அதிபதி உச்சம் பெற இவன் பிறந்தபின் சில நாள் தந்தை இருந்து பின் இறப்பான்.

**பாக்கிய பலன்**

உறுமொன்ப தாமிடத்தோன் வெகுபலவானாகி
உற்றவிடத் ததிபதிகேந் திரத்தில்பர்க்கியவான்
பெறுந்தந்தை தனிலதிகன் கீர்த்திமான் அரசன்
பிரியமுறச் சஞ்சரிப்பான் பிரதாப சாலி
அறிவுறுபாக் கியாதிபிதுர் காரகனைக் கூடி
ஆறிலுறப் பிதாவுரைகேட் டருள்வான் ஒன்பான்
பிரியாமல் இருந்தநவாங் கிசத்தாதி பதியைப்
பிதுர்கார கன்பார்க்க குருபத்திப் பிரியன்

**விளக்கம்**

**9**–ஆம் அதிபதி மிகுந்த வலிமையுடையதாகவும், அது இருக்கும் வீட்டின் அதிபதி கேந்திரம் பெறவும் உள்ள சாதகன் செல்வ பாக்கியம் உள்ளவன். தந்தையைக் காட்டிலும் உயர்வான அந்தஸ்தும் புகழும் பெற்றவன். அரசர்கள் விரும்பும்படியான சிறப்புடன் வாழ்பவன். புகழுடையவன். **9**ஆம் அதிபதியும் சூரியனும் கூடி **6**இல் இருந்தால் தந்தை சொல் தவறாதவர். மேலும் **9**ஆம் அதிபதி இருக்கும் நவாம்ச ராசிக்கதிபதியைச் சூரியன் பார்க்கக் குரு பக்தியில் மிகுந்த விருப்பம் உடையவனாக இருப்பான்.

**பாக்கியம் வரும் காலம்**

வேண்டியதோர் ஒன்பதாம் அதிபதியும் குருவும்
விரும்பிகேந் திரத்திரிகோ ணங்களிலே மேவில்
ஆண்டகையே பாக்கியவான் இவரிருவ ருடனும்
அன்புடனொன் பானிடத்தில் அணுகினுமிவ் மூவர்
பூண்டுவரு மகாதிசையில் லாபாதிபுசிப்பிலேதான்
பூரணபாக் கியம்சேரும் ஏழாம திபனைத்
தீண்டியலா பாதியுற வாய்க்கூடின் நல்லோர்
செறியுமனை யுறிலவர்ள் திசையில்பாக்கியமே

**விளக்கம்**

**9**ஆம் அதிபதியும், குருவும் சேர்ந்து கேந்திர கோணம் பெற்று இருந்தால் செல்வம் பெற்ற பாக்கியவான். **9**ஆம் அதிபதி, குரு, **9**இல் உள்ளது ஆகிய

மூவருடைய தசாவில் 11ஆம் வீட்டோன் புத்தியில் நிறைந்த செல்வம் வந்து சேரும். 7ஆம் இராசி அதிபதியை 11ஆம் அதிபதி உறவாகக் கூடி நல்லவற்றின் வீடுகளில் இருக்க அவர்கள் தசாவில் பலனையும் பாக்கியத்தையும் கொடுப்பர்.

**மனைவி வழி செல்வம்**

எடுத்த பத்தாம் அதிபதி யேழிறை
கடுத்த மித்திர ராகிப் பலனுடன்
கொடுத்த உத்தமர் வீட்டினில் சூழ்ந்திடப்
படைத்த பாரியி னால்வரும் பாக்கியம்

**விளக்கம்**

10–7ஆம் அதிபதிகள் நட்புடன் சேர்ந்து வலுப்பெற்று நல்லோர் வீட்டில் இருந்தால் சாதகனுக்கு அவனது மனைவியினால் செல்வம் வந்து சேரும்.

**அயல்நாடு வழி செல்வம்**

கண்ட பத்தா மாதிபதி
கருதும் உச்சர் வீட்டிலிருந்து
தண்டிப் பத்தாம் இடம்பார்க்கில்
அவனுக் குண்டாம் பூமிசெல்வம்
மிண்டி நீசர் சத்துருக்கள்
வீட்டில் இருந்தே மிக நோக்க
அண்டும் தூர நேசத்து
அன்னிய ராஜம் அயிஸ்விரியம்

**விளக்கம்**

10க்குரியது உச்சம் பெற்று, 10ஆம் வீட்டைப் பார்க்கப் பூமியில் உண்டான செல்வமனைத்தும் பெறுவான். நீச, பகை

**நற்கருமம்**

பத்தாம் இடத்தில் அட்டமத்தோன்
பாவர் உடனே கூடிநிற்கப்
பத்தா மாதி பலம்பெறவே
பாவர் பார்க்கத் துன்கன்மம்
பத்தாம் அதிபன் பலவானாய்ச்
சுபக்கோ ளுடனும் பரிந்தேழில்
ஒத்த நான்கில் சன்மத்தில்
உறநற் கருமம் உளனாவன்

**விளக்கம்**

8க்குரியது தீயவற்றுடன் 10இல் இருந்து, 10ஆம் அதிபதி வலுப்பெற்றுத் தீயவை வீட்டில் இருந்து 10ஆம் வீட்டைப் பார்த்தால் தூர நாடுகளில் இருந்தும், அந்நியராலும் மிகுந்த செல்வத்தினைப் பெறுவான்.

**தீர்த்தயாத்திரை – தவம் – தொழில்**

அவன் ஞானி சனிநாலில்
அமர்ந்தால் அந்தச் சனிபத்தில்
மேவில் தீர்த்த யாத்திரையை
விரும்பித் தவமே செய்திடுவன்
தாவும் சன்மா திபன்பத்தில்
தரிக்கில் கன்மம் உளன்பத்தில்
கோவும் கன்ம காரகனும்
பலமேல் கன்மம் குறைவில்லான்

**விளக்கம்**

சனி 4இல் இருந்தால் ஞானியாவான். சனி 10இல் இருந்தால் பல திருத்தங்களுக்குச் செல்ல விரும்புவான். தவம் செய்யவும் ஆசைப்படுவான். இலக்கினாதிபதி 10இல் இருந்தால் செய்தொழிலில் கருத்துடையவன். 10இல் குரு இருக்க, 10க்கு அதிபதி வலுப்பெற எந்த வேலையைச் செய்தாலும் அதனை ஒழுங்காகச் செய்து முடிப்பான்.

**ஞானி**

திரமுறு ஒன்பான் அதிபதி குருவாய்
செய்ய ஒன்பதில் குருவுறினும்
வரமுறும் பலர்கள் இடத்துப தேச
வசனமும் வித்தையும் பெறுவான்
உரமுடன் ஒன்பான் அதிபதி மரபில்
உறையுப தேசமும் பெறுவான்
பரமுறும் இவர்கள் உச்சகேந் திரத்தில்
பற்றிடில் ஞானமே பலிக்கும்

**விளக்கம்**

9க்குரியது குருவாகி 9இல் இருந்தால் பல மகான்களிடத்து உபதேசமும் வித்தையும் பெறுவான். 9க்குடையது எதுவோ அதுவாலேயே உபதேசத்தைச் சாதகன் பெறுவான். குரு உச்சம் பெற்றுக் சேந்திரமும் பெறுமானால் ஞானமார்க்கம் சாதகனுக்குப் பலிதமாகும்.

**சந்நியாசி**

தேசுறுபத் தாமாதி நான்கிடத்தி லிருக்கச்
செப்பியநா லாதிபதி திரிகோணத் தெய்தப்
பூசலுறும் பாம்பல்லா தொருநான்கு கிரகம்

பொருந்திப்பத் தினிலிருக்கும் போதுசந்தி யாசியாம்
ஓசைகொள்நான் காம்வீடு முதல்பத்தாம் மனைமட்
டோரேழு வீட்டினுங்கோன் ஒழியாமல் இருக்கில்
காசினியில் வாழ்பவர்க்குத் தேசிகனேயாகிக்
கதித்திடுசந் நியாசியென வேகருதல் வேண்டும்

**விளக்கம்**

**10**க்குரியது **4**இல், **4**க்குரியது **1–5–9**களில், இராகு கேதுக்கள் நீங்கிய கோள்கள் இணைந்து **10**இல் இருப்பின் சந்நியாசி யோகம். **4**ஆம் வீடு முதல் **10**ஆம் வீடு வரை கோள்கள் இடைவிடாது இருக்க, உலக மக்களுக்குக் குருவாகி, புகழ் பெருகும் நல்ல சந்நியாசியாவான்.

**ஆதாயம்**

வியமா றெட்டா திபன்கூடி
மேவி னாலும் தனியேனும்
நயமாய்ப் பாவத் துறில்பாவர்
நண்ணில் பார்க்கில் லாபமில்லை
சுயலா பாதி உச்சனுமாய்
சுபர்மத் தியிலே தானிருக்கில்
சுயலா பத்தில் சுபரிருக்கச்
சாரும் லாபம் திரளாக

**விளக்கம்**

**11**ஆம் பாவத்தில் **6–8–12**ஆம் அதிபதிகள் சேர்ந்து இருந்தாலும் தனியாக இருந்தாலும் தீயவை இருந்தாலும் தீயவை பார்த்தாலும் சாதகனுக்குத் தான் செய்யும் தொழிலால் சிறிதும் இலாபம் இருக்காது. **11**க்குரியது உச்சமாகிச் சுபர்களுக்கு இடையே இருப்பினும் **11–**இல் சுபர் இருப்பினும் எந்த ஒன்றிலும் அதிகப்படியான இலாபம் இருக்கும்.

**மிகுந்த ஆதாயம்**

திரலா பாதி உச்சத்தில்
செறிந்து லாபத் தினிலிருக்க
மரவாய் சன்மா திபன்பலமாய்
மருவ லாபம் வரும்சுகிப்பன்
விரலாய் லாபா திபனிருந்த
வீட்டுக் கிறைகேந் திரம்மேவ
உறவோர் அவனைக் கூடக்கண்
ணுறலா பங்கள் உண்டாமே

**விளக்கம்**

**11**ஆம் அதிபதி உச்சமாக **11**இல் இருந்தாலும், இலக்கினாதிபதி வலுப்பெற்றாலும் இலாபம் வரும். சாதகன் அதனை அனுபவிப்பான். **11**ஆம் அதிபதி இருக்கும் வீட்டுக்குடையது கேந்திரத்தில்இருக்க, அதனை உறவான நட்புக் கோள்கள் பார்த்தாலும், கூடினாலும் சாதகனுக்குப் பலவிதமான ஆதாயங்கள் உண்டாகும்.

**ஆதாயம் வரும் திசை**

உண்டாம் லாபா திபனிருந்த
திக்கில் பலன்கள் உரைசெய்வாய்
தண்டா மரைநண் பன்கிழக்கு
தரும்சுக் கிரற்கு அக்கினிமூலை
கண்டாய் குசன்தெற் கராமூலை
காரி மேற்கு சசிவாயு
கொண்டே இருக்கும் புதன்வடக்கு
குருஈ சானம் கொண்டுவரும்

**விளக்கம்**

**11**ஆம் அதிபதி இருக்கும் திசையில் இலாபம் உண்டாகும். இலாபாதிபன் சூரியனானால் கிழக்கும், சுக்கிரனானால் தென்கிழக்கும், செவ்வாயாகில் தெற்கும், தென்மேற்கும், சனிக்கு மேற்கும், சந்திரனுக்கு வடமேற்கும், புதனுக்கு வடக்கும், குருவுக்கு வடகிழக்கும் ஆதாயம் தரும் திசைகளாம்.

**படுக்கை சுகம்**

வார்மைசேர் வியத்தா னத்தின்
மன்னவன் சுபக்கோ ளாகிச்
சீர்மைசேர் கேந்தி ரத்து
முச்சத்தும் செறிந்து நிற்கில்
யார்மைசேர் வியத்தில் நல்லோர்
பரிந்துறில் பார்க்கில் மேலாம்
கூர்மைசேர் பரியங் கத்தில்
குலவுபூச் சரங்கள் சூழ

**விளக்கம்**

**12**க்கு அதிபதி நற்கோளாகி உச்சம், கேந்திரம் பெற, **12**இல் சுபர் இருக்க, பார்க்கப் பூச்சரங்களால் அலங்கரிக்கப்பட்ட சயனக் கட்டிலில் உறங்கும் சுகத்தினை, தகுதியினைப் பெறுவான்.

**படுக்கை சுகமின்மை**

வல்லதோர் வியத்தா னாதி
மற்றுமெட் டாறில் நிற்க
சொல்லிய சனியும் பாம்பும்
சூழ்ந்துபன் னிரண்டில் நிற்க
நல்லவர் பார்வை சற்றும்
நயத்திடா திருக்கில் பாரில்
புல்லது மெத்தை யாக
இருவிழி துயில்வன் போற்றே

**விளக்கம்**

**12**அம் அதிபதி **6–8**களில் ஒன்றில் இருக்க, சனியும் இராகுவும் சேர்ந்து **12**இல் இருக்க, நற்கோள்களின் பார்வை இல்லாது இருக்கப் பிறந்தவன். தரையில் உள்ள புல்லை மெத்தையாக நினைத்துத் தூங்குபவன்.

**செல்வ இழப்பு**

கோல லாபக் குரிசில் வியத்துற
மேல வியத்தனும் மேவு தனத்துற
ஆலு மேதனத் தாதி பலமறச்
சால மன்னர் தனங்கொள்வர் தண்டமாய்

**விளக்கம்**

11ஆம் அதிபதி 12இலும், 12ஆம் அதிபதி 2இலும், 2ஆம் அதிபதி வலுவற்றும் இருப்பின் சாதகனுடைய செல்வங்கள் அரசால் பறிமுதல் செய்யப்படும்.

**தர்ம வகையில் செலவு**

ஏற்க வேபன் னிரண்டில்
இரணியன் வெள்ளி தூய
தீர்க்க சந்திரன் பொல்லாரைச்
சேராத புதன்இந் நால்வர்
மார்க்கமாய்க் கூடில் தன்ம
வகையினால் செலவாம் என்று
ஏற்கநாற் சுருதி வல்ல
வேதியர் ஓதி னாரே

**விளக்கம்**

12ஆம் பாவத்தில் குரு, சுக்கிரன், வளர்பிறைச் சந்திரன், பாவிகளுடன் சேராத புதன் இந்நான்கும் குறையில்லாமல் கூடினால் சாதகன் தரும காரியங்களுக்குத் தன் பொருளைச் செலவழிப்பான்.

**பூமியில் புதைப்பான்**

ஓதிய பன்னி ரண்டாம்
அதிபனோ டுற்ற பாவர்
நீதிய நல்லோர் வீட்டில்
நிற்கினில் லோரைக் கூடில்
தீதறப் பலவா னாகத்
திகழ்வியத் ததிபன் ரெண்டில்
போதவே செம்பொன் தேடிப்
புதைப்பன் மற்றொரு வர்க்கீயான்

**விளக்கம்**

12ஆம் அதிபதியுடன் பாவிகள் கூடிச் சுபர் வீட்டில் இருந்தாலும் அல்லது சுபர்களுடன் கூடினாலும், குறைவின்றி வலுவாய் இருக்கும் 12க்குரியது 2ல் இருந்தாலும் சாதகன் தான் சம்பாதித்த பொன்னையும் பொருளையும் ஒருவருக்கும் கொடுக்காமல் பூமியில் புதைத்துவைப்பான்.

**கடன் கொடுத்து இழப்பு**

ஆனதோர் பாக்கி யாதி
தனாதி ஐந்தாம் இடத்தும்
ஊனமில் ஐந்தாம் ஆதி
ஒன்பதில் இரண்டில் நிற்க
தானமிம் மூன்று பேரும்
லக்கினம் தன்னில் நிற்க
ஈனமில் அவன்பொன் எல்லாம்
கடன்கொடுத் திழந்து போவான்

**விளக்கம்**

**9–2**ஆம் அதிபதிகள் **5**இலும், **5**ஆம் அதிபதி **2–9**களிலும் இருக்க அல்லது **2–5–9**ஆம் அதிபதிகள் கூடி இலக்கினத்தில் இருக்கத் தன் பொருளைப் பிறருக்குக் கடனாகக் கொடுத்துத் திரும்பப் பெறாது நட்டமடைவான்.

குறிப்பு

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

குறிப்பு

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................

............................................................................................